தமிழரசு

16-3-1986 75 காசு



போப்பாண்டவர் இரண்டாவது ஜான்பால் அவர்களின் வருகையை முன்னிட்டு சென்னையில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்ததற்காக போப்பாண்டவர் அவர்கள் அளித்த தங்கப் பதக்கத்தை ஆர்ச் பிஷப் அருளப்பா அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் 4.3.86 அன்று வழங்கினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்

கலைக்கோயில் கண்ட ருக்மிணி தேவி

சிறந்த பரத நாட்டிய மேதையும் சென்னையில் உள்ள கலாசேத்ரா பள்ளியின் நிறுவனருமான ருக்மிணி அருண்டேல் அவர்கள் 24.2.86 அன்று மறைவெய்தினார்.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி., மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ருக்மிணி தேவி அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

1904ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29ஆம் நாள் மதுரையில் பிறந்த ருக்மிணிதேவி இளம் வயதிலேயே மூடநம்பிக்கைகளை எதிர்த்து வந்தார். தனது 16 வது வயதில் டாக்டர் அருண்டேல் என்னும் ஆங்கிலேயரைத் திரு மணம் செய்து கொண்டார். இவர்களது திருமணம் சமுதாயத்தில் பெரும் பரபரப்பை உருவாக்கியது.

நடனம் கற்றுக்கொடுப்பதற்காக சென்னை அடையாற்றில் ஒரு பள்ளியை 1936ல் தொடங்கினார். கலாசேத்ரா என்று பெயரும் சூட்டினார். பலருக்கும் நாட்டியக் கலையைக் கற்றுத் தந்தார்.

கலாசேத்ரா மாணவிகளால் 'அத்தை' என்று அன்பாக அழைக்கப் பெற்ற இவர் இந்திய அரசின் பத்மபூஷண் விருது பெற்றுள்ளார். இவரது சேவைக்காக அமெரிக்கப் பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. விலங்குகளிடம் மிகுந்த பற்றுக் கொண்ட இவர், பிராணிகள் நலச் சங்கத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். பிராணி மித்ரா என்ற பட்டத்தையும் 1968ல் பெற்றிருக்கிறார்.

1952ல் இந்திய நாடாளுமன்ற மேலவையின் நியமன உறுப்பினராக நியமிக்கப் பெற்றார். 1956ல் மறுபடியும் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பெற்றார்.

ருக்மிணி தேவியின் மறைவுச் செய்தியை அறிந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :

''இந்திய கலாச்சாரத்தின் வடிவமாகவும், அனைத்து நாடுகளுக்கும் பெரியம்மாவாகவும் விளங்கியவர் ருக்மிணி. அன்பு, பாசத்தின் அடிப்படையில் ஒரு கலாச்சார சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தியவர் அவர்.''

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :

''ருக்மிணி அருண்டேல் இசைக் கலையையும் நாட்டியக் கலையையும் பரப்புவதற்காகத் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டார். ஒப்பற்ற கலைஞர்; அறவழியைப் போற்றியவர். சாஸ்திரீய நடனத்துக்கும் இசைக்கும் புத்துயிர் அளித்தவர்''.

மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது :

''ருக்மிணி நிறுவிய கலாசேத்ரா, சர்வ தேசக் கலைக் கோயிலாக நிலைபெற்று நிற்கிறது. இந்தக் கலைக்கோயில், ருக்மிணியின் ஆற்றல்மிக்க அரும்பணியின் தனித்துவ அடையாளச் சின்னம்''.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுத்துள்ள இரங்கற் செய்தி வருமாறு:

''ருக்மிணி தேவி பரதநாட்டியக் கலையை அகில உலகமும் போற்றும்படி பரப்பினார். அதில் வெற்றியும் கண்டார். அவர் நம்மை விட்டுச் சென்றாலும் பல நாட்டியக் கலைஞர்களை உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கிறார். நாட்டியக் கலைக்காக அவர் செய்த சேவைகளை அவர் நிறுவிய கலாசேத்ரா நிறுவனம் தொடர்ந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் அவருடைய நினைவுச் சின்னம் என்றும் நிலைத்து நிற்கும்''.

முதல் அட்டை சொல்லும் செய்தி

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்''

என்ற முதுமொழிக்கொப்ப உழவுத் தொழில் தமிழக மக்கள் வாழ்வில் ஆதிகாலந்தொட்டே பின்னிப் பிணைந்து இருக்கின்றது. தமிழக மக்கள் தொகையில் முக்கால் பங்கினர், உழவினையும் அதனைச் சார்ந்த பிற தொழில்களையுமே நம்பி வாழ்கின்றனர். நமது பொருளாதாரச் சீர்மைக்கும் வேளாண்மையே முக்கிய அங்கம் வகிக்கிறது. இத்தொழிலில் ஏற்படும் சிறு ஏற்றத் தாழ்வு கூட சமுதாயம் முழுவதையும் உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யும். இக்கருத்தை மனத்தில் கொண்டு தான் புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி உழவர் வாழ்வை உயர்வடையச் செய்கிறது.

பசுமைப் புரட்சியில் முன்னோடி தமிழகம்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
டாக்டர் கா. காளிமுத்து

தமிழகத்தில் கரிசலும் உண்டு; களர் நிலமும் உண்டு; மணற்பாங்கான நிலமும் உண்டு; மலைப் பகுதியும் உண்டு; கடல் பகுதியும் உண்டு; நம்முடைய மாநிலத்திலே இந்தப் பல்வேறு மண்வகைகளுக்கேற்ப அங்குள்ள நீர்நிலைகளுக்கேற்ப எத்தகைய பயிர்களைப் பயிர் செய்திட்டால் அதிகப் பலன் கிடைத்திடுமோ அப் பயிர்களைத் தெரிந்தெடுத்து, அப் பயிர்களுக்கான புதிய இரகங்களை ஆய்வுகளின் வழியாகத் தெரிந்தெடுத்து மக்கள் மத்தியிலே பரப்பி, அந்தப் புதிய இரகங்களிலிருந்து முழுப் பயனையும் பெற்றிட வேண்டிய உத்திகளையும் அவ்வப்பொழுது சொல்லித் தந்து, அந்தப் பணிகளிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகள் நல்ல முறையில் வேளாண்மை செய்ய வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி அவர்களுக்குத் தகுந்த விலையும் கிடைக்கச் செய்து வருகிறது தமிழக அரசு.

தமிழகத்தில் பயிர்வகைகள் பலவிருந்தாலும் நெற்பயிரே நமது மாநிலத்தில் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது. சுமாராக ஆண்டு ஒன்றிற்கு 67 இலட்சம் ஏக்கரிலே நெல் பயிர் செய்து வருகின்றோம். புதிய இரகங்களைப் புகுத்தி அவற்றிற்கு வேண்டிய உரங்களைத் தந்து, காலத்தே அவற்றைப் பூச்சி பூஞ்சாளங்களிலிருந்து காத்துத் தருவதால் இந்தியத் துணைக் கண்டத்திலே இரண்டாவது இடத்தை—பயிர் விளைச்சலில் குறிப்பாக நெல் விளைச்சலில் நாம் அடைந்திருக்கின்றோம். எக்டேருக்கு 2240 கிலோ அரிசி என்று நம் வேளாண் மக்கள் இன்று உற்பத்தி செய்து வருகின்றார்கள். இந்த அளவையும்கூட இன்னும் உயர்த்துவதற்காகப் புதிதாகத் தமிழக அரசு எக்டேருக்கு 5 மெட்ரிக் டன் என்ற புதிய திட்டத்தைப் புகுத்தி, கடந்த இரண்டு ஆண்டுகளாக முனைப்புடன் பணியாற்றிக் கொண்டு வருகின்றது.

அமோக விளைச்சல் ரகங்கள், அரிய தொழில் நுட்பங்கள், காலத்தே வழங்கிய இடுபொருட்கள், அரசு எடுத்துக் கொண்ட போர்க்கால நடவடிக்கைகள், உழவரின் சலியாத உழைப்பு ஆகியவைகளினால் இன்று எக்டேருக்கு 10 டன்களுக்கு மேலும் விளைச்சல் கிடைத்துள்ளது. ஐம்பது சதவிகித உழவர்கள் எக்டேருக்கு 5 டன்களும் அதற்கு மேலும் விளைச்சல் பெறவுள்ளார்கள்.

கரும்பு தமிழகத்திலே சுமார் 3.5 இலட்சம் ஏக்கராவிலே பயிர் செய்யப்பட்டு வருகின்றது. உலகத்திலேயே அதிக மகசூல் கரும்பில் கண்ட மாநிலம் நமது மாநிலம். ஒரு எக்டேருக்கு 100 மெட்ரிக் டன் என்ற அளவில் நமது விவசாயப் பெருமக்கள் கரும்பை உற்பத்தி செய்து வருகின்றார்கள். இத்தகைய வியத்தகு சாதனையை நிகழ்த்தியுள்ள விவசாயிகளுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

தாமதமாகத் தொடங்கிய தென்மேற்குப் பருவமழை காரணமாக மானாவாரி சிறு தானியங்கள் விதைப்பு தாமதப்பட்டாலும், இயல்பான பரப்பு பயிராகியது. ஜனவரித் திங்களில் பெய்த மழையின் காரணமாக இறவை சிறு தானியங்கள் சாகுபடி இயல்பாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு 18 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்கள் பயிரிடப்பட்டு 20 இலட்சம்

டன்கள் உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. பயறு வகைகளின் சாகுபடிக்கான உத்திகளைக் கையாண்டதில் நல்ல பலன் கிட்டியுள்ளது. இவ்வாண்டு 10.10 இலட்சம் எக்டேரில் பயறு வகைகள் பயிராகி, 4 இலட்சம் டன்கள் உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தி 2.80 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. அதன் மூலம் 6 இலட்சம் பொதிகள் பஞ்சு உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. மானாவாரி மற்றும் இறவைச் சாகுபடிக்கு ஏற்ற 'எல்ஆர்ஏ.5166' என்ற இரகப் பருத்தி சுமார் 1.20 இலட்சம் எக்டேரில் பயிரானதுதான் இவ்வதிக உற்பத்திக்குக் காரணமாகும்.

கோடைச் சாகுபடியில் 2.75 இலட்சம் எக்டேரில் நெல், 2.76 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்கள் 3.01 இலட்சம் எக்டேரில் பயறு வகைகள் மற்றும் 79 ஆயிரம் எக்டேரில் பருத்தி பயிரிடத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான இடுபொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உற்பத்தி ஊக்கமளிப்பு

தஞ்சை மாவட்டம் முழுவதும் மற்றும் திருச்சி, தென் ஆர்க்காடு மற்றும் புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகள் அடங்கிய காவிரி ஆற்றுப் படுகை விவசாயிகளுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் விற்கப்படும் ஒரு குவிண்டால் நெல்லிற்கு ரூ. 35 பெறுமான உரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்காக நிதி ஒதுக்கீடு ரூ. 10 கோடியாகும். இது அகில இந்திய ரீதியில் செயல்படும் ஓர் புதிய திட்டமும், உழவர்களால் விரும்பி வரவேற்கப்படும் திட்டமும் ஆகும்.

மைய அரசு உதவியுடன் சிறு மற்றும் குறு உழவர்களுக்குச் சென்ற ஆண்டு சுமார் 1 கோடி ரூபாய் செலவில் சுமார் 6 கோடி பழ மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இது அகில இந்திய அளவில் பாராட்டப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தெரிந்தெடுத்த விதைகளை மக்கள் மத்தியிலே விரைவாகப் பரப்புவதற்காக 45 விதை அபிவிருத்தி நிலையங்கள் (State Seeds Farms) அமைத்திருக்கின்றோம். இந்த அரசுப் பண்ணைகளிலே விதைகளை அதிகப்படுத்தி மீண்டும் நல்ல தெரிந்தெடுத்த விவசாயிகளுக்கு வழங்கி அவர்கள் நிலத்திலே மேலும் அதிகமாக நல்ல விதைகளைத் தயார் செய்து, அந்த விதைகளை விதை சுத்திகரிப்பு நிலையங்களில் பதப்படுத்தி, விதைச் சான்றளிப்புத் துறை மூலமாகச் சான்றிதழ் பெற்று அதிக அளவிலே மக்களுக்கு வேளாண் டெபோக்கள் மூலமாக வழங்கிவருகின்றோம். ஆண்டொன்றுக்குச் சுமார் 40,000 டன் சுத்தமான, தரமான சான்றிதழ் பெற்றவிதையை வழங்குகின்ற ஒரே மாநிலம் இந்த இந்தியத் துணைக்கண்டத்திலே தமிழகமே என்று சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படுகின்றேன். அதேபோல தரமான பழக்கன்றுகள், காய்கறி விதைகள் வழங்குவதற்காகத் தமிழக அரசு 54 தோட்டக்கலைப் பண்ணைகள் அமைத்து அவற்றின் மூலமாக ஆண்டொன்றிற்கு 6 மெட்ரிக் டன் காய்கறி விதைகளையும், 30 இலட்சம் பழக்கன்றுகளையும் வழங்கிக் கொண்டு வருகின்றது.

எண்ணெய்வித்து:

தானிய உற்பத்தியில் தன்னிறைவுகண்ட தமிழகம் எண்ணெய் வித்திலும் தன்னிறைவு

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017

குரோதன - பங்குனி 2

மலர் : 16 இதழ் : 18

16-3-1986

அடைந்திட பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு 15.14 இலட்சம் எக்டேரில் எண்ணெய்வித்து பயிர் செய்து 15.75 இலட்சம் டன்கள் உற்பத்தியை அடைய உள்ளோம். இதற்காக கருவித்துப் பண்ணை, ஆதார வித்துப் பண்ணை அமைத்தல் - சோயா மொச்சை தீவிரச் சாகுபடித் திட்டம் - எள் மற்றும் ஆமணக்கு அபிவிருத்தித் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு 36 இலட்சம் உயர் விளைச்சல் தரும் தென்னை நாற்றுக்கள் வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

வேளாண்மை விற்பனை:

வேளாண்மை விளை பொருட்களுக்கு நல்ல விலை பெற்றுத் தரும் நோக்கத்துடன் 264 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு வேளாண் விளை பொருட்கள் வரத்துக்கள் 5,18,680 டன்கள். அதன் மூலம் வருமானம் ரூ. 4.50 கோடியாகும். மேலும் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் உணவுப் பொருட்களுக்குத் தமிழகமெங்கும் உள்ள 36 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் மூலம் தரம் பிரிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டு சுமார் 45,000 டன்கள் உணவுப் பண்டம் மற்றும் பருத்தி ரகங்கள் தரம் பிரிக்கப்பட்டன.

பழைய நீர்நிர்வாக முறைகளை மாற்றி தற்போதைய தேவைகளுக்கேற்பப் புதிய முறைகளைப் புகுத்திட வேண்டும் என்பதற்காக ஆற்றுநீர்ப்பாசனப் பகுதிகளிலும் கூட புதிய நீர்நிர்வாக முறைகளை இப்பொழுது நாம் அறிமுகப்படுத்திக்கொண்டு வருகிறோம். வைகை ஆற்றுப்பாசனப் பகுதியிலே உலக வங்கியின் துணையுடன் ஒரு புதிய திட்டத்தை நீர் நிர்வாகத்திற்காக 'வைகைச் சீரமைப்பு' என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டு வருகின்றோம். அதேபோல Lower Bhavani Project, Cauveri Project, PAP Project இவற்றிலும்கூட நீர்நிர்வாகத்திற்காகப் புதிய திட்டங்களை அமைத்திருக்கின்றோம். குளங்களை நவீனப்படுத்துவதற்காக 'E.E.C.' திட்டத்தில் பணம்பெற்று குளங்களின் தண்ணீர்த் தேக்கத்தை அதிகப்படுத்துவதற்காகவும், தேங்கிய நீரை நல்லமுறையில் பயன்படுத்துவதற்காகவும் பணிகளைத் துவக்கியிருக்கிறோம். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காகப் புதிய முறைகளான சொட்டு மற்றும் சுழல் நீர்ப்பாசனம் என்ற நவீன முறைகளையும் மக்கள் மத்தியில் பரவலாகப் புகுத்திக் கொண்டு வருகின்றோம். இந்தப் புதிய முறைகளை மக்கள் கடைப்பிடிப்பதற்காக வேண்டிய மானியங்களையும் கொடுத்துக்கொண்டு வருகின்றோம்.

இந்த ஆண்டில் 7,000 எக்டேர் பரப்பளவு நிலத்தைச் சமன் செய்யவும், 18,800 எக்டேர் பரப்பில் இயந்திரங்களைக் கொண்டு பயிரிடவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் 4,850 குழாய்க்கிணறுகள், 2,920 வடிமுனைக்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 2,433 கிணறுகளில் துளையிடவும், 3,010 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டும் வருகின்றன.

சமீபத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தினால் செங்கை, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு போன்ற மாவட்டங்களில் பல விளைநிலங்கள் மணலால் மூடப்பட்டுப் பாழ் நிலமாயின. தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளைப்பாங்குடன் நிறைவேற்றியது. சுமார் ரூ. 20 இலட்சம் செலவில் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 1,500 மற்ற உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 750 மானியமாக வழங்கப்பட்டது. செங்கை மாவட்டத்தில் சுமார் 300 ஏக்கரிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சுமார் 500 ஏக்கரிலும் மணல் மூடப்பட்ட விளைநிலங்களில் மணல் அகற்றும் பணி செயல்படுத்தப்பட்டு மிகக் குறைந்த காலத்திலேயே முடிக்கப்பட்டது. இதனால் இந்நிலங்களில் அடுத்த பருவத்திலேயே ப யிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பின்தங்கிய பகுதிகளாகிய வறட்சி பாதிக்கின்ற பகுதிகளுக்கு 'DPAP' என்ற திட்டத்தையும், மலை வாழ் மக்களுக்கு Hill Arra Development என்ற திட்டத்தையும் தமிழக அரசு செயலாற்றிக் கொண்டு வருகின்றது. இவ்வாறு வளரும் தமிழகத்தின் தேவைக்கேற்ப பல பணிகளைச் செய்வதற்காக அரசு வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, எண்ணெய் வித்துத் துறை, விதைசான்றளிப்புத் துறை, வேளாண்மை விற்பனைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை என்று பல பிரிவுகளை அமைத்துப்பணிகளைத் திறம்படச் செய்ய வேண்டிய நிர்வாக இயந்திரத்தை அமைத்திருக்கின்றது.

கடந்த ஆண்டில் வேளாண்மைக்காக ஒரு புதிய கல்லூரியையும், இந்த ஆண்டு கால்நடைக்காக ஒரு புதிய கல்லூரியையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைத்திருக்கின்றது.

இவ்வாறு தமிழகத்தின் தேவையையறிந்து, அந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு எத்தகைய பணிகளைத் துவங்கிட வேண்டும் என்று பணிகளைத்துவக்கி, அந்தப் பணிகளுக்கு வேண்டிய பணியாளர்களை அமர்த்தி, அந்தப் பணிகளைத் திறம்பட வேளாண் மக்கள் செய்திட வேண்டிய உறுதுணைகளைக் காலத்தே வழங்கி, அவர்களுடைய உழைப்பின் பலனாகக் கிடைக்கின்ற விளைபொருளுக்குத் தகுந்த விலையைக் கிடைக்கச் செய்து, தமிழகத்தின் வேளாண்மை தலை சிறந்த வேளாண்மையாகத் திகழ, தமிழக அரசு இன்றும் என்றும் தொடர்ந்து பணியாற்றும். ●

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள்

தமிழ்நாட்டில் 12 ஆயிரத்து 610 ஊராட்சிகளும், 382 ஊராட்சி ஒன்றியங்களும் 635 பேரூராட்சிகளும், 98 நகராட்சிகளும் இருக்கின்றன.

1969ஆம் ஆண்டு நகராட்சிகளுக்குத்தேர்தல்நடைபெற்றது. அதற்குப்பிறகு1970 ஆம் ஆண்டு ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், உள்ளாட்சித் தேர்தல்களில் 18 வயதடைந்திருந்தாலே வாக்களிக்கலாம் என்றும், ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சித் தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் ஆணை வழங்கினார். அதற்குப் பிறகு தமிழகமெங்கும் 23.2.86 அன்று உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்

கும் என அறிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 18 வயது நிரம்பிய வாக்காளர்களையும் சேர்த்து எண்ணிக்கை 2,55,77,260ஆகும்.

நகராட்சி ஊராட்சி உறுப்பினர்களின் பதவிக்காலம் 4 ஆண்டுகளாக இருந்தது 3 ஆண்டுக் காலமாகக் குறைக்கப்பட்டது.

இதற்கான தேர்தல் 23.2.86 ஞாயிற்றுக்கிழமை என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு 17.1.86 அன்று அரசு மூலம் வெளியிடப்பட்டது.

அந்த அறிவிப்புத் தெரிவித்த பிற விவரங்கள் வருமாறு:

வேட்பு மனு தாக்கல்- ஜனவரி 23, 24, 27.

வேட்பு மனு பரிசீலனை- 28.1.86.

வேட்பு மனு திரும்பப் பெறல்-31.1.86 மாலை 3 மணி வரை.

வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியீடு : 31.1.86 மாலை 5 மணி.

நகராட்சிகளின் வாக்கு எண்ணிக்கை-24.2.86.

ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நகரப் பஞ்சாயத்துகளுக்கும் வாக்கு எண்ணிகை-25.2.86.

கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர் தேர்தல் பற்றித் தனிப்படக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதில்-10.2.86 காலை 10 மணி முதல் 1 மணி வரை வேட்பு மனு தாக்கல் என்றும், அன்று 1 மணி முதலே அம் மனுக்கள் பரிசீலிக்கப்படும் என்றும், வேட்பாளர் இறுதிப்பட்டியல் 11.2.86 மாலை வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. கிராமப் பஞ்சாயத்துகளின் வாக்கு எண்ணிக்கை நாள் 25.2.86 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தேர்தலுக்காக 9 கோடி வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டன. 2 இலட்சத்து 10 ஆயிரம் ஓட்டுப் பெட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்தத் தேர்தலில் தமிழ்நாடு முழுமைக்குமாகப் பல்வேறு கட்சிகளின் சார்பிலும், சுயேச்சையாகவும் 98 நகராட்சித் தலைவர் பதவிக்காக 512 பேர் போட்டியிட்டார்கள். 382 ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர் பதவிக்காக 1,439 பேர் போட்டியிட்டனர். 635 நகர பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கு 2,531 பேர் போட்டியிட்டனர்.

நகர பஞ்சாயத்தில் மொத்தம் 9,065 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

12,610 கிராமப் பஞ்சாயத்துகளின் உறுப்பினர்களாகவும் தலைவர்களாகவும் 1,37,115 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கின்ற நிலையில், தேர்தலுக்கு முன்னதாகவே ஏறத்தாழ 75 ஆயிரம் பேர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள். இவர்களில் ஆயிரத்திற்கு மேலானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் — நகராட்சித் தலைவர், ஊராட்சித் தலைவர், நகரப் பஞ்சாயத்துத் தலைவர் ஆகியோர் தமது கட்சிச் சின்னங்களிலேயே போட்டியில் இறங்கினார்கள். போட்டியாளர்கள், போட்டியாளர்களின் ஆதரவாளர்கள், அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளின் தலைவர்களெல்லாம் தேர்தல் பிரச்சாரத்தில் முழு மூச்சோடு ஈடுபட்டனர். எவ்வித அமளியும் இன்றி நடைபெற்ற தேர்தல் பிரச்சாரம் 21.2.86 அன்று மாலை 4.30 மணியோடு முடிவடைந்தது.

சிலர் நீதிமன்றங்கள் மூலம் போட முயன்ற தடைகளெல்லாம் நீங்கி, 23.2.86 அன்று காலை 7.30 மணிக்குத் தமிழகமெங்கும் விறுவிறுப்பாக வாக்குப் பதிவு தொடங்கி 4.30 மணிக்கு முடிவடைந்தது. மறுநாள் காலை 8 மணிக்கே வாக்கு எண்ணிக்கையும் தொடங்கியது.

ஊராட்சி நகராட்சித் தேர்தல் பணிகளில் அரசு அலுவல்ர்கள், அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 2.5 இலட்சம் அலுவலர்களும், காவல்துறையினரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

இரண்டொரு இடங்களில் நடந்த சாதாரண சலசலப்புகள் தவிர, தமிழகமெங்கும் அமைதியாகவே தேர்தல் நடைபெற்று முடிந்தது.

இது குறித்து, அதற்கு மறுநாளே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் வெளியிட்ட அறிக்கையொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

''பொதுவாக அமைதியான முறையில் தேர்தல்கள் நடைபெறப் பொது மக்களும் அனைத்து அரசியல் கட்சிகளும் பெரிதும் உதவினர். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளாட்சித் தேர்தல்கள் பொதுத் தேர்தலை விடப் பன்மடங்குப் பெரிதானதொன்றாகும். இத்தேர்தல்களைச் செம்மையாக நடத்தித் தந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் மொத்தம் உள்ள 97 நகராட்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் 64 நகராட்சித் தலைவர் பதவிகளையும், மார்க்சிஸ்ட் கட்சி 4 இடங்களையும் பெற்றன. தி.மு.க. முன்னணி ஆதரவு பெற்ற சுயேட்சைகள் உள்பட மொத்தம் 70 நகராட்சிகளை தி.மு.க. கூட்டணி பெற்றுள்ளது.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 11 நகராட்சிகளையும், காங்கிரஸ் (இ) 11 நகராட்சிகளையும் கைப்பற்றியது.

மொத்தம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 380 ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிகளில் தி.மு.க. 138 இடங்களைப் பெற்றுள்ளது. அகில இந்திய அண்ணா தி.மு.க. 129 இடங்களையும், காங்கிரஸ் (இ) 68 இடங்களையும் பெற்றுள்ளது. மொத்தத்தில் அனைத்து இந்திய அண்ணா தி. மு. க. காங்கிரஸ் கூட்டணிக்கு 197 இடங்களும், தி.மு.க. கூட்டணிக்கு 151 இடங்களும் கிடைத்துள்ளன.

626 பேரூராட்சிகளில் தி.மு.க 184 இடங்களையும், அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. 120 இடங்களையும், காங்கிரஸ் (இ) 89 இடங்களையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி 23 இடங்களையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 11 இடங்களையும் பெற்றுள்ளன. தனித்துப் போட்டியிட்ட ஜனதா 16 இடங்களையும், பாரதிய ஜனதா 2 இடங்களையும், சுயேச்சை 181 இடங்களையும் பெற்றுள்ளன. ●

—பி. எல். ராஜேந்திரன்



பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையங்கள்

ஆர். பெரியசாமி
செயல் இயக்குநர்
தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையங்கள், சென்னை-25

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம் இளைய தலை முறையினரிடத்தில் அறிவியல் மனப்பான்மையையும், சிந்தனை யையும் வளர்க்கும் நோக்க முடையது. புதியன பற்றி அறி யும் ஆர்வத்தையும், கேள்வி கேட்கும் முறைகளையும், சமூக, கலாச்சார, தொழில்நுட்ப, அறி வியல் இயற்கைச் சூழ்நிலை களைத் திறனாய்வு செய்து பகுத் தாய்தலையும் ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டதாகும். சிக் கல்களை இனங்கண்டு கொள்ளும் திறனையும், தக்க தீர்வினை நோக்கிப் பணியாற்றுவதையும், விஞ்ஞானம் தொழில்நுட்பம் பற் றிய செய்திகளைத் தொகுத்துப் பரப்புவதையும் அன்னாரிடையே ஊக்குவிப்பதாகும்.

பதிவு செய்யப்பெற்று சுயாட்சி உடைய தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையங் களின் முதன்மையான குறிக் கோள்கள் பின்வருமாறு:

* அறிவியல், தொழில்நுட்பம், அருங்காட்சி, வானவியல், வான் இயந்திரங்கள், வான் பௌதிகம், விண்வெளி விஞ்ஞானம் போன்ற துறைகளில் அறிவியல் ஆராய்ச்சி யினை மேற்கொள்ளுதல்.

* மக்களிடையே அறிவியல் ஆர் வத்தினை மேம்படுத்துதல், மற் றும் அறிவியல் எண்ணத்தினைப் பரப்புதல், போன்றவற்றிற்கான ஆராய்ச்சியில் முன்னேற்றம் காண்பதற்கான அறிவியல் தொழில்நுட்ப மையங்கள் ஏற் படுத்தி திறம்பட நடத்துதல் போன்றவற்றில் ஈடுபடுதல்.

* தற்போது நிலவிவரும் கல்வி, மற்றும் சமூக பழக்க வழக்கங் களுக்கு ஏற்ப அறிவியல் ஆர்வத் தினை வளர்த்தல்; அறி வியல் மற்றும் தொழில்நுட்ப அறிவினைப் பரப்புதல் போன்ற வற்றிற்கான முறைகள் மற்றும் மாதிரிகளை உருவாக்குவதற்கு ஆராய்ச்சிப் பணிகளுக்கான வசதிகள் ஏற்படுத்துதல்.

* விண்வெளி விஞ்ஞானம் மற் றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களான விண்வெளி விஞ்ஞான ஆராய்ச்சி மையம், சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம், விண்வெளி தொழில்நுட்ப மையம் ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளை ஏற் படுத்திக் கொடுத்தல்.

* மேற்கண்ட இனங்களில் கூறப் பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான, ஆராய்ச்சி சோதனைக் கூடங்கள் மற்றும் பயிற்சி மையங்கள் ஏற் படுத்தி, அவற்றில் அறிவியல் ஆராய்ச்சியினைச் செய்தல்.

* அறிவியல் தொழில்நுட்ப மையம் மற்றும் வானவியல் சம் பந்தப்பட்ட காட்சிப் பொருள் களை வடிவமைத்து, உருவாக்கு வதற்கான தகுந்த தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துதல்.

* ஒரே குறிக்கோள் மற்றும் நோக்கத்தினை உடைய ஏனைய ஆராய்ச்சி மையங்களுடன் தொடர்புகொண்டு, அறிவியல் அறிவினை மேம்படுத்துதல், வளர்த்தல் போன்ற நடவடிக்கை களில் ஈடுபடுதல்.

மேற்காணும் குறிக்கோள் களுடன் சென்னை, கோவை, திருச்சி ஆகிய இடங்களில் மூன்று அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையங்களையும், சென்னையில் கோள்நிலை ஆய்வகத்தையும் நிறுவுவதெனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

சென்னையில் பெரியார் அறி வியல் தொழில்நுட்ப மையத் திற்கு ரூ. 3.85 கோடியும், கோள் நிலை ஆய்வகத்திற்கு ரூ. 1.59 கோடியும் தமிழக அரசு ஒப் பளித்து ஆணைகள் பிறப்பித்து உள்ளது. இந்தியாவின் முக்கிய தொழிலதிபர் திரு சி.கே.பிர்லா அளிக்கும் நன்கொடையிலிருந்து கோள்நிலை ஆய்வகம் நிறுவப் பெறும். இப்போது வழங்கும் நன்கொடைக்கு, மைய அரசு வரு மான வரியிலிருந்து விலக்கு அளித்

துள்ளது. இம்மையம் அமைப்பு தற்காக, கோட்டூர்புரத்தில் அரசு 21.25 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது.

பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத்திற்கான முதன் மைக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இம்மையத்தில் கீழ்க்காணும் 15 காட்சியகங்கள் இடம் பெறும்:

1. பெரியார் காட்சியகம் (Periyar Gallery) 2. போக்குவரவு (Transportation) 3. இயல்பு அறிவியல் (Physical science) 4. மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் (Electronics and Communication) 5. இயங்குதிறன் (Motive Power) 6. வேதியியல் மற்றும் தொழில் மய உற்பத்தி மற்றும் வேதியியல் (Pure Chemistry and Industial Chemistry) 7. திசு அணு விருத்தியியல் (Cell, Population and Genetics) 8. பரிணாமம் (Evolution and Ecology) 9. உலோகவியல் (Metallurgy) 10. தொழில்கள் (Industry) 11. சக்தி (Energy) 12. உடல் நலமும், சுகாதாரமும் (Health and Hygiene) 13. சுற்றுப்புற மாசுத் தடுப்பு (Environmental Pollution Control) 14. இயங்கு இயந்திர சாஸ்திரமும், காலக் கணிப்பும் (Mechanics and Measurment of time) 15. இந்தியக் கலாச்சாரம் (Indian culture) 16. தொழில் நுட்ப மாற்றம் (Transfer of Technology) அவற்றில் ஒன்றான பெரியார் காட்சியகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பற்றிப் பெரியார் கருத்துக்களைக் காட்சிப் பொருள்களின் மூலம் எடுத்துக்காட்டும் வண்ணம் மையத்தின் நுழைவாயிலில் அமைக்கப் பெறும்.

மேற்கண்ட 16 காட்சியங்களிலும் வைக்கப்படவிருக்கும் சுமார் 1600 காட்சிப் பொருள்களின் மதிப்பு 131 இலட்சங்களாகும். காட்சிப் பொருள்களை உருவாக்குவதற்கான பணிமனை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிமனையில், காட்சிப் பொருள்களை உருவாக்க இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் ரூ. 8.00 இலட்சங்கள் செலவில் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் வைக்கப்படவிருக்கும் காட்சிப் பொருள்கள் பெரும்பாலும் உயர்ரக, நவீன வகையைச் சார்ந்த மற்றும் பங்கு கொள்ளும் வகையில் (Participatory type) அமையப்பெறவிருக்கின்றது.

இவை தவிர, குழந்தைகள் அறிவியல் பூங்கா (Children Science Park) ஒன்றும் மையத்தில் அமைய உள்ளது. இது குழந்தைகளுக்கு அடிப்படை அறிவியல் உணர்ச்சியினைத் தூண்டும் வகையில் அமையவிருக்கிறது. மேலும், இதன் தொடர்பாக விரிவு நடவடிக்கைகள் (Extension Activities), குறிப்பாக மூன்று நடமாடும் அறிவியல் காட்சியகங்கள் (Mobile Science Exhibitions) தமிழகத்தின் அனைத்துக் கிராம மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையில், ரூ.10.50 இலட்சங்கள் செலவில் அமையவிருக்கின்றது. மின் அணு பொழுதுபோக்கு மையங்கள் (Electronic Hobby Centres) வானொலி, பொழுது போக்கு மன்றங்கள் (Radio Amateur Clubs) மற்றும் வினாடி வினா அறிவுப்போட்டிகள் (Quiz Programmes) ஏற்பாடு செய்யப்படவுள்ளன. இதன் தொடர்பாக, விஞ்ஞான, அறிவியல் பொருட்காட்சிகள், சொற்பொழிவுகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இவை அனைத்திற்கும் மேலாக, இம்மையம், ஒரு ஆராய்ச்சி மையமாக, விண்வெளி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களான விஞ்ஞான ஆராய்ச்சி மையம், சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழக விண்வெளி தொழில் நுட்ப மையம் ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளை உருவாக்கி கொடுக்கவிருக்கின்றது. இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ. 682.75 இலட்சங்களாகும்.

கோள்நிலை ஆய்வகத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ.194 இலட்சங்கள். இம்மதிப்பீடு கோள்நிலை ஆய்வகக் குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, இதுவரை, மையத்தின் தொடர் மற்றும் தொடரா செலவினங்களுக்காகவும் ரூ. 80.69 இலட்சங்கள் அரசு மானியம் வழங்கியுள்ளது. அரசாங்கத்திடமிருந்து பெற்ற மானியம், மையத்தின் அடிக்கல் பணிக்காகவும், முதன்மைக் கட்டடத்தின் மேற்கட்டுமானத்திற்காகவும், 450 சதுர மீட்டர் மனையக அளவுடைய பணிமனைக் கட்டடத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ளது.



தேவையான இயந்திரங்களும், சாதனங்களும், வாங்கப்பெற்று பணிமனைக் கட்டடங்களில் நிறுவப்பெறும். மேற்காணும் திட்டப்பணிகளை முடிப்பதற்கு 1986-87ஆம் ஆண்டு, வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 141 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 1986-87ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி விஞ்ஞானத் தொழில்நுட்ப மையத்தில் பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்படும். பகுதி இரண்டாம் திட்டத்தின் கீழ் 1986-87-ஆம் ஆண்டில் இதற்கென நிதி அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப் பெறும். இம்மையத்திற்கான நிலம் கையகம் செய்யப்பட்டு வருகின்றது.

கோள்நிலை ஆய்வகக் கட்டடப்பணியும் முன்னேறி வருகிறது. அதற்கான செலவு முழுவதையும் திரு சி.கே.பிர்லா நன்கொடையாக அளிக்க ஒப்புக் கொண்டுள்ளார். இதுகாறும் ரூ.10.50 இலட்சங்கள் அன்னாரது நிறுவனங்களில் ஒன்றான சென்னை, இந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட் கம்பெனியின் மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம், கோள்நிலை ஆய்வகக் கட்டடப்பணிகள் மற்றும் மைய வளாகத்தில் நடைபெறும் இதரப் பணிகளையும், இம்மைய ஆட்சிக் குழுத் தலைவர், மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் 31.10.85 அன்று ஆய்வு செய்தார். மையத்தில் இதுவரை நடைபெற்றுள்ள பணிகள் குறித்து திருப்தி தெரிவித்ததுடன், மேலும், இப்பணிகளைத் துரிதப்படுத்துமாறும் ஆலோசனைகள் கூறியுள்ளார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன், மின் அணு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, ஆணையர் மற்றும் செயலர் திரு. டி.எஸ். விஜயராகவன் அவர்களும் நடைபெறும் பணிகளைப் பார்வையிட்டார்.

மீண்டும் 6.2.86 அன்று மின் அணு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, ஆணையர் மற்றும் செயலர் அவர்கள் மையத்தின் பணிகளைப் பார்வையிட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 11.2.1986 அன்று மையத்திற்கு வருகை புரிந்து நடந்துவரும் பணிகளை மீண்டும் ஆய்வு செய்தார். ●



வளமிகு தமிழகம்

நா. ஆதிமூலம், இ.ஆ.ப.,
வேளாண்மைத்துறை இயக்குநர்.

வேங்கடம் முதல் தென்குமரி வரை விரிந்து பரந்துள்ள நம் தமிழ் மண்ணில் வளமும் வனப்பும் மிக்க பயிரினம் செழித்து வளருகிறது. வேளாண்மைத்துறை காலத்தே வழங்கிடும் ஏற்றமிகும் இடுபொருட்கள் ஏழினையும் வேகமாகப் பயன்படுத்தி மலை என விளைச்சலைக் குவிப்பவர்கள் நம் உழவர்கள்.

அரிசி விளைவை அதிகரிக்கும் நோக்குடன் அமைந்தது எக்டேருக்கு 5 டன் உற்பத்தித் திட்டம். எந்நிலத்திலும், எப்பருவத்திலும் எக்டேருக்கு 5 டன் நெல் விளைச்சல்காண வேளாண்துறை எடுத்த குறியீட்டினை ஏற்றமுடன் எட்ட என்றும் உழைப்பவர்கள் நம் உழவர்கள். பொதுவாக நெல்விளையும் பருவங்களில் சொர்ணவாரி, கார், குறுவை ஆகியவற்றில் குறுகிய வயதுடைய நெல் ரகங்களைப் பயிரிட முடிகிறது. தவிர இப்பருவங்களில் அதிக மகசூலும் கிடைக்கிறது. சாதாரணமாக எல்லா மாவட்டங்களிலும் எக்டேருக்கு 5 டன்னும் அதற்குமேலும் இப்பருவங்களில் கிடைக்க வாய்ப்புள்ளது. தேர்வு செய்யப்பட்ட அரிய பல தொழில் நுட்பங்களைக் கொண்டு 1985-86ஆம் ஆண்டிலும் 5 மெட்ரிக் டன் உற்பத்தியைப் பெருக்கிட காரிப்பருவத்திற்கு 60 சதமும், ராபி பருவத்திற்கு 40 சதமும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு விரிவாக்கப்பணியாளர்கள் மூலம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இதில் சென்ற ஆண்டு (1984-85) கோயம்புத்தூர் மாவட்டம் 62 சதவீதத்தையும், திருநெல்வேலி மாவட்டம் 52 சதவீதத்தையும் எட்டியுள்ளதால் 75 சதம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் இந்த ஆண்டு கோவை, பெரியார் மாவட்டங்களில் எக்டேருக்கு 9 டன்கள் முதல் 10 டன்கள் வரை மகசூல் கிட்டியுள்ளது மகிழ்வைத் தருகிறது. ஆனால் சம்பாப் பட்டத்தில் பருவ நிலையில் மாறுதலினால், குளிர், பனி ஆகியவற்றால் இத்தகைய மகசூல் கிட்டுவதில்லை. மேலும் அதிகப்படியான பயிர்ப் பாதுகாப்பும், அதிக உர நிர்வாகத்திறனும் இப்பருவத்துக்குத் தேவைப்படுகின்றது.

ஐ. ஆர். 20, ஐ. ஆர். 50, பொன்னி, ஐ.ஆர்.36, ஆடுதுறை 36 போன்ற உயர் ரகங்கள் இந்த விளைச்சலைத் தந்து வருகின்றன. அரிசி உற்பத்தி ஆண்டு தோறும் அதிகரித்து வருவதோடு உற்பத்தித் திறனும் அதிகரித்துள்ளது. சென்ற 1960-61ஆம் ஆண்டு தமிழகத்தில் அரிசி உற்பத்தி 35.5 இலட்சம் டன்கள். ஆனால் சென்ற ஆண்டில் (1985-84) உற்பத்தி 54 இலட்சம் டன்கள்.

உணவுதானிய உற்பத்திக் குறியீடு நெல் பயிருக்கு உள்ளது போல் கம்பு, சோளம், கேழ்வரகு, மக்காச்சோளம் போன்ற சிறுதானியங்களுக்கும் உள்ளது. அதனால் ஆண்டுதோறும் மானாவாரியாகவும், இறவைப்பயிராகவும் சிறுதானியப் பயிர் பயிரிடப்படுகிறது. வறட்சியைத் தாங்கியும் ஓரளவு உரமேற்று உற்பத்தியில் ஓங்கி நிற்கும் வீரிய ஒட்டு

ரகங்கள் இன்று தமிழக உழவர்களிடையே விளைச்சலில் புரட்சி புரிந்துள்ளன.

உலகக் கம்பு எனப்படும் டபுள்யு.சி.சி.75ம்,முன்பு டி.என். எஸ்.75 என்றும் தற்போது கோ. 25 என்றும் வழங்கப்படும் சோள ரகமும் இன்று அதிகப் பரப்பில் பயிராகின்றன.

சிறுதானிய விளைச்சலில் அமோக விளைவை ஏற்படுத்திட நுண்ணுயிர் உரம் இப்பொழுது அறிமுகப்படுத்தப் பெற்று இலட்சக்கணக்கான எக்டரில் உபயோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அஸோஸ்பைரில்லம் என்று சொல்லப்படும் இந்த நுண்ணுயிர் உரம் 20 சதவீதம் அதிக மகசூலைத் தரும் திறனைக் கொடுக்கிறது என்றால் அது சிறுதானிய விளைச்சலை விரைவில் மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்தில் பல மாவட்டங்களில் உயர்விளைச்சல் தரும் புஞ்சைப் பயிர்களான டபிள்யு.சி.சி. 75 கம்பு,கோ.25 சோள ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. சில மாவட்டங்களில் டபிள்யூ.சி.சி.75 கம்பு கிராமம், கோ.25 சோள கிராமம் என்று பெயரிட்டு அழைக்கும் அளவுக்கு இருக்கிறது என்றால் அப்பயிர்களின் உயர்விளைச்சலும் உழவர்களிடையே பிரபலமடைந்துள்ள நிலையையும் உணரலாம்.

இது தவிர, புதிய ரகங்களை உழவர்களிடையே அறிமுகப்படுத்த19 ஆயிரம் மினிக்கட்டுகள் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. புஞ்சை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகமெங்கும் ஆயிரம் ஏக்கர் மாதிரிப் பண்ணைகள் அமைத்து, உழவர்கள் ஒட்டுமொத்தமாக முன்னேறிய வேளாண்மை யுக்திகளைக் கையாள வழிவகை செய்யப்பட்டுள்ளன. தமிழகமெங்கும் 104 இடங்களில் புஞ்சை மேம்பாட்டுத் திட்டத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்டு 34 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வறட்சிப் பகுதிகளில் கோடை உழவு செய்தல், வறட்சியைத் தாங்கும் உயர்ரக வித்துக்கள் விநியோகம், பரிந்துரைப்படி உரமிடுதல் ஆகிய பணிகளை 1.5 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 20 ஆயிரம் வேளாண்மைக் கருவிகளுடன் விதையுடன் உரமிடும் கருவிகள் 1000, புஞ்சை நில உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கிடைக்கின்ற பாசன நீரை முறையாகப் பயன்படுத்தி அதிக பரப்பளவில் பயிர்கள் விளைவிக்கச் சொட்டு நீர்ப்பாசனம் பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஏக்கருக்கு மானியமாக ரூ. 1500 வழங்கப்படுகிறது. உச்ச அளவாக 5 ஏக்கர் வரை அனுமதிக்கப்படுகிறது.

ஊட்டமிக்க சத்துக்கும் உடல் நலத்துக்கும் சிறந்தது பருப்பாகும். பயறுவகையில் தமிழகத்தில் அதிக உற்பத்தி காணப் பல்வேறு சிறப்புத் திட்டங்கள்நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு சுமார் 10 இலட்சம் எக்டேரில் பயறுவகைகளைப் பயிரிட்டு சுமார் 3.50 இலட்சம் டன்கள் உற்பத்தி காணக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்குறியீட்டை அடையச் சிறப்புமிகு திட்டங்களாக 10 சதவீத உழவர்களுக்குச் சான்றிதழ் விதை வினியோகிக்கப்பட்டு வருகிறது. ஊடு பயிர், கலப்புப்பயிர், நெல் தரிசில் பயறுவகை மற்றும் கோடை பயறுவகை பயிரிடுவதன் மூலம் அதிகப் பரப்பளவில் பயறுவகைகள் பல்கிப் பெருகுகின்றன. விதை நேர்த்தி செய்வதுடன் 7 இலட்சம் விதையுடன் கலக்கும் நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன. பயறுவகையில் முன்னேறிய யுக்திகளைக் கையாள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 100 உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

புதிய ரகங்களை உழவர்களுக்கு அறிமுகப்படுத்த 22,000 சிறுதளைகள் இலவசமாக சிறு மற்றும் குறு உழவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 2,11,500 சிறுதளைகளும் 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ளவை இலவசமாக உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு சுமார் 2.1 இலட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டு வருகின்றது.இதனால்தமிழகத்தில் உள்ள 25 கரும்பு ஆலைகளும் வெல்லம் தயாரிப்பாளர்களும் தேவையான கரும்புகள் தங்குதடையின்றிப் பெறலாம். மேலும் எக்டேருக்கு சுமார் 130 டன் கரும்பு உற்பத்தி செய்ய தேவையான பரிந்துரைகள் அனைத்தும் உழவர்களால் கையாளப்பட்டு வருகின்றன. இது தவிர, உயர்விளைச்சல் தரும் கோ.85061, கோ.க.671 ஆகிய ரகங்களை உழவர்களிடையே வினியோகித்தல், 3500 எக்டேர் பரப்பில் கரும்பு நாற்றங்காலில் தெரிவு செய்த காரணங்கள் நடவு செய்யப்பட்டு வருகின்றன. 21 அரசு ஒட்டுண்ணி நிலையங்கள் மூலம் 10,500 எக்டேரில் இளங்குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விடுவதுடன், கரும்பு நாற்றங்கால் உழவர்கட்கு எக்டேருக்கு ரூ. 1500 மானியம் அளிக்கப்பட்டு வருகின்றது.

ஆடைக்கு அடிப்படையான பருத்தி இவ்வாண்டு சுமார் 2.74 இலட்சம்எக்டேரில்பயிரிடப்பட்டு சுமார் 5 இலட்சம் பேல்கள் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காகச் சிறப்புமிகு திட்டங்களாக இறவைப் பகுதியில் 15 சதம், மானாவாரியில் 10 சதம், உழவர்களிடையே 4100 குவிண்டால் சான்றிதழ் விதை விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மாநிலப் பண்ணைகள் மூலம்,மூலவிதைகள் மற்றும் ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அதிக விளைச்சல் தரும் எல்.ஆர்.ஏ.5166 என்ற ரகத்தை சுமார் 25,000 எக்டேரில் பயிரிடப்பட்டு வருகின்றன. மாநிலமெங்கும் 520 மாதிரிப் பண்ணைகள் அமைத்து அதன் மூலம் உழவர்கள்சாகுபடிநுட்பங்களைப் பின்பற்றி வருகிறார்கள். பருத்தி பயிரிடும் உழவர்கட்குப் பயிர்க் கடனாக ரூ. 19 கோடி வழங்குதல், ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு ஆகியவைகள் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வளவு பயன் நிறைந்த சிறப்புத் திட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும் இயற்கை இடையூறுகளான வறட்சி, வெள்ளம் ஆகியவைகளைத் தமிழகம் ஒவ்வொரு ஆண்டும் சந்திக்க வேண்டியிருக்கிறது. இவ்விடையூறுக் காலங்களில் கூட வேளாண்மைத்துறை உழவர்களுக்கு உற்ற நண்பனாக உதவிக்கரம் நீட்டி அவர்களுக்குத் தேவையான இடுபொருட்களைக் காலத்தே விரைவாக வினியோகித்து வருகிறது.

ஏழைகள் வாழ எண்ணற்ற இல்லங்கள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1971ல் துவங்கப் பட்டு கீழ்க்கண்ட திட்டங்களை சென்னை நகரில் மட்டும் செய்து வந்தது.

வீட்டு வசதி:

குடியிருப்புகள் கட்டும் திட்டம்

நகர்ப்புற வளர்ச்சி:

விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தித் திட்டம்.

சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்.

1983-84ஆம் ஆண்டில் இருந்து குடிசைப்பகுதி மாற்று வாரியம் பணிகளை மாநிலத்தின் பிற நகரங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கியது. இதுவரை 43 நகரங்களுக்குப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

குடியிருப்புகள் கட்டும் திட்டம்:

1984-85 முடிய குடிசைப் பகுதி மாற்று வாரியம் 45,980 குடியிருப்புகளை ரூ. 4168.69 இலட்சம் செலவில் சென்னை நகரிலும், ஈரோட்டிலும் கட்டியுள்ளது. இத்திட்டத்திற்கு அரசு மானியமும் அட்கோ கடன் உதவியும் பெறப்படுகிறது. 1984-85 வரை ரூ. 557.19 இலட்சம் அட்கோவிடம் இருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது.

1985-86ஆம் ஆண்டு ரூ.150 இலட்சம் அரசு நிதி உதவியுடனும், ரூ. 188 இலட்சங்கள் அட்கோ கடனுதவியுடனும் 512 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும்.

1986-87ல் ரூ. 200 இலட்சம் அரசு மானியம் பெற்றும் ரூ.585 இலட்சம் அட்கோ கடனுதவி பெற்றும் 3570 குடியிருப்புகள் கட்டும் பணி துவங்கப்பட்டு 1250 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். ரூ.100 இலட்சம் கடன் தொகை அட்கோவிற்குத் திருப்பிச் செலுத்தப்படும்.

நலிந்த பிரிவினருக்கான வீடு கட்டும் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள குடிசைவாசிகளுக்கு வீடுகள் கட்டித் தரப்படும். அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் விலை குறைந்த தரமான -கட்டுமானப் பொருள்களைக் கொண்டு வீடுகள் கட்டப்படும். இக்குடியிருப்புகள் வாடகை மற்றும் தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

1985-86ல் மதுரை பெரியார் நகரில் ரூ. 231.931 இலட்சம் அட்கோ கடன் உதவியுடன் 2010 வீடுகள் கட்டப்படும். ஒதுக்கீடு தாரர்களிடம் தவணைத் தொகையை வசூல் செய்து 20 ஆண்டுகளில் அட்கோ கடன் திருப்பிச் செலுத்தப்படும்.

1986-87ல் ரூ. 10.76 கோடி செலவில் 34,332 வீடுகள் கட்டப்படும்.

மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கும் திட்டம்:

இத்திட்டம் குடிசை மாற்றுவாரியத்திற்குச் சொந்தமான காலி இடங்களில் செயல்படுத்தப்படும்.

1985-86ல் ரூ.86.49 இலட்சம் அட்கோ கடனுதவி பெற்று 1842 மனைகள் மேம்படுத்தப் பட உள்ளன. நடப்பாண்டில் 900 குடும்பங்கள் பயனடையும். 1986-87ல் ரூ. 46.49 இலட்சம் செலவில் 1042 குடும்பங்கள் பயனடையும்.

விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம் (மாநில அரசின் உதவியுடன்):

சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள், கழிப்பறை வசதிகள் போன்ற வசதிகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்து கொடுக்கப்படுகின்றன. வாழ்வதற்கொவ்வாத பகுதிகளைத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடிசைப்பகுதிகளாக இருந்தும் நிதி நிலை காரணமாக அகற்ற முடியாத நிலையிலுள்ள குடிசைப் பகுதிகளில் இத்திட்டம் இடைக்கால நிவாரணமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1977ல் இத்திட்டம் துவங்கப்பட்டது.

1984-85 வரை 64,448 குடும்பங்கள் ரூ. 425.04 இலட்சம் செலவில் இத்திட்டத்தினால் பயன் பெற்றன.

1985-86ஆம் ஆண்டு ரூ. 70 இலட்சம் செலவில் 7250 குடும்பங்கள் பயன்பெற உள்ளன.

1986-87ஆம் ஆண்டு சென்னையிலும், மதுரை, கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிப் பகுதிகளிலும் 8000 குடும்பங்கள் பயன் பெறும்வகையிலும் ரூ. 100 இலட்சம் செலவிடப்படவுள்ளது.

சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம் (மத்திய அரசு உதவியுடன்)

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் - ஊக்குவிப்பு மானியத் தொகைத் திட்டத்தின் கீழ் 1983-84ஆம் ஆண்டிலிருந்து குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய, மத்திய அரசு

என்.வி.என். செல்வம்,
தலைவர்,
தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.



முன்வந்துள்ளது. 1984-85ஆம் ஆண்டு முடிய ரூ. 72.94 இலட்சங்கள் பெறப்பட்டன. ரூ.56.05 இலட்சம் செலவில் 34324 மக்கள் பயனடைந்தனர். 1985-86ல் ரூ. 16.89 இலட்சம் செலவில் 7255 மக்கள் பயனடைவர்.

சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தில் குடிசைப் பகுதிகள் உலக வங்கி உதவியுடன் செயலாற்றுகிறது. இத்திட்டத்தின்கீழ் சுற்றுப்புற மேம்பாடுகள் அல்லாது நில உரிமை மற்றும் வருமானத்திற்கு ஏற்றாற் போல் ரூ.1500, ரூ.2500 மற்றும் ரூ.3500 என வீடு கட்டுவதற்குக் கடன் தொகையும் கொடுக்கப்படும். பகுதி 1ல் சென்னை மாநகராட்சி 12 குடிசைப்பகுதிகளையும், குடிசைப்பகுதிமாற்று வாரியம் 63 குடிசைப்பகுதிகளையும் எடுத்து ரூ. 443.65 இலட்சம் செலவு செய்து 24,862 குடும்பங்கள் பயன்பெறுமாறு மேம்பாட்டுப் பணிகளை முடித்துள்ளன. 1977ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இத்திட்டம் 1982ல் முடிவுற்றது. 1981ஆம் ஆண்டு துவங்கப்பட்ட பகுதி 2ன் மதிப்பீட்டுத்தொகை ரூ.27.80 கோடியாகும். 50,000 குடும்பங்கள் இதன் மூலம் பயன்பெற வேண்டும். 1984-85ஆம் ஆண்டு வரை 32,000 குடும்பங்கள் ரூ.1415.77 இலட்சம் செலவில் பயன்பெற்றுள்ளன.

1985-86ஆம் ஆண்டு 10,000 குடும்பங்கள் ரூ. 500 இலட்சம் செலவில் பயன் பெற உள்ளன.

1984-85ஆம் ஆண்டு வரை 33,573 குடும்பங்கள் நில உரிமை பெற விற்பனை ஒப்பந்தப் பத்திரத்தில்கையொப்பமிட்டுள்ளனர். 25,146 குடும்பங்கள் ரூ. 477.169 இலட்சம் கடனாகப்பெற்றுள்ளன. 1985-86ஆம் ஆண்டு 5000 குடும்பங்கள் நில உரிமை பெற உள்ளன. ரூ. 250 இலட்சம் கடன் வழங்கப்படும்.

1986-87 நிதி நிலையில் ரூ.600 இலட்சம் கடன் வழங்க ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிசைப்பகுதிகளில் வெள்ளக் காலத்தில் ஏற்படும் நீர்த்தேக்கத்தைத் தவிர்க்கும் முகத்தான் பிரதான கால்வாய்களைப் பொதுப் பணித்துறையும், துணைக் கால்வாய்களை மாநகராட்சியும், குடிசைப்பகுதி மாற்றுவாரிய சார்பில் செய்து வருகின்றன. 1984-85ஆம் ஆண்டு வரை ரூ. 422 இலட்சம் செலவிடப்பட்டது. 1985-86ஆம் ஆண்டு ரூ 15. இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டங்களைப் பொதுப் பணித்துறையும், மாநகராட்சியும் முடித்தபின் கணிசமான குடிசை வாழ் குடும்பத்தினர் வெள்ளப் பாதிப்பினின்றும் நிவர்த்தி பெறுவர்.

பகுதி 1ல் 99 பாலர் பள்ளிகளும், பகுதி 2ல் 140 பாலர் பள்ளிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 60 பாலர் பள்ளிகள் கட்டப்படவுள்ளன.

நகர்ப்புறச் சமுதாய வளர்ச்சித் திட்டம்

யுனிசெப் உதவியுடன் ரூ. 39.98 இலட்சம் பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட குடிசைப்பகுதிகளில் உள்ள 2,50,000 நபர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் இவ்வாண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் தலையாய நோக்கம், குடிசை வாழ் மக்கள் தங்களது சுற்றுப்புறங்களைத் தாங்களாகவே சுகாதாரமாக வைத்துக் கொள்ளத் தயார்ப்படுத்தும் வகையில் பயிற்சியும் உதவித்தொகையும் அளிப்பதாகும்.

குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சமுதாய வளர்ச்சிப் பிரிவின் மூலம் குடிசை வாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி மூலம் குடிசை வாழ் இளைஞர் மற்றும் மகளிர் வேலைகள் பெறவும், சிறு தொழில்கள் ஆரம்பித்துக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றனர்.

திரைப்படங்கள், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு மூலம் குடிசை வாழ் மக்களுக்குச் சுகாதார மற்றும் சமூகக் கல்வியும் போதிக்கப் படுகிறது.

பூவிருந்தவல்லியில் பூ விழுந்தோர் பள்ளி

விழியிழந்தோரை - பார்வையற்றோரை - வாழவைக்கும், கல்வியும் தொழிலும் அளித்து அவர்களை மனிதர்களாக்கும் மகத்தான பணியை, செங்கற்பட்டு மாவட்டம் பூவிருந்தவல்லியில் உள்ள அரசினர் பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி செய்து வருகிறது.

14-18 வயதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்கள் இங்கே எத்தனை வயது வரை வேண்டுமானாலும் இருந்து தொழில் செய்யலாம். 50 வயது வரை வேண்டுமானாலும் இருந்து தொழில் செய்யலாம். ஆனால் ஒண்டிக் கட்டையாகத் தான் இருக்கவேண்டும்.

இந்தப் பள்ளியில் இப்பொழுது மொத்தம் 403 மாணவ, மாணவியர் உள்ளனர். 275 பேர் ஆண்கள், 128 பேர் பெண்கள். விடுதிகள் இருபாலருக்கும் தனித் தனியே. வகுப்பறையில் மட்டும் சேர்ந்து படிக்கிறார்கள்.

இளம் பருவத்தில் சேர வாய்ப்பற்று, வீட்டிலேயே வளர்ந்து விடுகிற பார்வையற்றவர்கள் இங்கு 14-18 வயதுக்குள் இருந்தால் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இவர்களுக்குத் தொழில் கற்றுத் தரப்படுகிறது.

பெண்கள் ஆடை நெய்தல், பாய் நெய்தல் பணியிலும், ஆண்கள் பிரம்பு நாற்காலி ஆசனங்கள் பின்னுவதிலும் பயிற்சி பெற்று மின்னுகிறார்கள்.

படித்த பார்வையற்றோருக்கு அவர்கள் வேலைவாய்ப்புப் பெற்று வருமானம் வரும் பொழுது திருமணமும் தேடிக் கொண்டு வருகிறது. இந்தப் பள்ளியையே எடுத்துக் கொள்ளுங்கள். பார்வையிழந்த ஆசிரியர்கள் 15 பேர் இங்கே பணியாற்றுகிறார்கள். அவர்கள் அனைவருமே திருமணமானவர்கள். இவர்களது மனைவியர் நல்ல பார்வையுள்ளவர்கள்.

பார்வையற்றோர் படிப்பிலும் பொருளாதாரத்திலும் உயரும் பொழுது, அவர்களது பார்வைக் குறைவு, ஒரு குறையாகத் தோன்றாத நிலை கண்டு பெருமைப்படுகிறோம். அதே நேரத்தில், ஒரு வருத்தமும் நம் உள்ளத்தில் இழையோடுகிறது.

பார்வையிழந்த பெண்கள் படித்து வேலையிலும் இருந்தால் அவர்களுக்கும் இப்படி ஆண்கள் போலவே, பார்வையுள்ள மாப்பிள்ளைகள் கிடைக்கிறார்களா? என்று பள்ளியின் முதல்வர் திருவி. சேஷப்பிள்ளையைக் கேட்ட போது—

''அது அரிதாகத்தான் இருக்கிறது. இங்கே எங்கள் பள்ளியிலேயே கூட செகண்டரி கிரேடு ஆசிரியை ஒருவர் மாதம் 700 ரூபாய் சம்பளத்தில் இருக்கிறார். அவருக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறோம். விமானப் படையில் ரூ.1000 சம்பளத்தில் உள்ள ஒரு வாலிபர் விசால நோக்குடன் திருமணம் செய்துகொள்ள முன் வந்தார். அவரது பெற்றோர் சம்மதிக்காததால் அது நடக்கவில்லை''

பார்வையற்றோர் பாவம் செய்தவர்களுமல்லர்; பரிதாபத்

மு. முத்துக்காளத்தி
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கற்பட்டு மாவட்டம்.

திற்குரியவர்களுமல்லர், நம்மைப் போலவே சகல உரிமைகளுடனும் சம அந்தஸ்துடன் வாழத் தகுதி படைத்தவர்கள்; அந்தத் தகுதியை உண்டாக்கித் தரவே, இது போன்ற பள்ளிகள் தொண்டாற்றுகின்றன.

பார்வையற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் பார்வையற்றிருக்குமோ எனப் பயப்படத் தேவையில்லை. நல்ல பார்வையுடன் 'கொழு கொழு' குழந்தைகளே பிறக்கின்றன. பள்ளி முதல்வர் தனது அனுபவத்திலிருந்து இதைச் சொல்கிறார்.

> **எல்லாப் பெண்களுமே சமூகத்தின் ஆசிரியர்கள், வழிகாட்டிகள். அதனால்தான் பெண் கல்விக்கு முக்கியம் அளிக்கிறோம்**
>
> **—திருமதி இந்திராகாந்தி**

ஒரு பூக்கார அம்மாள் பார்வையற்ற தனது மகளைச் சேர்க்க வந்தார். அவரை விசாரித்த போது, அவருக்குப் பிறந்த நான்கு குழந்தைகளும் பார்வையற்றவர்கள் என்பதை அறிந்து திடுக்கிடுகிறோம்.

என்னோடு சேர்ந்து வருத்தப்பட்ட முதல்வர், ''ஏழைகள் தான் இப்படிப்பட்ட துர்பாக்கிய நிலைக்கு ஆளாகிறார்கள். சத்துணவு இல்லாதது தான் மூல காரணம். வசதியான குடும்பத்தில் பார்வையற்றோர் பிறப்பது மிகவும் குறைவு'' என்றார்.

இதனால்தான் நமது மாண்புமிகு முதல்வர் இளம் பருவத்து இன்பச்சிட்டுகளுக்குச் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்தார் அல்லவா?

''பிறப்பிலேயே பார்வையற்றுப் பிறப்பது நமது நாட்டில் தான் அதிகம். ஜெர்மானிய நிபுணர் ஒருவர் எங்கள் பள்ளிக்கு வந்திருந்தார். அவரது நாட்டில், பிறவியிலேயே பார்வையற்றுப் பிறப்பவர் ஒருவரைக் கூடப் பார்க்க முடியாது'' என்று கூறினார் பள்ளி முதல்வர்.

இந்தியாவில் 4.5 கோடி பேர் பார்வையற்றிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் போன்ற சமூக நலப் பணிகளால் எதிர் காலத்தில் இந்த நிலை மாறும் என்ற உறுதியான நம்பிக்கை இருக்கிறது.

பூவிருந்தவல்லி பள்ளியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, பார்வையற்ற மாணவ மாணவியர் சரளமாக அங்குமிங்கும் போவதும், வகுப்பறைக்குள் நுழைவதும், முதல்வரிடம் வந்து பேசுவதும் வியப்பாக இருந்தது. ஒருவராவது இன்னொருவர் மேல் தெரியாமல் மோதிக்கொள்ளவில்லை. தெருவில் நடக்கும் பல பேர் - கண்ணிரண்டு இருந்தும் ஒருவர் மேல் ஒருவர் மோதிக் கொண்டு எத்தனை தடவை ''சாரி'' சொல்லுகிறார்கள்!

''இந்தப் பள்ளியில் மண்டல பிரெயில் அச்சகம் (பார்வையற்றோருக்கான பாடநூல்கள் வெளியிடும் அச்சகம்), 'மண்டல பார்வையற்றோரு'க்கான ஆசிரியர் பயிற்சி மையம், அரசு பார்வையற்றோருக்கான தொழில் பயிற்சி நிலையம் (ஐ.டி.ஐ. அந்தஸ்துள்ளது) ஆகியவையும் உள்ளன'' என்றார் பள்ளி முதல்வர்.

''பார்வையற்றோரின் பெற்றோருக்கு நீங்கள் கூறும் அறிவுரை?'' பள்ளி முதல்வரைக் கேட்கிறோம்:

''உங்கள் குழந்தைகளைப் பரிவுடன் பாசத்துடன் நடத்துங்கள். பார்வையற்ற குழந்தை பிறந்தது அவன் செய்த பாவமும் அல்ல, நீங்கள் செய்த பாவமும் அல்ல. இளமையிலே இது போன்ற பள்ளியில் சேர்த்து விட்டால் அவன் பி.ஏ., எம்.ஏ.,பி.,எச்டி. படிக்கவும், தொழிற்கல்வி பெறவும் நிறைய வாய்ப்புண்டு. பிற்காலத்தில் பெற்றோருக்குப் பாரமாக இராமல், தன் சொந்தக் காலில் நின்று சம்பாதித்து, தன் வாழ்க்கையைத் தானே தேடிக்கொள்வான்.''



இராமநாதபுர மாவட்டத்தில்

தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் 1944-ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே மானாவாரியாக நடைபெற்று வந்துள்ளது. பட்டுப் புழு வளர்ப்புக்குத் தேவையான தட்ப வெப்ப நிலைகள் ஒரு குறிப்பிட்ட அளவு தேவையான படியால் இத்தொழில் முன்பு நீர் மட்டத்திற்குச் சுமார் 2,500 அடிக்கு மேல்தான் நடைபெற்று வந்தது.

தீவிர ஆராய்ச்சிக்குப் பின் முசுக்கட்டைச் செடி வளர்ப்பும், தொடர்ந்து பட்டுப்புழு வளர்ப்பும் அதிக சீதோஷ்ணமிக்க சமவெளிப்பகுதிகளிலும், ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் உண்டு எனக் கண்டுபிடிக்கப்பட்டு, நீர் வசதியுள்ள விவசாயிகள் பட்டுத் தொழிலை ஆரம்பிக்க அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்டனர்.

பட்டுத்தொழில் அதி விரைவில் தமிழ்நாட்டின் எல்லாப்பகுதிகளிலும், எல்லா மாவட்டங்களிலும் பரவ, 1978 முதல் அரசாங்க மானியத்துடன் பல பகுதிகளில் விவசாயிகள் பட்டுத் தொழிலை ஆரம்பிக்க ஊக்குவிக்கப்பட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு முசுக்கட்டைச் செடி (மல்பரி) நடவும், அவர்கள் தொடர்ந்து அத்தொழிலினை மேற்கொள்ளவும், அவர்களுக்குப் பல விதத்தில் உதவி கீழ்க்கண்ட திட்டங்கள் அமலாக்கப்பட்டன.

- மாதிரி மல்பரி பட்டுப்பண்ணை
- இளம்புழு வளர்ப்பு மையம்.
- கிராமிய இளம்புழு வளர்ப்பு மையம்.
- பட்டு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் பிரிந்ததற்குப் பின் 1985-86ஆம் ஆண்டில் 60 ஏக்கர் மல்பரி நடவு என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், விவசாயிகளின் அதிக ஆர்வம் காரணமாக72.50 ஏக்கரில் இதுவரை புதிதாக மல்பரி நடவு செய்யப்பட்டுள்ளது.

கோ. தி. மோகன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம் மாவட்டம்

பல விவசாயிகளை ஊக்குவிக்க வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல புதிய திட்டங்கள் இந்த ஆண்டே அமலாக்கப்பட உள்ளன.

ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பாண்டியூரில் பட்டுத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பட்டுப்பூச்சி மல்பரி மாதிரிப் பண்ணைகளை மாண்புமிகு மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு டி. இராமசாமி அவர்களின் தலைமையில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ரூ. 35 இலட்சம் ஒதுக்கீடு, பட்டு வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம், விவசாயப் பெருக்கத்திட்டம் ஆகிய திட்டங்கள் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகின்றன. இம்மாவட்டத்தில் இதுவரை 2,000 விவசாயிகள் பட்டுப்பூச்சி வளர்ச்சியில் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்ட மாவட்டமான இராமநாதபுர மாவட்டத்திற்கு ஏற்ற சிறப்பான தொழில் பட்டுவளர்ப்புத் தொழிலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நலிந்தவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் வகையில் 700 நபர்கள் பயன்பெறும் ரூ. 30 இலட்சம் மானியத்துடன்கடன் தொகையாக கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமையின் சார்பில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, மத்திய பாரத வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாண்டியன் கிராம வங்கிபோன்ற வங்கிகளின் சார்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நலிந்தவர்களின் மேம்பாட்டிற்காக 700 நபர்களுக்கு ரூ. 30 இலட்சம் கடனுதவியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜீவ் வாலியா, இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

கறவை மாடுகள் வாங்குவதற்கும், செம்மறி ஆடுகள் வாங்கு

வதற்கும், உழவு மாடுகள் வாங்குவதற்கும் மானியத்துடன் கூடிய கடன் தொகையாக 248 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 7 இலட்சத்து 29 ஆயிரத்தையும், பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பதற்கு 35 பெண்களுக்கு ரூ. 48 ஆயிரத்தையும், கிரைண்டர் மற்றும் கட்பீஸ் துணிக் கடைகள் வைப்பதற்கு 6 நபர்களுக்கு ரூ. 31 ஆயிரத்தையும், மாபெரும் விவசாய உற்பத்தித் திட்டத்தின் கீழ் ஆழமற்ற சிமிண்ட் வளையங்கள்அமைத்து கிணறு தோண்டவும், மல்லிகை பயிரிடவும், மற்றும் மரக் கன்றுகள், பழக்கன்றுகள் நட்டு பயன்பெறும் வகையில் 314 நபர்களுக்கு ரூ. 21 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாயும், சாண எரி வாயு அமைக்கும் திட்டத்தின் கீழ் 4 நபர்களுக்கு ரூ. 32 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளது.

மண்டபம் அகதிகள் முகாம்

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அகதிகள் முகாமில் புதிதாக 1,200 வீடுகள் இரண்டு கட்டமாகக் கட்டப்பட்டு வருகின்றன. இதற்காக மத்திய அரசு ரூ. 2.04 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

ஏற்கெனவே உள்ள அகதிகள் குடியிருப்பில் 18 குடியிருப்புக்கள் ரூ. 8 இலட்சம் செலவில் பழுது பார்த்து மராமத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் 15 குடியிருப்புகள் ரூ. 10.3 இலட்சம் செலவில் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட இலங்கை அகதிகள் குடும்பங்கள் தவிர 3649 நபர்கள் (995 குடும்பம்) தற்சமயம் அகதிகள் முகாமில் உள்ளனர்.

இலங்கை அகதிகளின் குழந்தைகள் 1395 உயர்நிலைப்பள்ளி, துவக்கப்பள்ளிகளில் கல்வி கற்று வருகின்றனர்.

இராமநாதபுர மாவட்டத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 327 வேலைகள் நடப்பு நிதி ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக 240 மெட்ரிக் டன் அரிசியும் 48 மெட்ரிக் டன் கோதுமையும் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 2 இலட்சத்து 10 ஆயிரம் மனித வேலை நாட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தின் கீழ் 26 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதனால் 4 இலட்சத்து 7 ஆயிரம் மனித வேலை நாட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக 282 மெட்ரிக் டன் அரிசியும், 106 மெட்ரிக் டன் கோதுமையும் வழங்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் புதிதாக 1287 நபர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இதனால் ரூ. 77 இலட்சத்து 22 ஆயிரம் மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு கறவை மாடுகள் வாங்க மானியத்துடன் கூடிய கடன் தொகை பெற்றவர்களுக்கு இந்த ஆண்டும் மேலும் ஒரு கறவை மாடு வாங்குவதற்காகத் தலா ரூ. 2,500 வீதம் 1823 நபர்களுக்கு ரூ. 35 இலட்சத்து 57 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 1408 ஆதி திராவிடர்கள் பயன் பெற்றுள்ளனர். இதில் பெண்கள் 835 பேர்.



இம்மாவட்டத்தில் கிராமப் புறத்தில் உள்ள இளைஞர்களுக்காகச் சுயவேலைவாய்ப்புப்பெறும் வகையில் பனை ஓலைப் பயிற்சி, கற்றாழை நார் முடைதல், தீப்பெட்டித் தொழில், வானொலி பழுது பார்த்தல், தொழிற்பேட்டைப் பயிற்சி, கோரைப் பாய் முடைதல் போன்றவற்றில் 424 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சிக் காலமான 6 மாதக் காலத்திற்கு, மாதம் ஒன்றுக்குத் தலா ரூ. 200 வழங்கப்பட்டது. இவ்வாறு பயிற்சிபெற்றவர்களுக்கு வங்கிகளின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது.





கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மு. அபுல்ஹசன் இ.ஆ.ப.

மாவட்ட ஆட்சித்தலைவர்

கோவை மாவட்டம்

கோவை மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டிற்குக்குடும்ப நல அறுவைஇலக்கு 35,300ஆகும்.இதில் 22,045 குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு 63 சதவிகிதம் சாதனை செய்யப் பட்டுள்ளது. கடந்த 1.4.85 முதல் இதுவரை இம்மாவட்டத்தில் 103 லேப் ராஸ்கோபிக் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

சிறுசேமிப்பு

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.1,370 இலட்சம் ஆகும். இதுவரை ரூ.419 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள இலக்கினை அடைவதற்கு 16.12.85 முதல் தீவிர வசூல் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும். 500 முகவர்கள் புதியதாக நியமனம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எரிவாயுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 1575. இதுவரை 384 கலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2689 விண்ணப்பங்கள் பெறப்பட்டு வங்கிகளுக்கு

அனுப்பி வைக்கப்பட்டு 742 பேர்களுக்கு கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. 290 கலன்கள் கட்டப்பட்டு வருகின்றன.

குழந்தைகள் நலன்

இம்மாவட்டத்தில் 2 வயது முதல் 4 வயது வரையுள்ள 1,34,556 குழந்தைகளுக்கு 825 குழந்தைகள் நல சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. 56,700 ஆதிதிராவிட வகுப்பினைச் சார்ந்த குழந்தைகளும், 77,856 இதர வகுப்பினைச் சார்ந்த குழந்தைகளும் இதில் அடங்குவர். இச்சத்துணவு மையங்கள் மூலம் 6,800 வயது முதிர்ந்த ஒய்வூதியம் பெறுப்வர்களும் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தினால் 825 குழந்தைகள் நல அமைப்பாளர்களும், 1650 குழந்தைகள் நல உதவியாளர்களும் பணிகள் பெற்று பணிபுரிந்து வருகின்றனர். அவிநாசி ஊராட்சி ஒன்றியம் மடத்துப்பாளையத்தில் இயங்கி வரும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தினால் 219 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இதற்கான இந்நிதியாண்டில் ரூ. 1,53,959 செலவிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் 2,78,000 மாணவ மாணவியர்களுக்குச் சீருடை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மகளிர் நலம்

சமூகத்தில் கல்வியறிவற்ற, குறைந்த கல்வித் தகுதியுடைய ஏழைப் பெண்கள் வங்கிகள் மூலம் கடன்பெற்று சுயதொழில் தொடங்க இந்நிதியாண்டில் 140 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இவர்களின் 108 பேர்களுக்கு ரூ. 34,050 கடனாக வழங்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திலுள்ள 613 மகளிர் மன்றங்கள் செயல்பட இந்நிதியாண்டில் ரூ. 84,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர் நலன்

1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் உடல் ஊனமுற்ற 640 குழந்தைகளுக்கு ஊக்குவிப்புத் தொகையாக இந்நிதியாண்டில் ரூ. 27,102 வழங்கப்பட்டுள்ளது. பேரூரில் 50 பார்வையற்ற குழந்தைகள் நலனுக்காக இயங்கி வரும் பள்ளியில் உணவு, உடை, தங்குமிடம் போன்றவற்றிற்காக இதுவரை ரூ.1,14,150 செலவிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள காதுகேளாதவர்களுக்கு இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு தற்போது 1055 பேர்களுக்கு இலவச காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

10482 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் பயன் பெறும் வகையில் கல்வி உதவித் தொகையாக இதுவரை ரூ 25.83 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது கோவையில் தொழிற் கல்வி பயிலும் 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ. 6.5 இலட்சம் செலவில் துடியலூரில் புதியதாக மாணவர் தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது.

வீடற்ற ஏழை ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்க்கு வீட்டுமனை கொடுக்க இதுவரை ரூ. 4.56 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 519 பட்டாக்கள்



வழங்கப்பட்டுள்ளன. கலப்புத் திருமணம் செய்து கொண்ட 23 தம்பதியர்களுக்குத் தலா ரூ.4300 வீதம் ரூ. 98,800 வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தொழில் மையம்

இம்மாவட்டத்தில் இதுவரை 2579 தொழில் முனைவோர் கண்டறியப்பட்டுள்ளனர். சிறு தொழில்கள் புதியதாகப் பதிவு செய்ய ஆண்டுக் குறியீடு 1000 ஆகும். ஆனால் இதுவரை 1238 சிறுதொழில்கள் புதிய தொழில்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, 190 கைவினைஞர் தொழில்களும் புதியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிராமக் கைவினைஞர்கள் 60 பேர்களுக்கு ரூ. 45 ஆயிரம் செலவில் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தவணைக் கொள்முதல் முறையில் தேசிய சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் 17 தொழில்களுக்கு ரூ. 19.27 இலட்சம் செலவில் இயந்திரங்கள் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியப் பிரதமரின் படித்து வேலையற்ற இளைஞர், மகளிருக்காக சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 1985-86ஆம் ஆண்டிற்கான குறியீடு 1800 ஆகும். இதுவரை 1906 தொழில்களுக்கு ரூ.445.85 இலட்சத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 274 தொழில்களுக்கு ரூ. 62.66 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. அவிநாசி வட்டம் தொழில் வகையில் பின்தங்கிய பகுதியாக அரசு அறிவித்துள்ளதால் இப்பகுதியில் துவக்கப்படும் புதிய சிறுதொழில்களுக்கு 15 சதவீத மூலதன முதலீட்டு மான்யம் பெறலாம். கிராமப்புறங்களில் அமைக்கப்படும் சிறுதொழில்கள் மின் கட்டண மானியம் மற்றும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வசதிகளை முதல் மூன்றாண்டுகள் பெறலாம்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்

இவ்வலுவலகம் மூலம் இவ்வாண்டில் இதுவரை 2208 பேர் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 601 பட்டதாரிகளும், மாதம் ஒன்றுக்கு ரூ. 75 வீதம் 518 புகுமுகவகுப்பு படித்தவர்களும், மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் 3310 எஸ்.எஸ்.எல்.சி படித்தவர்களும் பயன்பெற்றுள்ளனர். இதன் மூலம் ரூ. 33,06,255-10 வழங்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சுயவேலை வாய்ப்புப் பிரிவின் சுயவேலை வாய்ப்பிற்காக 120 பெண்கள் உட்பட 815 பேர் பதிவு செய்துள்ளனர். இதில் 120 பெண்கள் உட்பட 721பேர்களுடைய மனுக்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதுவரை 15 பெண்கள் உட்பட 252 பேர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர்.

கைத்தறி மற்றும் நூல்துறை

கோவை சரகத்தில் கூட்டுறவுத் துறையில் கீழ் இதுவரை 24,681 தறிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. நவம்பர்'85 திங்களில் இச்சரகத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ரூ.85.34 இலட்சம் மதிப்புள்ள 8.05 இலட்சம் மீட்டர் கைத்தறி மற்றும் விசைத்தறி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திங்களில் ரூ. 153.34 லட்சம் மதிப்புள்ள 12.15 லட்சம் மீட்டர் விற்பனை ஆகியுள்ளது.

நெசவாளர்களுக்குத் தறிகளை நவீனப்படுத்த ரூ. 3 லட்சமும் தறிகளுக்கு நவீனப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காக மானியத்தொகை வழங்க ரூ. 40 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பண்ணை வளர்ச்சிப்பணிகள்

பரம்பிக்குளம் ஆளியார் திட்டம் கமேண்ட் ஏரியா டெவலப்மெண்ட் திட்டத்தின் கீழ் பண்ணை வளர்ச்சிப் பணிகள் மத்திய அரசின் நிதி உதவி கொண்டு 1985-86 முதல் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 30,98,45,000 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதலாண்டில் ரூ. 1,70,95,000 செலவிடப்படும். இத்திட்டத்தின் கீழ் பாசன வாய்க்கால்கள் அமைத்தல், வாய்க்கால்களின் உட்புறம் வலுப்படுத்துதல் போன்ற பணிகள் செய்யப்படும். திட்டத்தைச் செயல்படுத்த தேவையான பணியாளர்களை நியமிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு 800 வீடுகளும், மலைவாழ் பழங்குடியினருக்கு 80 வீடுகளுமாக 880 வீடுகள் ரூ.84.96 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு மற்றும் ஊரகநில மற்றோர் வேலைவாய்ப்புஉறுதியளிப்புத் திட்டங்களில் பணிபுரிவோர்க்குச் சகாய விலையில் வழங்க கோதுமை ஒதுக்கீடு:

1985-86ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு நபர் ஒருவருக்குச் சகாய விலையில் கிலோ ரூ.1.50 வீதம் தினம் 2 கிலோ கோதுமை வழங்க கோவை மாவட்டத்திற்கு 6200 மெட்ரிக் டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில் நகர்ப்புறப் பகுதிகளில் வடிகால் அமைப்பு வசதிகள் செய்வதற்காக 1985-86ஆம் ஆண்டிற்குக் கோவை மாவட்டத்தில் இப்பணிகளை நிறைவேற்றிட ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா சுற்றும் இளைஞர்

"நாளைக்குத் திருமணத்துக்கு போக வேண்டும். ஆனால் ஒன்று. பஸ் ஸ்டாண்டிலிருந்து அரை பர்லாங் தூரம் நடக்க வேண்டியிருக்கும்...."

''நடக்க வேண்டுமா? என்னாலே முடியாது....''

நடை என்றாலே படை வருவது போன்று பயப்படும் பேர்வழிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் ஒரு இளைஞர், ஒரு பர்லாங் அல்ல, ஒரு கிலோ மீட்டர் அல்ல; பல ஆயிரம் கிலோமீட்டர்கள் கால்நடையாகவே நடந்து சாதனை புரிந்திருக்கிறார். அவர் பெயர் ராஜேந்திரப்பிரசாத் குப்தா.

உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த அவர் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். தந்தை மிட்டாய் வியாபாரி. இவருக்கு நான்கு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு. எல்லாருக்கும் திருமணமாகிவிட்டது. இவரே குடும்பத்தில் கடைசிப் பிள்ளை.

பத்தொன்பது வயதான குப்தாவுக்கு ஏதாவது ஒரு சாதனை புரியவேண்டும் என்ற எண்ணம் உந்தித் தள்ளியது. அதன் விளைவு? மூன்று ஆண்டுக்குள், இந்தியா முழுக்கக் கால்நடையாகவே நடந்து சாதனை புரிய வேண்டும் என்ற உறுதி மனத்திலே பிறந்தது.

1984ஆம் ஆண்டு மே மாதம் 25ந் தேதி, உத்திரப்பிரதேசத்திலிருந்து தனது கால்நடைப் பயணத்தைத் தொடங்கினார். இவரோடு மேலும் ஐந்து பேர் ஆவலுடன் கால்நடைப்பயணத்தைத் தொடங்கினார்கள். ஆனால் அவர்கள் மேலும் நடக்க முடியாமல் தொடக்கத்திலேயே தளர்ந்து போய் திரும்பிவிட்டார்களாம். இவர் ஒருவர் மட்டுமே விடா முயற்சியுடன், கொஞ்சங்கூட மனந்தளராமல், 30,900 கிலோ மீட்டர் வரை நடந்து வந்திருக்கிறார்! ஒரு மகிழ்ச்சி, இவர் தமிழ்நாட்டு மண்ணில் கால் வைத்தபோது இந்தத் தூரத்தை அடைந்திருக்கிறார்.

தொடக்கத்தில், அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களைச் சந்தித்துத் தாம் மேற்கொண்டுள்ள பயணம் பற்றிக் கூறியிருக்கிறார். அவர்,அவரது முயற்சியை வெகுவாகப் பாராட்டி இரண்டு தங்கப் பதக்கங்களை வழங்கி, ''உங்களைப்போல எல்லாரும் பல துறையிலும் முயன்றால் நாடு முன்னேறும்'' என்று தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாராம்.

உத்தரப் பிரதேசத்திலிருந்து தன் பயணத்தைத் தொடங்கிய திரு குப்தா, டில்லி, அரியானா, பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர், இமாசலப்பிரதேசம், திரிபுரா,மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி, ஆகிய மாநிலங்களையெல்லாம் கடந்து (நடந்து) தமிழ்நாட்டுக்கு வந்துள்ளார்—(இவரைச் சந்தித்த நாள்12.2.86).

இனி தமிழ்நாட்டிலிருந்து ஆந்திரம், ஒரிசா, மேற்குவங்காளம், பீகார், சிக்கிம், அசாம், நாகாலாந்து, நேபாளம், டில்லி பிறகு உத்திரப்பிரதேசம் அடைந்ததும் இவரது இந்தியக் கால்நடைப் பயணம் முடிவடைகிறது. அதாவது வருகிற மே மாதம் இப்பயணம் அநேகமாக முடிந்துவிடும்.

சென்னைக்கு வந்தபோது திரு குப்தா மேதகு ஆளுநர் திரு. எஸ்.எல். குரானா அவர்களைச் சந்தித்தார். அவர் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை அன்புடன் வழங்கி அவரது முயற்சியைப் பாராட்டினாராம்.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை இவர் சந்தித்தபோது, ''வருக வருக'' என்று வரவேற்று அவரது முயற்சியைப் பாராட்டும் வகையில் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாராம்.

புரசைவாக்கத்தில் ஒரு பள்ளியில் குழந்தைகள் உணவு சாப்பிடுவதைக் கண்ட இவர், அது பற்றி விசாரித்திருக்கிறார். 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்' என்று சொன்னார்கள். 'இது நல்ல திட்டம்' என்கிறார் திரு குப்தா. குப்தாவிற்குத் தமிழ்நாட்டு உணவு பிடிக்கிறது. இட்லி, சாம்பாரை அவர் விரும்பிச் சாப்பிட்டாராம்.

நம் தாய் நாட்டிற்குப் பெருமைத் தேடித்தரவேண்டும். ஏதாவது ஒரு துறையில் முன்னேற வேண்டும் என்ற ஆவலின் காரணமாக இத்தனை ஆயிரம் கிலோ மீட்டர் நடந்து வந்திருக்கும் திரு குப்தாவின் திருமணம் பற்றிக் கேட்டபோது, ''அந்த யோசனைக்கே இப்போது இடமில்லை.

என்னுடைய நினைவெல்லாம் சாதனை ..சாதனை..சாதனை'' என்கிறார் பெருமிதத்துடன். அன்றாடம், டைரி எழுதும் பழக்கமுடைய இவர், பிற்காலத்தில் அவற்றையெல்லாம் தொகுத்துக் கட்டுரை எழுதப் போகிறாராம்.

மாநிலம் விட்டு மாநிலம் நடந்தே செல்லும் இவர் அங்கெல்லாம் எங்கே தங்குகிறார்? காலை ஏழு மணிக்கே நடையைக் கட்டிவிடுவார். மாலை ஐந்து மணிக்குள் முடித்துக்கொள்வார். இரவு அந்தப் பகுதியில் உள்ள காவல்நிலையம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய அரசு அலுவலகங்கள் ஏதேனுமொன்றில் தங்குவார். இதற்கெல்லாம் முன்கூட்டியே அனுமதி வாங்கிக் கொள்வார்.

இவ்வளவு தூரம் நடையாய் நடந்துங்கூட அவருக்கு நோயோ நொடியோ ஏற்பட்டதில்லை. கொஞ்சம் சோர்வு ஏற்படும்போது, சிறிது இளைப்பாறி விட்டு மீண்டும் நடைபோடத் தொடங்கி விடுவாராம்!

இமாசலப் பிரதேசத்தில் இவர் நடந்து கொண்டிந்தபோது, உணவு கிடைக்காமல் மூன்று நாட்கள் அவஸ்தைப்பட்டிருக்கிறார். வழியில் செடி கொடிகளில் காய் கனிகளை உண்டு காலந் த்ள்ளியிருக்கிறார்.

"இத்தனை மாநிலங்களையும் கடந்து வந்திருக்கிறீர்களே, அப்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?"

''நாமெல்லாம் ஒரே சகோதரர்கள்-ஒருதாய் வயிற்று மக்கள். எல்லா இடங்களிலும் என்னை அன்புடன் வரவேற்றார்கள். ஆதரித்தார்கள். பழகினார்கள். நான் எல்லா மதத்தாரையும் சந்தித்தேன். அவர்களெல்லாம் என் முயற்சியைப் பாராட்டினார்கள்; நல்வழி காட்டினார்கள். தமிழ்நாட்டில் ஏறக்குறைய இரண்டு மாதங்கள் நடந்திருக்கிறேன். மற்ற மாநிலங்களைப் போலத் தமிழ்நாடும் என்னை மிகவும் கவர்ந்தது. தமிழ்நாட்டு மக்களை நான் மறக்க மாட்டேன்''

—என்று மகிழ்ச்சியுடன் கூறும் திரு குப்தாவின் பெயர், உலகச் சாதனையாளர்களின் பெயர்கள் இடம் பெறும் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது!

பேட்டி : பி.வி. கிரி

எல்லாருக்கும் நல்வாழ்வு

வி. புண்ணியமூர்த்தி
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

20ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் எல்லோருக்கும் நல்வாழ்வு என்னும் குறிக்கோளை எட்டுவதற்கு இப்பொழுது தேசிய நிலையிலும் அனைத்துலக நிலையிலும் தீவிர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. உலக நல்வாழ்வு நிறுவனம் நடப்பாண்டு இறுதிக்குள் எல்லாருக்கும் உணவு என்னும் குறிக்கோளோடு நல்வாழ்வுப் பணிகளை நிறைவேற்றுவதாகச் செயல்பட்டு வருகிறது.

1986ஆம் ஆண்டு இறுதிக்குள் இன்றியமையாத மருந்துகள் போதுமான அளவு கிடைக்கச் செய்வதும் இந்த நிறுவனத்தின் குறிக்கோளாகும். 1990ஆம் ஆண்டு இறுதிக்குள் தூய குடிநீர், அடிப்படைச் சுகாதாரம் எல்லாக் கிராமங்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பது இதன் இலட்சியமாகும். தட்டம்மை, கக்குவான், வலிப்பு, இளம்பிள்ளை வாதம், காசம், தொண்டை சதை வளர்ச்சி போன்ற 6 பொதுவான நோய்களுக்கு எதிராகக் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடும் பணியும் 1990ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்யப்பட வேண்டுமென்பது உலக நல்வாழ்வுக் கொள்கையின் ஓர் அம்சமாகும்.

இந்த அடிப்படையில் பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டத்தில் நல்வாழ்வுப் பணிகள் இப்பொழுது தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்ட பிறகு பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தேவகோட்டைப் பகுதியிலிருந்த ஆரம்பச் சுகாதார நிலையம் மாவட்டப் பிரிவினையால் நடந்த கிராமச் சீரமைப்பில் இராமநாதபுரம் பகுதியோடு இணைந்துவிட்டது. எனவே, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் தொடங்குவதற்கு இப்பொழுது முயற்சி நடந்து வருகிறது.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பொதுச் சுகாதாரக் களப் பணியாளர் மூலமாகச் செய்து வரும் நல்வாழ்வுப் பணிகளின் மூலம் கிராமப் பகுதிகளில் இறப்பு விகிதம் இப்பொழுது குறைந்து வருகிறது. தேசிய நிலையில் இறப்பு விகிதம் 14.1 ஆகும். பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டத்தில் இறப்பு விகிதம் 14.5 ஆகும். கி.பி. 2000த்தில் இதை 9 ஆக குறைக்க வேண்டுமென்பது குறிக்கோள். குழந்தைகள் இறப்பு விகிதம் தேசிய நிலையில் 1000க்கு 129 ஆகும்- பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டத்தில் இப்பொழுது 84.9 ஆக உள்ளது. பிறப்பு விகிதம் தேசிய நிலையில் 33.2 ஆகும். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலோ இப்போதைய விகிதம் 26.9 தான்.

களப்பணியாளர்களுக்குப் பல்நோக்குச் சுகாதாரத் திட்டத்தின் கீழ் தீவிரப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் இதுவரை சுமார் 300 களப்பணியாளர்க்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது சாலைக்கிராமம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் 10 களப்பணியாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டத்தில் நல்வாழ்வுத் திட்டங்களை தீவிரப்படுத்துவதற்காக 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையமும் 5000 மக்கள் தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையமும் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டத்தில் 11 ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் நல்வாழ்வுப் பணிகளைக் கவனிப்பதற்கு 207 துணைச் சுகாதார நிலையங்கள் தேவைப்படுகின்றன. இப்பொழுது 156 துணைச் சுகாதார நிலையங்கள்தான் செயல்பட்டு வருகின்றன. இன்னும் 51 துணைச் சுகாதார நிலையங்கள் தேவைப்படுகின்றன. ''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு'' என்றார் வள்ளுவப் பெருந்தகை. அந்த வகையில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் இப்பொழுது பீடுநடை போட்டு முன்னேறி வருகிறது. 20ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் எல்லாருக்கும் நல்வாழ்வு என்ற குறிக்கோள் எட்டப்பட்டுவிடும்.

கண்ணுக்கு விருந்தாகும் கல்லட்டி அருவி

இரெ. அண்ணாதுரை
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

'ஆல்ப்ஸ்' மலைச் சிகரங்கள் போன்ற அழகிய மலை முகடுகள், பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற அடர்த்தியான மரங்கள், உடலுக்கும் உள்ளத்திற்கும் உவகை தரும் மெல்லிய பூங் காற்று. அவ்வப்போது ஆங் காங்கே தென்படும் மான் கூட் டங்கள் மற்றும் வனவிலங்குகள். இத்தனைக்கும் நடுவே கண் ணுக்குக்குளிர்ச்சியாய், விருந்தாய் அமையும் வெள்ளிக் கம்பிகளைப் பரப்பியதுபோன்ற அழகிய அருவி. இவையனைத்தும் ஒரே இடத்தில் காண்பதற்கான சுற்று லாத் தலம் தான் 'கல்லட்டி' அருவி.

ஊட்டியிலிருந்து புகழ்பெற்ற வன்விலங்கு சரணாலயமான முது மலைக்குச் செல்லும் சாலையில் 13 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்த இப்பகுதியை அழகிய சுற்றுலா மையமாக உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியுள் ளார். அதன்படி இதனை அழகிய சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு



நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்ட உலாத் தலங்களில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இத் தலத்திற்கு மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளிலிருந்தும் பொது மக்கள் தினமும் வந்து செல்கின்ற னர்.

சுற்றுலாப்பயணிகளின் வசதிக் காகத் தற்போது அருவி அருகே செல்ல சாலைவசதி செய்யப்பட் டுள்ளது. மேலும் பேருந்துவழி, இருக்கை வசதிகொண்ட காட்சி முனைக்கூடம், குடிநீர் வசதி, சிறு பூங்கா, கழிவறை, மாற்றுடை உடுத்தும் அறை, ஊர்தி நிறுத்து மிடம், பேருந்து, நிழற்குடை ஆகிய எல்லா வசதிகளும், வளர்ச் சிப்பணிகளும் மலைமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 50 ஆயிரம் ரூபாய் செலவில் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

மக்கள் தொகைக் கருத்தரங்கு

"குடும்ப நலத் திட்டம் என்றாலே அறுவைச் சிகிச்சை தான் என்று பலர் நினைக்கிறார்கள். அது சரியல்ல. இந்தத் தவறான எண்ணத்தை மாற்ற வேண்டும்'' என்று மக்கள் தொகைக் கருத்தரங்கத்தைத் துவக்கி வைத்து உரையாற்றுகையில் தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி, இ.ஆ.ப. கூறினார். கல்லூரிப் பேராசிரியர்களுக்கான மக்கள் தொகையியல் கல்விக் கருத்தரங்கம் சென்னைக் காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் 18-2-86-ல் நடைபெற்றது. துவக்க விழாவுக்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைச் செயலாளர் திரு ஆர். சண்முகம் இ.ஆ.ப. தலைமை தாங்கினார். தமிழ்நாடு அரசின் குடும்பநலத்துறை, சென்னை மாநகராட்சி, சென்னைப் பல்கலைக் கழக வயது வந்தோர் மற்றும் தொடர் கல்வித்துறை ஆகியவை இணைந்து இக் கருத்தரங்கத்தை நடத்தின.

தலைமைச் செயலாளர் மேலும் பேசியதாவது:

''குடும்ப நலத்திற்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றில் அறுவைச் சிகிச்சையும் ஒன்று. அறுவைச் சிகிச்சை மட்டுமே குடும்பநல மல்ல.

''நாம் மற்றவற்றை எல்லாம் திட்டமிட்டுச் செய்கிறோம். வீடு கட்ட வேண்டுமானால் எவ்வளவோ திட்டமிடுகிறோம். நம்மிடம் உள்ள பண வசதி, விலைவாசி எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு திட்டமிடுகிறோம். ஒரு சைக்கிள் வாங்குவது என்றால் திட்டமிட்டுச் செயலாற்றுகிறோம். அவ்வாறே குடும்ப நலத்தையும் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

''மக்கள் தொகை பெருகுவதால் நாட்டுக்கும், உலகத்திற்கும் பெரிய சிக்கல் உருவாகும்' என்று சாதாரண மக்களிடம் போய் அவர்களுக்குப் புரியாத வகையில் பேசுவதால் பயனில்லை. அவர்களுடைய பிரச்சினையை அவர்களுக்குப் புரிகிற வகையில் எடுத்துச் சொன்னால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

''ஒரு சாதாரண உதாரணம் போதும்.

''எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள். கொஞ்ச காலத்துக்கு முன்பு, என்னுடைய இரண்டாவது பையன் தனக்கு ஒரு தம்பி வேண்டும் என்று கேட்டான். நான் அவனிடம், ''இப்போது காலையில் எத்தனைத் தோசை சாப்பிடுகிறாய்?'' என்று கேட்டேன்.

''எனக்கு மூன்று தோசையும், அண்ணனுக்கு மூன்று தோசையும் கிடைக்கிறது,'' என்றான்.

''உனக்கு ஒரு தம்பி வந்துவிட்டால், உன் தோசையில் அவனுக்குப் பங்கு கொடுக்க வேண்டியது வருமே. அப்போது உனக்கு இரண்டு தோசைதானே கிடைக்கும். இப்போ சொல், உனக்கு தம்பி வேண்டுமா தோசை வேண்டுமா?'' என்று கேட்டேன்.

பிறகு ''எனக்குத் தம்பி வேண்டாம். தோசைதான் வேண்டும்'' என்றான்.

இதைப் போலவே அவரவருக்குப் புரிகிற வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போது அதை ஏற்றுக் கொள்வார்கள்.

நாம் எந்த மக்களுடன் பழகுகிறோமோ அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு ஏற்ப, அவர்களின் சூழ்நிலைக்கு ஏற்ப பிரச்சாரம் செய்ய வேண்டும்.

அதிகக் குழந்தைகள் இருந்தால் அவர்களை வளர்க்கத் தேவைப்படுகிற பணச் செலவைப் பார்க்க வேண்டும். மூன்று வயது வரை ஒரு குழந்தைக்கு மாத பராமரிப்புச் செலவு ரூ. 120 ஆகிறது. நான்கு வயது முதல் ஆறு வயது வரை மாதம் ரூ. 162 ஆகிறது. 10 வயது முதல் 12 வயது வரை ஒரு மாதத்திற்கு ரூ. 220 ஆகிறது. இப்படி ஒரு குழந்தையை 20 வயது வரை வளர்க்க ரூ. 50 ஆயிரம் ஆகிறது. இந்த நிலையில் குழந்தைகள் அதிகம் இருந்தால் ஒவ்வொரு குடும்பமும் என்ன வாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போது அளவான குடும்பம் போதும் எனத் திட்டமிட்டு வாழும் எண்ணம் பிறக்கும்.

''அடிக்கடி குழந்தை பெறுவதால் தாய்மார்களின் உடல்நலம் பாதிக்கிறது. உடல் நலிவுறுகிறது. எழில் மறைகிறது. அது மட்டுமல்ல, ஆறு குழந்தைகள் பெறுகிற தாய்மாருக்குப் புற்றுநோய் வரக்கூடிய வாய்ப்பு பத்து மடங்கு அதிகமாக உள்ளது. இதைத் தாய்மாருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அது மட்டுமல்ல; வாரிசுகள் பெருகுவதால் ஒவ்வொரு குடும்பத்தில் நிலமும் துண்டு துண்டாகிச் சிறுத்துப் போகிறது. பெரியார் மாவட்டத்தில் உள்ள அய்யம்புதூரில் உள்ளவர்கள் குடும்பத்திற்கு ஒரு வாரிசு பிறந்தவுடனேயே அடுத்து குழந்தை பெறாமல் நிறுத்திக் கொள்கிறார்கள். அந்த எடுத்துக் காட்டை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும்.

''முதல் குழந்தை அவசியம். இரண்டாவது குழந்தை ஆடம்பரம். இதை நான் சொல்லும் போது, எனது இரண்டாவது பையனைப் பார்த்து 'எனது முதல் பையன் ''அதோ போகிறது ஆடம்பரம்'' என்று கூறுகிறான்.

''இப்படிப் புரிந்து கொள்கிற வகையில் மக்களுக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டும்.''

தலைமை வகித்த மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறைச் செயலாளர் திரு ஆர். சண்முகம், இ.ஆ.ப. பேசுகையில் "மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் கி.பி. 2000ல் இந்தியாவின் மக்கள் தொகை 130 கோடியாகி சிக்கல்கள் பெருகிவிடும். எனவே மக்கள் தொகைப் பெருக்கத்தின் பல்வேறு கூறுகளையும் அதன் விளைவுகளையும் குறித்து மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்'' என்றார்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு அனந்த பத்மநாபன் பேசும் போது, ''மக்கள் தொகைக் கல்வி பொருளாதாரம், வர்த்தகவியல், வரலாறு ஆகிய பாடங்களோடு இணைய வேண்டும்'' என்றார்.

பின்னர் நடந்த கருத்தரங்க முடிவில் மக்கள் தொகையியல் கல்வியை கல்லூரிகளின் பாடத் திட்டத்தில் இணைக்க வேண்டுமென வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கருத்தரங்கில் சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் ஆர். ஜெயகோபால், டாக்டர் ஆர். அனந்த சயனம், காயிதே மில்லத் மகளிர் கல்லூரி முதல்வர் ஆர். இராஜேஸ்வரி, எஸ். சி. ஆர். டி. யைச் சார்ந்த டாக்டர் ராணி கந்தசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

கல்லூரிப் பேராசிரியர்களும், ஏராளமான மாணவியரும் வந்திருந்தனர். மாவட்ட மக்கள் கல்வி தகவல் அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

குடும்பநலத்துறை இணை இயக்குநர் திரு கோ. இராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். சென்னை மாவட்ட மக்கள் கல்வி - தகவல் அலுவலர் திரு எஸ். மெய்யப்பன் கருத்தரங்கத்திற்குரிய ஏற்பாடுகளைக் கவனித்து, கருத்தரங்கத் துவக்கத்தில் குறிப்புரை வழங்கினார். குடும்பநலத்துறை உதவி இயக்குநர் திரு சி. நல்லரசு நன்றியுரை யாற்றினார்.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்களை, கடற்படைத் தளபதி திரு ஆர்.எச். தாகிலியானி அவர்கள் 7.3.86 அன்று கிண்டி ராஜ் பவனில் சந்தித்தார்.

படமும் - செய்தியும்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர் களிடம், ரிசர்வ் வங்கிப் பொன் விழாச் சிறப்பு நாணயங்களை வங்கியின் மேலாளர் திரு ஆர். ஜானகிராமன் அவர்கள் 5.3.86 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் உடன் உள்ளார்.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை,கடற்படைத்தளபதி திரு ஆர்.எச்.தாகிலியானி அவர்கள் 7.3.86 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ஆகியோர் உடன் உள்ளனர்.

மாவட்ட குடும்ப நல மையத்துக்கு ரானே எமிட்ராஸ் நிறுவனம் சென்னையில் அன்பளிப்பாக வழங்கிய வண்ணக் காசட் ரிகார்டரை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.



அறிவியல் சாளரம்

விஞ்ஞானம்

பாண்டிச்சேரி அரசும், விஸ்வேஸ்வரையா தொழில் நுட்பக் கழகமும் இணைந்து பாண்டிச்சேரியில் தென் இந்திய அறிவியல் கண்காட்சியை நடத்தின. இது 1986 ஜனவரி 24 முதல் 28 வரை நடந்தது. இந்தக் கண்காட்சியில், தென்மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 250 உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டன. இதில் வட ஆர்க்காடு மாவட்டம், இராணிப்பேட்டை, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும் கலந்துகொண்டது.

இப்பள்ளி, காட்சிக்கு வைத்த அறிவியல் சாதனங்கள்:

1. புதுமை அறிவிப்பு (The Wise Signaling) 2. பாதுகாப்பு பம்ப் ஸ்டவ் (Safety Device for pumping stove) 3. இரசாயன இராக்கெட்டு (Chemical Rocket).

பத்தாம் வகுப்பைச் சேர்ந்த மாணவன் டி.விஷ்ணு என்பவனுக்கு'இராசாயன இராக்கெட்டு' என்ற கருவிக்காகத் தமிழ்நாடு உதவித்தொகை கிடைத்தது. பத்தாம் வகுப்பைச் சேர்ந்த மற்றொரு மாணவன் ஆர்.சத்தீஷ் குமார் என்பவனுக்குச் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.

புதுமை அறிவிப்பு

நம் வீட்டிற்கு வருபவர், அழைப்பு மணியை இயக்கித் தமது வருகையைத் தெரிவிக்கிறார். உடனே சென்று கதவைத் திறக்க இயலாத நிலையில் நாம் குளியல் அறையிலோ அல்லது கழிப்பு அறையிலோ இருக்கலாம். முக்கியப் பணியிலும் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் வந்தவர் தொடர்ந்து ஒலி எழுப்பி, சங்கடத்தை உண்டு பண்ணலாம். உடனே கதவைத் திறக்காவிடில் வந்தவர்க்கு எரிச்சல். தொடர்ந்து இயக்குவதால் ஒலிப்பான் பழுதுபடவும் வாய்ப்புண்டு. இதனைத் தவிர்க்க புதியதொரு மின் இணைப்பு கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்யலாம்!

மின்சாரமணி, இரண்டு ஸ்விட்சுகள், இரண்டு மின்விளக்குகள் ஆகியவைகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. இல்லம் தேடி வருபவர், ஸ்விட்சை அழுத்தியதும், உட்புறமுள்ள ஒலிப்பான் ஒலி எழுப்புகிறது. உடனே செல்ல இயலாத வீட்டுச் சொந்தக்காரர், முதல் சுவிட்சை இயக்குகிறார். இப்போது வாயிற்புறமுள்ள பச்சை விளக்கு எரிகிறது. அதன் கீழ் **"தயவு செய்து காக்கவும்"** என்ற அறிவிப்பு மூலம் வந்தவர் செய்தியை உணர்கிறார். அதே சமயம் அவர் தொடர்ந்து சுவிட்ச்சை இயக்கினாலும் ஒலிப்பான் இயங்காது.

வீட்டுச் சொந்தக்காரர் பூட்டிவிட்டு, வெளியே செல்ல நேரின் இரண்டாவது சுவிட்சைப் போட்டுவிட்டுச் செல்கிறார். வீட்டுக்கு வருபவர் கதவு உட்புறம் பூட்டப்பட்டுள்ளது அறியாமல் சுவிட்ச்சை அழுத்துகிறார். அப்போது ஒலிப்பான் ஒலிப்பதில்லை. வெளிப்புறமுள்ள சிவப்புவிளக்கு எரிந்து, வீட்டுச் சொந்தக்காரர் இல்லாமையை உணர்த்துகிறது. விளக்கின் கீழ் **"பிறகு வரவும்"** என்ற அறிவிப்பு மூலம் வந்தவர் செய்தி அறிகிறார். இவ்வாறு புதுமையான முறையில் ''கேள்வி காட்சி'' மூலம் இருவரிடையே கனிவான முறையில் செய்தி பரிமாறிக்கொள்ளப்படுகிறது.

இதனால் என்ன நன்மை?

1. இச் சாதனத்தை அமைக்க ஆகும் செலவு குறைவு. 2. வீட்டிலிருப்பவர், வருபவர்-இருவரிடையே குழப்பம் மற்றும் மன எரிச்சல் ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. 3. இத்தகைய ''செய்தி பரிமாற்றங்கள்'' மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், இரயில் நிலையங்கள் ஆகிய இடங்களிலும் செய்து கொள்ளலாம்.

SAFETY DEVICE FOR PUMPING STOVES

(பாதுகாப்பான பம்ப் ஸ்டவ்)



பாதுகாப்பான பம்ப் ஸ்டவ்

பம்ப் ஸ்டவ் வெடித்துப் பல பெண்கள் இறப்பது அன்றாடச்

புதுமைகள்

செய்தியாகிவிட்டது. விரைவில் சமையல் முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில், அதிகத் தீச்சுவாலையை உண்டாக்க, மேலும் மேலும் ''பம்ப்'' செய்வதால் அழுத்த அதிகரிப்பு ஏற்பட்டு, அடுப்பு வெடிக்கிறது. இதைத் தடுக்க எளிய அமைப்பொன்றை ஏன் இணைக்கக் கூடாது என்று பலநாட்கள் சிந்தனை செய்ததில், 'பாதுகாப்பு அமைப்பு' பற்றிய தீர்வு வந்தது.

பம்ப் ஸ்டவ் வெடிப்பதற்கு இரு காரணங்கள் உள்ளன. 1. அதிகமாக பம்ப் செய்வதால் மண் எண்ணெய்க் கலனில் காற்றின் அழுத்த அதிகரிப்பு ஏற்பட்டு வெடித்தல் 2. எண்ணெய் வெளியேறும் சிறு துளையில் (நிப்பிள்) அடைப்பு ஏற்பட்டிருப்பின், அழுத்த அதிகரிப்பு ஏற்பட்டு வெடித்தல். மிகுதியாக உள்ள காற்றினை வெளியேற்றுவதன் மூலம் விபத்து தடுக்கப்படுகிறது.

மண் எண்ணெய்க் கலனின் மேற்புறத்தில் 'சைக்கிள் வால்வ்' மற்றும் 'பிரஷர்குக்கரின்' ரப்பர் வால்வ் ஆகிய இரண்டு அமைப்புக்களையும் இணைப்பதன் மூலம் காற்றழுத்தத்தைக் கட்டுப்படுத்தலாம். எவ்வளவு 'பம்ப்' செய்தாலும், சைக்கிள் வால்வானது அதிகப்படியான காற்றை வெளியேற்றி, தீச்சுவாலை குறிப்பிட்ட அளவே எரியுமாறு கட்டுப்படுத்துகிறது. காற்றின் அழுத்தம் மிகவும் அதிகமாகும்போது, ''குக்கர் வால்வ்'' திறந்து, கலனில் உள்ள எல்லாக் காற்றையும் வெளியேற்றி, சுவாலையை அணைத்து விடுகிறது. இதனால் விபத்து தடுக்கப்படுகிறது.

சிறப்பு அம்சங்கள் :

1. ஸ்டவ் வெடித்து தீக்காயமும், உயிரிழப்பும் ஏற்படுவது தடுக்கப்படுகிறது. 2. பெண்கள் தயக்கமின்றி 'ஸ்டவ்' வாங்கிப் பயன்படுத்தலாம். அடுப்பின் விற்பனையும் பெருகும். 3. பாதுகாப்புக் கருவியினை இணைக்க ஆகும் செலவு மிகவும் குறைவு (ரூபாய் பத்து) 4. ஒரு வால்வ் பழுது அடைந்தாலும், மற்றொன்று இயங்குகிறது.

இரசாயன இராக்கெட்

விரிவுரை முறையில் பாடம் கற்பிப்பதால் மாணவர்கள் புரிந்து கொள்வது மிகக் குறைவு. மேலும் ஆசிரியரின் போதனை பாடத்தில் ஈடுபாட்டினையும் ஆர்வத்தினையும் ஏற்படுத்தாது. எடுத்துக்காட்டாக ஹைட்ரஜன் வாயு தயாரிக்கும் முறை, அதன் இயற்பண்புகள் பற்றி எட்டு, ஒன்பது வகுப்புகட்குக் கற்பிக்கும் ஆசிரியர் சற்றுப் புதுமையைக் கையாள்வதன் மூலம் மாணவர்கள் கவனத்தைக் கவர்ந்து, அறிவியல் சிந்தனையைத் தூண்டலாம். அறிவியல் கூட வசதி இல்லாத கிராமப்புறப் பள்ளிகளிலும் அறிவியல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட துணைக் கருவிகளைத் தயாரித்துச் சிறந்த முறையில் அறிவியல் கற்பிக்கலாம்.

துத்தநாகத்துடன் நீர்த்த ஹைட்ரோ குளோரிக் அமிலத்தின் வினை, ஹைட்ரஜனின் இயற்பியல் பண்புகள் மற்றும், மிதத்தல் விதி.

தீபாவளியின்போது ''கேப்'' என்றபட்டாசினை வெடிக்கச் சிறுவர்கள் 'இராக்கெட்'' போன்ற வடிவமுள்ள சிறிய பிளாஸ்டிக் பொம்மையைப் பயன்படுத்துகிறார்கள். அந்த இராக்கெட், உயரமான வாயு ஜாடியிலுள்ள நீர்த்த ஹைட்ரோ குளோரிக் அமிலத்தில், மேலும்கீழும் சென்று வருகிறது. முதலில் இராக்கெட் நீரில் செங்குத்தாக மிதப்பதற்குத் தேவையான அளவு ஈயரவைகளை அதனுள் போட வேண்டும். பிறகு சிறிய துத்தநாகத் துண்டினை பொம்மைக்குள் போடவேண்டும். உயரமான கண்ணாடி ஜாடியினுள் நீர்த்த ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை ஊற்றி, இராக்கெட்டை அதனுள் மிதக்கச் செய்ய வேண்டும். இப்போது இராக்கெட்டினுள் அமிலம் நிரம்பி, எடை அதிகரிப்பதால், மிதத்தல் விதிப்படி, ஜாடியில் கீழ்நோக்கிச் செல்கிறது. இப்போது துத்தநாகம், ஹைட்ரோ குளோரிக் அமிலம் இவற்றிடையே வேதி வினை நிகழ்ந்து, ஹைட்ரஜன் வாயு வெளியாகிறது. இந்த வாயு இராக்கெட்டினுள் புகுந்த அமிலத்தை இடப் பெயர்ச்சி செய்வதால், அதன் எடை குறைந்து, ஜாடியில் மேல்நோக்கி வருகிறது. மீண்டும் அமிலம் உட்புகுவதால், இராக்கெட் கீழ்நோக்கிச் செல்கிறது. துத்தநாகம் முழுவதும் வினைபடும் வரை, இராக்கெட் மேலும், கீழும் பயணம் செய்கிறது. பார்ப்பதற்கு மிகவும் வேடிக்கையாகவும், புதுமையாகவும் இருக்கும்.

1. குழந்தைகள் கவனத்தைக் கவர்ந்து, சிந்தனையைத் தூண்டும் வகையில் இக்கருவி அமைந்துள்ளது. 2. விளையாட்டு முறையில் கற்பிக்கப்படும் பாடம், மனத்தில் என்றும் பசுமையாக இருக்கும். 3. இதற்காக ஆகும் செலவு மிகக் குறைவு. ஆய்வக வசதியற்ற கிராமப்புறப் பள்ளிகளிலும் பயன்படுத்தலாம்.

கங்கை தூய்மைப் படுத்தப் படுகிறது

சுகாதாரம் மிக்க சூழ்நிலையை உருவாக்கும் பணியிலும், சரியான உயிரினச் சமன்பாட்டினை உருவாக்கும் முயற்சியிலும் இந்தியா முன்னணியில் உள்ளது. இந்த நடவடிக்கைகளில் நதிகளைத் தூய்மைப் படுத்துவதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இந்த நடவடிக்கை கங்கையைத் தூய்மைப்படுத்தும் பணியோடு துவங்குகிறது. கங்கை நதியின் பள்ளத்தாக்கு 9 இலட்சம் சதுரமைல் பரப்புள்ளது. நதியின் மொத்த நீளம் 2525 கிலோ மீட்டராகும். இந்தியாவின் மொத்தப் பகுதியில் 26 சதவித இடத்தைக் கங்கை கடந்து வருகிறது. நாட்டின் மொத்த நீர் வளத்தில் கங்கையின் பங்கு 25 சதவீதம் ஆகும்.

நதிகளைத் தூய்மைப்படுத்தும் பணி அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மன் ஆகிய நாடுகளில் துவங்கியுள்ளது. ஆனால் அங்கெல்லாம் உள்ள நதிகள் – கங்கையுடன் ஒப்பிடும்போது மிகச் சிறியவை ஆகும்.

கங்கையின் கரையில் மொத்தம் 100 நகரங்கள் உள்ளன. உத்திரப்பிரதேசத்தில் 26ம், பீகாரில் 15ம், மேற்கு வங்கத்தில் 59ம், உள்ளன. இந்த நூறு நகரங்களில் இருந்து சாக்கடை நீரும், தொழிற்சாலைக் கழிவுகளும் கங்கையில் வந்து கலக்கின்றன.

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட அளவில் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மட்டும் 29 ஆகும். இவை, கங்கையை மாசுபடுத்துவதைத் தடுத்துவிட்டால் கங்கையின் அசுத்தங்கள் 86 சதவீதம் குறைந்துவிடும். இந்த நகரங்களின் கழிவுகள் பற்றிய பிரச்சினைக்கு முதலில் தீர்வுகாணும் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளின் முதல் கட்டமாக இது அமையும்.

மொத்தத்தில் இந்தத் திட்டத்திற்கு ரூ. 292 கோடி செலவாகும் எனத் தெரிகிறது.

ஆதாரம் : பத்திரிக்கை தகவல் அலுவலகம்

குடும்ப நலத்திட்டம்

மக்கள் இயக்கமாக மலர...

குடும்பநலத் திட்டம் மக்கள் இயக்கமாக மாறுவதற்கு மத்திய அரசு மிகவும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. 1986ஆம் ஆண்டு துவக்கத்தில் பஞ்சாயத்துசபை அளவிலான மக்கள் குழுக்கள் பல ஏற்படுத்தப்படவுள்ளன. இக்குழுக்களில் ஆசிரியர்கள், கிராம முதியவர்கள், ஊர்ப் பிரமுகர்கள், மருத்துவர்கள் ஆகியோர் இடம் பெறுவர். குடும்பநல ஊழியர்களுக்கு இவர்கள் ஆலோசனை வழங்குவர். சுமார் 75,000 மக்கள் குழுக்கள் அமைக்கப்படும்.

இக்குழுக்கள் செயல்படுவதற்காக 10-லிருந்து 15 கோடி ரூபாய் வரையில் செலவிடப்படும். குடும்பநலத் திட்டங்களை செயல்படுத்துவதில் மற்ற அமைச்சர்கள் மற்றும் பிற துறைகளுடனும் விவாதம் செய்யப்படும். மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தில் அங்கன்வாடிகளில் பணிபுரியும் ஊழியர்கள் குடும்ப நலத்திட்டங்களை அமல்படுத்துவதில் துணைபுரிவர்.

கி.பி.2000ஆம் ஆண்டிற்குள் பிறப்பு விகிதம் நிலையாக இருக்கும் நிலைமை ஏற்படும். பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 27 என்றும், இறப்பின் விகிதம் ஆயிரத்திற்கு 9 என்றும் அமையும். அவ்வாண்டிற்குள் சுமார் 160 மில்லியன் தம்பதியர் குடும்பநலக் கட்டுப்பாட்டைச் செய்து கொள்வார்கள். 1985ஆம் ஆண்டில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டோர் தொகை 32 சதவீதமாகவுள்ளது. இது பின்னர் 42 சதவீதமாக உயரும்.

—பத்திரிகை தகவல் அலுவலகம்



நூல் நயம்

'காதலுக்குக் கண் இருக்கு'

ஆசிரியர் : ராஜேஷ் குமார்

வெளியீடு : மயிலவன் பதிப்பகம்
எம்.கே. அம்மன்
கோவில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை ரூ. 10 பக்கம் : 144

காதலுக்குக் கண் இருக்கு. இன்பபுரி இருபது கிலோமீட்டர் என்ற தலைப்பில் இரு கதை களைக் கொண்ட நூல் இது.

இரண்டுமே சஸ்பென்ஸ் கதைகள். கதை முழுவதும் எதிர்பார்ப்புகளோடும், அடுத்து என்ன நிகழும் என்ற ஆவலைத் தூண்டும் வண்ணமும் எழுதப் பட்டிருக்கின்றன.

புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தால் முடித்துவிட்டுத் தான் வைக்கத் தோன்றும்.

இரண்டு கதைகளின் முடிவும் சரியாக, பிசிரின்றி முடிந்திருக் கின்றன.

ஆனால் வைஷ்ணவியையும், ஜெயப்பிரகாசத்தையும் எண்ணி தம் மனம் துன்பம் கொள்ளவே செய்கிறது.

—அ. மருதவிநாயகம்

பாலராமாயணம்

ஆசிரியர்: பண்டித கல்யாண ராமன்,

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
த.பெ.எண்.617
மயிலாப்பூர், சென்னை-60004

விலை; ரூ.8.50 பக்கம்:108

இளம் வயதிலேயே குழந்தை களுக்கு நல்ல நல்ல கதைகளைச் சொல்வதன் மூலம், அவர்களை பிற்காலத்தில் நல்லவர்களாக வல்லவர்களாக வாழவைக்க முடியும். 'பாலராமாயணம்' என்னும் இந்த நூல் குழந்தைகளை நல்ல வர்களாக்க உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

குழந்தைகள் படித்து அறிந்து கொள்வதற்கேற்ப, எளியநடை யில் எழுதப்பட்ட இந்நூலில், பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் ஆகி யவை நன்கு விளக்கப்பட்டுள்ளன. நூலின் இறுதியில், கதையின் மூலம் அறியக்கூடிய நீதிகளைத் தொகுத்திருப்பது குறிப்பிடத்தக் கது.

பிள்ளைத் தோப்பு

ஆசிரியர்: ஏடிஎம்.பன்னீர் செல்வம்
24-பி,பெருமாள் நகர்
திருவண்ணாமலை-606 602.

விலை: ரூ.6 பக்கம்: 80

புதுக்கவிதைகளின் தொகுப்பு நூல் இது. நூல் முழுவதும் கவிஞ ரின் சிந்தனைச்சிதறல்கள் தெரிக் கின்றன. இன்றைய சமுதாயக் காட்சிகள் கவிதை வடிவம் பெற் றிருக்கின்றன.

வள்ளுவன்—
இனிய பூபாளத்தின்
மூத்த முகவரி

இளங்கோ—
வினைகளை விளக்கிய வீணை

கம்பன்—
சொல் ஜலதரங்கத்தின்
சுகப்பிரும்மம்.

என்று எழுதிச் செல்லும் கவிஞ ரின் கை நூலில் பல முத்திரை களைப் பதித்திருக்கிறது.

'தேடல்'

ஆசிரியர் : பொன்னீலன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-98.

விலை: ரூ.8.00 பக்கம்: 125.

கடலோரக் கிராமம் ஒன்றின் மக்களின் வாழ்க்கையை மைய மாகக் கொண்ட கதை. மீனவர் களின் மிகச் சிறிய மன உணர்வு களைக் கூட மிக ஆழமாகப் புரிந்து கொண்டு எழுதிய பிர மிப்பை உண்டாக்குகிறது கதை யின் போக்கு. அவர்கள் உணவு, உடை, பழக்க வழக்கங்கள், பேச்சு, ஆகியவற்றை மண் வாசனையோடு (கடல் வாசனை யும் கூடத்தான்) சற்று தூக்க லாகவே எழுதி முரட்டு மனிதர் களின் மென்மையான இதயங் களை மிக அற்புதமாகத் தொட்டுக் காட்டி நம்மை வியக்க வைக்கிறார் ஆசிரியர்.

எங்கோ ஓர் மீனவ கிராமத்தில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங் களை நாம் நேரில் பார்ப்பது போன்ற எழுத்தாற்றல். அக்கிரா மத்து மீனவர்கள் மீனைத்தேட, மிக்கேல் கட்டு மரத்தை விட்டு விசைப்படகைத் தேட, தாசன் சில்வியைத் தேட, சில்வி ரூபனைத் தேட.... ரூபன் ரொசாரியோ மகனைத் தேட....

இப்படிப் பல தேடல்களைக் கொண்ட இக்கதைக்குத் 'தேடல்' என்ற பெயர் மிகப் பொருத்தம். படித்து முடித்தபோது ஒரு நல்ல நாவலைப் படித்த நிறைவு.

—ந. குமாரசாமி

தென்றல்

ஆசிரியர்: தி.நா.அறிவுஒளி

வெளியீடு: தமிழ் ஆய்வரங்கம்,
என்.எச். 2/25
மறைமலைநகர்-603 209

விலை ரூ. 25 பக்கம்: 344

தமிழ்க் கவிதையுலகில், உள் ளங்கை உருளைக் கிழங்காய் விளங்கும் கவிஞர் தி.நா.அறிவு ஒளி தித்திக்கும் வெண்பாவால் படைத்துள்ள காவிய நூல் இது. வெண்பாவானாலும் நெருடல் ஏதுமின்றி நெஞ்சைத் தொடுவ தாய் நெகுநெகு வெனப் பாக்கள் அமைந்துள்ளன.

'உண்மையான மக்களாட்சி எது?'- என்கிற கேள்விக்கு விடை போன்ற கதையொன்று இதிலே கவிதையால் சொல்லப்படுகிறது. கதையின் நடுநடுவே இயற்கை யழகு இனிமையுற எடுத்துக் காட்டப்படுகிறது. பகுத்தறிவுக் கருத்துக்கள் ஆங்காங்கே தூவப் பட்டுள்ளன. உள்ளந்தொடும் உவமைகளுக்கும் இந்நூலில் பஞ்சமில்லை. கதாபாத்திரங் களும் சோடையில்லை.

புதுக்கவிதை நெடி நாடெங் கும் வீசிக்கொண்டிருக்கும் இந் நேரத்தில் - காவியம் செய்ய

ஏற்ற கருவி மரபுக் கவிதையே என்பதை நிலை நிறுத்தும் விதத்தில் தென்றலைப் படைத்திருக்கும் ஆசிரியரின் துணிவிற்காகவே இந்த நூல் வாங்கப்படலாம்.

வடுக விருட்சியூர் அமுதாவின் வாசகர் கடிதங்கள்

ஆசிரியர்: வடுகவிருட்சியூர் அமுதா

வெளியீடு: சின்னஞ்சிறுகோபு,
முடிகண்டநல்லூர்,
செம்பொன்னார்கோயில்
தஞ்சைமாவட்டம்-609309

விலை: ரூ. 5 பக்கம்: 47

கதையும், கவிதையும், புதினங்களும், கட்டுரைகளும் மட்டுமே புத்தகமாகலாம் என்கிற நிலையை மாற்றியிருக்கிறார் இந்த நூலாசிரியர். ஆம்; தின, வார, திங்கள் ஏடுகளில் தான் எழுதி வெளிவந்த கடிதங்களைத் தொகுத்து, தன்னைப் பற்றிக் குறிப்பிடப்பட்ட செய்திகளைக் கோத்து இந்தப் புத்தகத்தை உருவாக்கியிருக்கிறார்.

மிகவும் துணிச்சலான புதிய முயற்சி.

கொலைகாரக் கம்ப்யூட்டர்

ஆசிரியர்: ராஜேஷ்குமார்,

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்,
சென்னை-600 004

விலை: ரூ.13. பக்கம் :188

புதிர்களை விளக்கிச் சுலபமாக்கப் பயன்படுகிறது கம்ப்யூட்டர் என்பார்கள். இந்தப் புதினத்தில் புதிராக வைத்துக் கதை பண்ணப்பட்டிருக்கிறது கம்ப்யூட்டர்.

இன்றைய இளைஞர் உலகு விரும்பத்தக்க 'ஜிலுஜிலு' நடையில் கதையை நடத்தியிருக்கிறார் ராஜேஷ்குமார். பரபரப்புச் சம்பவங்கள் ஆங்காங்கே நம் படிப்பை வேகப்படுத்துகின்றன.

பிழை திருத்தத்தில் சற்றுக் கவனம் காட்டியிருக்கலாம்.

வரலாறு படைத்த வழக்குகள்

ஆசிரியர்: சிவலை இளமதி

வெளியீடு: முன்னேற்றப் பதிப்பகம்,
21, மேட்லி சாலை,
சென்னை-600 017.

விலை: ரூ.15 பக்கம்:206

ஸ்ரீவில்லிபுத்தூர் - விருதுநகர் வெடிகுண்டு வழக்கு, ரம்பா கலக வழக்கு, மைன்புரி சதி வழக்கு, மீரத் சதி வழக்கு, மிதுனபூர் சதி வழக்கு, ஜாக்ஸன் கொலை முயற்சி வழக்கு, டயர் கொலை வழக்கு, குலசேகரப்பட்டணம் சதி வழக்கு, தேவகோட்டை கலவர வழக்கு, திருவாடானை சிறை உடைப்பு வழக்கு—எனச் சில முக்கிய வழக்குகள், தீர்ப்புகள் ஆகியவற்றின் அரிய தொகுப்பாக இந்த நூல் விளங்குகிறது.

இந்நூலில் உள்ள வழக்குகளெல்லாம், இந்திய விடுதலைப் போர்க் காலத்தின் சம்பவங்களே. கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து, ஆசிரியரின் பெரிய முயற்சியை நம்மால் உணர முடிகிறது.

கடைசியாக - 'நன்றியோடு நினைவுகூர'.. என்று இரண்டு பக்கம். இந்த நூலில் உள்ள கட்டுரைகளுக்கான விவரங்களை சேர்க்க உதவியவர்கள், நூற்கள், பத்திரிகைகள் ஆகியவற்றை இங்கே நன்றியோடு குறிப்பிட்டிருக்கிறார் நூலாசிரியர்.

அவசியம் படிக்கவேண்டிய ஒரு நூல்.

நவமணிகள்

ஆசிரியர் : அய்யூப்

வெளியீடு: நசீம் பிரதர்ஸ்,
நீடூர்:609 203
தஞ்சைமாவட்டம்

விலை: பக்கம்: 224

ஹாங்காங் தமிழ்ச் சங்கச் செயலாளராக இருக்கும் நூலாசிரியர் திரு. அய்யூப் - ஹாங்காங், பாங்காக், சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் நடக்கும் மாணிக்க வியாபாரத்தில் குறிப்பிடத் தக்கவர். இப்படிப்பட்ட அனுபவசாலியான அவர் 'நவமணிகள்' பற்றி எழுதியுள்ள இந்த நூல் மாணிக்கமாகவே திகழ்கிறது.

'மணிகளுக்கும், மணிகள் பதித்த அணிகளுக்கும் உலகெங்கும் உள்ள வரவேற்பைத் தமிழர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அந்தக் குறிக்கோளுடனேயே இந்த நூல் எழுதப்படுகிறது' என முன்னுரையில் குறிப்பிடுகிறார் நூலாசிரியர்.

நவமணிகள் பற்றி மட்டும் அல்ல; சொர்க்கமணிகள், பவளம், புதுமணிகள், செயற்கை- போலி மணிகள், தமிழ்நாட்டு மணிகள், இலங்கைமணிகள், கிரகமணிகள், பிறந்தநாள் மணிகள், ராசிமணிகள், எண்கள் மணிகள் – என்று பல்வேறு மணிகள் பற்றியும் இந்நூலில் அலசி ஆராயப்பட்டிருக்கிறதுவிலைமதிப்பற்ற நூல். அதனால் தானோ என்னவோ புத்தகத்தின் விலை எங்கும் குறிப்பிடப்படவில்லை!

> புத்தகம் மற்றவர்களை நீங்கள் புரிந்துகொள்ளும்படி செய்ய வல்லவை; அது போலவே, உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்.
>
> —எட்வர்டு பிரேக்கர்

தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம்

ஆசிரியர் : க.த. திருநாவுக்கரசு

வெளியீடு: தமிழ்க்கடல்
பதிப்பகம்
ஐ-19, டர்ன்புல்சு சாலை,
முதல் குறுக்குத் தெரு,
நந்தனம்,
சென்னை-600 035.

விலை ரூ. 32 பக்கம் : 410

மகாகவி பாரதி வழி செல்லும் இளைஞர்களுக்கும், எதிர்காலப் பாரதியின் வழித்தோன்றல்களுக்கும் இந்நூல் படைக்கப்படுவதாக நூலாசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்; பத்தாகப் பிரிக்கப்பட்டுள்ள முத்தான பகுதிகள் அதை மெய்ப்பிப்பதாக உள்ளன. தமிழ்க் கவிதையுலகில் பாரதியின் தாக்கம் எத்தகையது என்பதை இதற்குமேல் ஆராய்ந்து எவராலும் விளக்க முடியாது.

'தமிழ்ப் புதுக் கவிதையைத் தோற்றுவித்தவன் பாரதி.... பாரதியார் வருணாசிரம தருமக் கோட்டையைப் பாதுகாத்துக் கொண்டே, சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க இயலும் எனும் கனவு கண்டார்' என்பன போன்ற பல புதிய கருத்துகள் இந்த நூலின் பல இடங்களில் தென்படுகின்றன.

பாரதிக்குப் பின்வந்த கவிஞர் பலரின் எழுத்தோவியங்களில், அவரது தாக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதை ஆதாரத்தோடு அரும்பாடுபட்டு விளக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

'காய்தல் உவத்தல் அகற்றி ஆய்தல்' என்பதை இந்நூலில் காண முடிகிறது. தமிழ்க் கவிதைத் தாகமுடையோரெல்லாம் தவறாமல் படிக்க வேண்டிய நூல் இது.

—'இந்திரன்'

இன்குலாப் ஜிந்தாபாத்

இந்திய விடுதலைப்போராட்டக் காலத்தில் எங்கும் இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்த முழக்கங்களில் ஒன்று 'இன்குலாப் ஜிந்தாபாத்' (புரட்சி ஓங்குக' என்பது இதன் பொருள்). இன்றைக்கும் உரிமை கோரி நடைபெறும் இயக்கங்களால் இந்த முழக்கம் மொழி வேறுபாடு கருதாமல் நம் நாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டு வருவதைக் கர்ண்கிறோம். இந்த முழக்கத்தை நமக்குத் தந்து உதவியிருப்பது உருது மொழிதான்!

விடுதலைப் போராட்டக் காலத்தில் இந்த உருதுமொழி முழக்கம் தீப்பொறிபோல் எங்கும் பரவி மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து கொண்டது. அவர்களின் விடுதலை உணர்வைத் தட்டி எழுப்பும் மந்திரச்சக்தி இந்த முழக்கத்திற்கு இருந்தது.

அந்நிய ஏகாதிபத்தியத்தின் பயங்கர அடக்குமுறைகளையெல்லாம் மீறிக்கொண்டு உயிர்த்துடிப்புடன் இயங்கும் சக்தி இந்த முழக்கத்திற்கு இருந்தது.

பெர்சிய - அராபிய மொழிகளின் தாக்கங்களால் வட இந்தியாவில் உருவான மொழிதான் உருது. சாமானிய மக்களால் உருவாக்கப்பட்ட மொழி என்றுகூட அதைக் கூறலாம். எனவேதான் மூலை முடுக்குகளில் எல்லாம் வழங்கும் மொழியாக அது விளங்குகிறது.

இந்தியாவின் விடுதலைப் போராட்டம் அகிம்சை என்னும் அடிப்படையில்தான் வேகம் பெற்று இயங்கியது. எழுத்தறிவில்லாத, ஆயுதம் ஏதும் தரிக்காத மிகச் சாமானிய மக்கள் அன்னிய ஏகாதிபத்தியத்துக்கு அகிம்சை வழியில் எதிர்ப்புத் தெரிவித்து நடத்திய அறப்போராட்டம்தான் நமது விடுதலைப் போராட்டம். வன்முறையைக் கைக்கொள்ளாத போராட்டம் என்பதால் உரத்த குரலில் எழுப்பப்படும் கண்டனங்களும் முழக்கங்களும் இந்தப் போராட்டத்தில் இன்றியமையாத போர்க் கருவிகளாக விளங்க வேண்டியதாயிற்று.

இத்தகைய கண்டன மொழிளையும், முழக்கங்களையும் பல கவிஞர்களும் எழுத்தாளர்களும் உருவாக்கித் தந்ததோடு மக்களை வழிநடத்திச் செல்லவும் முன்வந்தனர். சுதந்திர ஆர்வமுள்ள கவிஞர்களும் எழுத்தாளர்களும் நேரடியாகக் குறிப்பிட்ட இடங்களில்தான் மக்களை நேரடியாக வழிநடத்த முடிந்தது. ஆனால் அவர்கள் உருவாக்கித் தந்த முழக்கங்களோ நாடு முழு

வதும் பரவிப் பாய்ந்து எல்லாப் பகுதிகளிலும் மக்களை ஊக்குவித்து அன்னிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பொங்கியெழச்செய்தன!

உருது மொழிக் கவிஞர்களும் எழுத்தாளர்களும் இந்தப் பணியில் உரிய பங்கேற்கத் தவறவில்லை. அதன் பயனாகத்தான் மொழி பேதங்களையெல்லாம் கடந்து இந்திய மக்களின் உதடுகளில் துடித்தது 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்ற முழக்கம்.

நாட்டுப் பற்றையும் விடுதலை ஆவேசத்தையும் தூண்டும் ஏராளமான கவிதைகளை உருதுமொழிக் கவிஞர்கள் எழுதியுள்ளனர்.

இன்றைய உத்திரப்பிரதேசத்தின் ஓர் பகுதி 1950ல் 'அவத்' என்ற தனி சமஸ்தானமாக விளங்கியது. அதன் மன்னர் வாஜித் அலி ஷா ஒரு கவிஞரும் கூட, 'அக்தார்' என்ற புனை பெயரில் கவிதைகளை எழுதிய அவர் கலைகளில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகவிளங்கியவர் அவர். நெற்றியில் திலகமிட்டுக்கொண்டு ராமனாகவும், கிருஷ்ணனாகவும் வேடந்தரித்து ஆடல் பாடல்களில் ஈடுபட்ட அதிசய அரசர் அவர்!

வாஜித் அலி ஷா-விடமிருந்து ஆங்கிலேயர்கள் ஆட்சிப்பொறுப்பைப் பறித்துக் கொண்ட போது, அவர் மனம் நொந்து எழுதிய உருதுமொழிக்கவிதைகள் நாட்டுப் பற்றையும் விடுதலை ஆர்வத்தையும் தூண்டிவிடும் சக்தி பெற்று விளங்குகின்றன.

மொகலாயவம்சத்தின் கடைசி பேரரசரான அபு சபர் பகதூர் ஷாவும் ஓர் கவிஞர்தான். ஆங்கிலேயர்களால் அதிகாரம் பறிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டவர் அவர். சிறைச்சாலையினுள் கிடந்தபடி அவர் இயற்றிய உருது மொழிக் கவிதைகள் நாட்டுப் பற்றையூட்டும் தாபம் மிகுந்து விளங்குகின்றன.

நாட்டுப் பற்றையும் விடுதலை வேட்கையினையும் தமது கவிதைகளால்வளர்த்த மற்றொரு உருது கவிஞர் மவுலானா சபர் அலி கான். போராட்டத்தில் ஈடுபட்டு கொடுமையாகத் தண்டிக்கப்பட்ட உருதுமொழிக் கவிஞர்களும் உண்டு.

உருது ஒரு குறிப்பிட்ட மதத்திற்குரிய மொழி என்று கருதுவது பொருந்தாது. ஏனெனில் மாற்று மதத்தைச் சேர்ந்தவர்களும் உருதுவில் கவிதைகளும் கட்டுரைகளும் கதைகளும் எழுதி வந்துள்ளனர். ராம் பிரசாத் என்பவர் 'பிஸ்மில்' என்ற புனைபெயரில் உருது மொழியில் கவிதைகள் எழுதியிருக்கிறார். இந்த விடுதலைப் போராட்ட வீரர் 'காக்கோரி ரயில் வழிப்பறி' வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுதூக்கிலிடப்பட்டார். இவரோடு தூக்கு மேடை ஏறியவர் அசபக்குல்லா கான் என்ற இன்னொரு விடுதலை வீரர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் மறக்க முடியாத நிகழ்ச்சியான 'ஜாலியன் வாலா படுகொலை' ஏராளமான கவிஞர்களை மனங் குமுறச் செய்தது. படுகொலை குறித்து கோபாவேசத்துடனும், மனப்பொருமலுடனும் எழுதப்பட்ட பல கவிதைகளை உருதுமொழியில் காணலாம். இக்பால், முன்ஷி தர்லோக்சந்த், மஹரீம் எனப்பலரும் இது குறித்து கவிதை இயற்றியிருக்கிறார்கள்.

இந்திய விடுதலைப் போர் உயிர்த்துடிப்புடன் நடைபெற்று, இறுதியில் அந்நிய ஏகாதிபத்தியம் அகல்வதற்கு மற்ற மொழிகளைப் போலவே உருதுவும் அருந்தொண்டாற்றியுள்ளது. •

—பத்திரிகைத்தகவல் அலுவலகம்

பெண்கள் நிலை உயர...

ஐ. நா. சபையின் அமைப்புகளான சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு, உணவு மற்றும் விவசாயத்துறை அமைப்பு, சுகாதார அமைப்பு போன்ற 8 அமைப்புகள் இணைத்து ஆசிய அளவிலான கிராமப்புறப்பெண்கள் வேலை வாய்ப்பு மற்றும் முன்னேற்றம் பற்றிய கருத்தரங்கு மதுரை பாண்டியன் ஓட்டலில் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இக்கருத்தரங்கினைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''பெண்களை மதிக்காத நாடு உயர்வடையாது. பெண்களின் நிலையை உயர்த்தாமல் நாட்டை வேறு வழியில் உயர்த்தி விடலாம் என்பது இயலாத காரியம் என்று விவேகானந்தர் கூறியுள்ளார். அதன்படி கிராமப்புற வளர்ச்சியில் பங்கு பெற சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு முன்வந்துள்ளது. இந்த அமைப்பு ஏழை கிராமப் பெண்கள் நிலை உயர வழி வகை செய்ய வேண்டும்.

''பெண் தொழிலாளர்கள் நலத்திற்காகத் தமிழக அரசு தனியானதொரு கழகத்தினை 1983-ஆம் ஆண்டு அமைத்து அதன் மூலம் கல்வி, சுகாதாரம் வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் உதவி வருகிறது. இது தவிர சிவகாசி, சென்னை போன்ற இடங்களில் பெண்களுக்கு என்று தனி அச்சகம் வைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. சமூகத் துறைமூலம் தட்டச்சு, அக்கவுண்டன்சி பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

''பெண் தொழிலாளர் நலன் கருதி பெண்களைத் தொழிலாளர் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மத்திய அரசு திட்டத்தின் கீழ் கிராமப்புறத் தொழிலாளர்களுக்குக் கல்வி வழங்க 75 கிராமப்புற அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

''கல்வி அறிவு இல்லாத கிராமப்புறப் பெண்கள் ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வந்து, அதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பது குறித்தும் இந்தக் கருத்தரங்கில் ஆராயவேண்டும்''

கருத்தரங்கிற்குச் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் டெல்லி கிளை இயக்குநர் திரு சங்கர நாராயணன் தலைமை வகித்தார். சர்வதேசக் கிராமப்புற வேலை வாய்ப்புக்கொள்கை அமைப்புத் தலைவர் திரு தரம் சாய் வரவேற்றுப் பேசினார்.

பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் போன்ற 9 நாடுகளைச் சேர்ந்த 25 பெண் பிரதிநிதிகள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். •



கீழா நெல்லி

இது இந்தியாவின் வெப்ப நாடுகளில் சதுப்பான எல்லா இடங்களிலும் வளரும். இதற்குக் கீழா நெல்லி, கீழ்க்காய் நெல்லி, பஷி பத்ரம், கீழ்வாய் நெல்லி எனப் பல பெயர்கள் உண்டு.

சித்த வைத்திய மூதாதையர்கள் நீண்ட காலமாக இக்கீழா நெல்லியைத் தைலங்கள் காய்ச்சுவதற்கும், வங்கம் பஸ்பம் செந்தூரங்கள் செய்வதற்கும் உபயோகித்து வந்துள்ளனர். இதன் இலை, வேர் ஆகியவை பல பிணிகளைப் போக்கவல்லன.

இக்கீழாநெல்லி பார்ப்பதற்கு நெல்லி போன்ற இலை வடிவும் இலைக் காம்பின் கீழ் வரிசையாக நெல்லிக்காய்களைப் போன்றசிறிய காய்களும்அமைந்ததால் இப்பெயர் பெற்றது. பல பிணிகளுக்கு அருமையான மருந்துப் பொருட்களாக இவை பயன்படுகின்றன.

தீரும் நோய்கள்

வயிற்று மந்தம், கண்ணில் தோன்றும் பல நோய்கள், நீரிழிவு, இரத்தக் கழிச்சல், மஞ்சட் காமாலை, உடலில் ஊறியமேகம், தாதுவெப்பம், நாட்பட்ட மேகப் புண், நீர்க்கடுப்பு, ரணம், வீக்கம், சொறிசிரங்கு, பெரும்பாடு, தலைசுற்றல், வெள்ளைவெட்டை, கல்லீரல், அதிபோகத்தினால் ஏற்படும் அசதி, சோகை நோய், காய்ச்சல், அசுத்த இரத்தம், நாவறட்சி, தாபம், அரிப்பு, கைகால் எரிச்சல், மேகவெட்டை மற்றும் முதலியன இம்மூலிகையால் குணமாகின்றன.

கல்லீரல், மண்ணீரல், சிறுநீரக நோய், மாலைக்கண், சோகை நோய் அகல்வதற்கு...

கீழாநெல்லி, கரிசலாங்கண்ணி இந்த இரண்டு கீரைகளையும் சம அளவு எடுத்து சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து அரைத்தெடுத்துக் கொண்டு நாள்தோறும் காலை, மாலை இருவேளைகளிலும் நெல்லிக்காய் அளவு எடுத்து, பசும்பாலில் கரைத்து அருந்தவும், இதைத்தொடர்ந்து 30 நாட்கள் அருந்த, சோகை நோய், கல்லீரல் நோய், மண்ணீரல் நோய், சிறுநீரகங்களின் வீக்கம், மாலைக்கண் ஆகியவை நீங்கி இரத்தம் சுத்தமடையும்.

இதன் இளங்கொழுந்தைக் குடிநீரிலிட்டு அருந்தினால் சீதக் கழிச்சல் நீங்கும்.

சொறி சிரங்கு

இதன் இலையை உப்புச் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்து, உடலில் காணப்படும் சொறி சிரங்குகளின் மேற்பூச, அவை குணமாகும்.

மூத்திரத் தாரையில் இரத்தம் வந்தால்...

தேவைப்பட்ட கீழாநெல்லியைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து இடித்துப் பிழிந்து, சாறு எடுத்துக் கொண்டு, கறந்த பசும் பாலில் இச்சாற்றை ஒரு அவுன்ஸ் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும். இவ்விதமாக 4 அல்லது 5 நாட்களுக்குக் கொடுத்து வரும் பட்சத்தில் மூத்திரத் தாரையில் இரத்தம் வருவது நின்று விடும்.

வெள்ளை, வெட்டை நீங்க..

இந்நோய்க்கு, இந்த இலையைச் சுத்தம் பார்த்து அரைத்து எலுமிச்சையளவு எடுத்துக்கொண்டு பசுவின் மோரில் கலக்கி, காலையில் மாத்திரம் 2 அல்லது 3 நாட்களுக்கு அருந்திவிட்டு, உப்பில்லாப் பத்தியம் இருந்து வந்தால் நோய் நீங்கி நலம் கிடைக்கும்.

குளிர் காய்ச்சல்-முறைக் காய்ச்சல் தீர...

தேவையான அளவு கீழா நெல்லி இலை ஒரு பாகம், வெள்ளைப் பூண்டு அரைபாகம், மிளகு அரைபாகம் இம்மூன்றையும் அம்மியில் வைத்து நீர்விட்டு அரைத்து எடுத்துக் கொண்டு மிளகளவு உருண்டையாகச் செய்து, நிழலில் உலர்த்திய பிறகு ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு, தேவைப்பட்ட போது நோயாளிகளுக்குக் கொடுக்கும் பட்சத்தில் மேற்கண்ட குளிர் காய்ச்சல், முறைக் காய்ச்சல் ஆகியவை நீங்கும்.

சதைச் சிதைவு போக்க..

இலையை மாத்திரம் அரைத்துச் சதைச் சிதைவுக்குப் பற்றுப் போடலாம்

அரிப்பு, சிறு ரணங்கள் நிவர்த்தியாக...

கீழாநெல்லி இலையை, போதுமான அளவு அரைத்து உடலில் தேய்த்துக் குளித்து வந்தால், உடலில் ஏற்படும் அரிப்பு, சிறு புண்கள் ஆகியவை நீங்கி விடுகின்றன.

பித்தசோகை—வீக்கம் தீர....

நமக்குத் தேவைப்பட்ட கீழா நெல்லி இலை 3 பங்கும், வெங்காயம் ஒரு பங்கும் சேர்த்து இடித்துச் சாறு பிழிந்து, 400 மி. லிட்டர் வீதம் 3 நாள் அருந்த

ஏ.ஆர்.என். துரைராஜ்

மேற்கண்ட பித்தசோகை,வீக்கம் எல்லாம் நிவர்த்தியாகும்.

சோகைநோய் போக்க..

இந்த இலையின் சாற்றை மூன்று நாட்கள் தொடர்ந்து அதிகாலையில் மட்டும் தவறாமல் அருந்தி வரும் பட்சத்தில்சோகை நோய் படிப்படியாக மாறும் என்பதில் ஐயமில்லை.

பத்தியம்: துவரை, பசுமோர், பசும்பால் நீக்கவும்

காமாலை, கண் தொடர்பான நோய் நீங்க..

கீழாநெல்லி இலை, பொன்னாங்கண்ணி, மூக்கிரட்டை ஆகிய மூன்றையும் சமமாக எடுத்துக் கொண்டு அம்மியில் வைத்து நன்றாக அரைத்து, காலையிலும், மாலையிலும் நீராகாரத்துடன் நெல்லிக்காய் அளவு எடுத்துச் சாப்பிட்டு வரும் பட்சத்தில் காமாலை நோய் வெகுவிரைவில் நீங்கும். இத்துடன் கண்தொடர்பான எல்லாப் பிணிகளும் அகலும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று மந்தம் சீதபேதி ஆகியவை குணமாக...

கீழாநெல்லி இலையைத் தேவையான அளவு எடுத்து அரைத்து, சுண்டைக்காய் அளவு எடுத்து பால் அல்லது தண்ணீரில் கலந்து கொடுக்க மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

மஞ்சள் காமாலை குணமாக...

தேவையான கீழாநெல்லி இலையை எடுத்துச் சுத்தம் பார்த்து, சிறிது நீர்விட்டு அரைத்து எருமைத் தயிரில் கலந்து காலை மாலை வெறும் வயிற்றில் அருந்திவர மஞ்சள் காமாலை குணமாகும்.

பத்தியம்: புளி, உப்பு, காரம் நீக்கவும்

தேவைப்பட்ட பொன்னாவாரை இலையுடன் கீழாநெல்லியும், மிளகு 6 சேர்த்து அம்மியில் வைத்து, நீர்விட்டு அரைத்து நெல்லிக்காய் அளவு காலை, மாலை வாயில் போட்டு வெந்நீர் அருந்திவர மஞ்சள்காமாலை நீங்கும். (இச்சா பத்தியம் இருக்க வேண்டும்)

மஞ்சள் காமாலை, மேகவெட்டை நீங்க...

இதன் இலை,வேர் 18 கிராம் அளவு எடுத்துச் சுத்தம் செய்து அம்மியில் வைத்து அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து, பசுப்பாலில் கலந்து 3 நாட்கள் அருந்த, மேகவெட்டை, மஞ்சட் காமாலை ஆகியவை நீங்கும்.

பத்தியம் :
உப்பு நீக்கிச் சாப்பிடவும்

கண் காசநோய்

இதன் இலையும் வேரும் நீங்கலாக, மற்றத் தண்டுகளை எடுத்துச் சாறு பிழிந்து, விளக்கெண்ணெய்யில் கலந்து சிறிதளவு கண்ணில்விட கண்காச நோய் அகலும்.

(குறிப்பு : கீழாநெல்லி இலையும், வேரும் நீக்கிவிட்டுத் தண்டுகள் மாத்திரம் எடுக்கவும்)

உடல் எரிச்சல் - உடல் சூடு, சுரம் ஆகியவை குணமாக...

கீழாநெல்லி இலை 25 கிராம், வேர் 25 கிராம் இந்த இரண்டையும் எடுத்துச் சுத்தம் பார்த்து, ஒரு சட்டியில் போட்டு 300 மி. லிட்டர் தண்ணீர் விட்டுக்காய்ச்ச வேண்டும். பாதியளவு தண்ணீர் சுண்டிய பிறகு இறக்கி, ஆற வைத்து, ஒரு நாளைக்கு மூன்று வேளை அருந்தி வந்தால் மேற்கண்ட பிணிகள் ஓடும்.

புண்புரை, வீக்கம் ஆகியவை நீங்க

தேவைப்பட்ட கீழாநெல்லி இலை, அதன் வேர் இந்த இரண்டையும் எடுத்து உலர்த்த வேண்டும். நன்கு உலர்த்திய பிறகு, அவற்றைப் பொடித்து, கழுநீரில் குழைத்து புண், புரை வீக்கம் உள்ள இடங்களின் மேற் பூசவும்.

நீர்க்கடுப்பு,எரிச்சல் நீங்க...

இந்த இலையை ஒரு பிடி அளவாக எடுத்துச் சுத்தம் பார்த்து, பிறகு சீரகம் 4 கிராம் எடுத்து இவை இரண்டையும் அம்மியில் வைத்துச் சிறிது தண்ணீர் விட்டு அரைத்து இவ்விழுதை எருமைத் தயிரில் கலந்து, 3 நாள் அருந்த நீர்க்கடுப்பு, எரிச்சல் நீங்கும், தினமும் அதிகாலையில் அருந்துவது உத்தமம்.

(குறிப்பு : மீன், கருவாடு, அகத்திக்கீரை நீக்கவும்)

கீழாநெல்லி சமூலம், கடுக்காய்-1; சுக்கு 1; சீரகம் 4கிராம், ஈருள்ளிப்பூடு இவைகள் அனைத்தும் சேர்த்துக் கஷாயம் வைத்து அருந்த நீர்க்கடுப்பு எரிவு நீங்கும்.

அறிவியல் துணுக்குகள்

* நமது நாட்டின் மீன்வளம் பற்றி நமக்கு ஏற்கெனவே தெரியும் என்றாலும் நமது நாட்டின் மீன் உற்பத்தி எவ்வளவு தெரியுமா? ஏறத்தாழ 8 இலட்சத்து 8 ஆயிரத்து நூற்று ஒன்பது டன்னுக்கும் மேல் ஆகும்.

* ஒரு கம்ப்யூட்டர் கருவி பல வேலைகளையும் ஒரு நொடியின் மிகச்சிறு பகுதி நேரத்திலேயே செய்து முடித்து விடுகிறது. இதனால் ஒளிபரப்பும் துறையில் பன் மொழிகளின் தலைப்புகள் தயாரித்தல், கல்வித்துறையின் பல நிகழ்ச்சிகளை அமைத்தல், பல அரிய இசை ஒலியை ஏற்படுத்தல்-போன்ற வேலைகளை நன்முறையில் செய்ய உதவுகிறது.

* சென்னை ஐ.ஐ.டி.யும், சென்னை ஒளி பரப்பு மையமும் இணைந்து இவ்வகையில் செயல்பட்டு புதிய வண்ணக் கம்ப்யூட்டரை நிறுவியிருக்கின்றன. தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் பல வடிவங்களில் கேப்ஷன்கள் (Captions) தயாரிக்கும் முறையைச் செயல்படுத்தியிருக்கின்றன.

* 'மென்மையான கரியை (Soft Coal) உபயோகித்து சமையல் செய்தால் புற்று நோய் வரவாய்ப்பு உண்டு' என்று சைனாவின் அறிவியல் வல்லுநர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

*நம் தலை மயிரே சரியான குறிகாட்டியாக (Indicator) அமைகிறது. "சுற்றுப்புறச் சூழ்நிலையால் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோமா?" என்று நம் தலை மயிர் தெளிவாக விளக்குகிறது.

* உணவில் உப்பைக் குறைத்தால் நீண்ட நாள் ஆரோக்கியமாய் வாழலாம் என்ற உண்மையை அண்மையில் அறிவியலார் அறிவித்திருக்கின்றனர். ஒரு நாளைக்குப் பத்து கிராம் உப்பிற்கு மேல் உண்ணாமல் இருப்பது மிக்க நன்று. ஊறுகாய் போன்ற உணவு வகைகளை மிகவும் குறைத்துக் கொள்வது நம் நல்வாழ்விற்கு வழிகோலும்.

நன்றி: 'சென்னை வானொலி'

மல்லிகை தேடித் தரும் வருவாய்

மாமரக் கன்றுகள் பயிரிடும் திட்டத்தில் ஊடு பயிராக மல்லிகை பயிரிடும் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

திருப்புல்லாணி ஒன்றியத்தைச் சேர்ந்த வண்ணான் குண்டு என்னும் கிராமத்தில் 176 ஏக்கரிலும், இராமநாதபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த அம்மாரி, சித்தார்க்கோட்டை, செம்படையார் கோயில் ஆகிய கிராமங்களில் 217 ஏக்கரிலும், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தங்கச்சிமடத்தில் 108 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளது. இதனால் 257 குடும்பங்கள் வேலைவாய்ப்புப் பெற்று பயன்பெறுகின்றன. பம்பாய் மற்றும் கல்கத்தா ஆகிய நகரங்கள், மல்லிகைக்கு நல்ல வியாபாரத் தலமாகும். தங்கச்சிமடத்தில் உற்பத்தி செய்யப்படும் மல்லிகைப் பயிரினால் ஏக்கருக்குச் சுமார் ரூ. 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கின்றது.

இரத்தம்போல் நீர் இறங்குவது நிற்க...

கீழாநெல்லியில் சமூலம் ஒரு பிடி, சீரகம் 4 கிராம் இவற்றை அம்மியில் வைத்து அரைத்து, எருமைத் தயிரில் கலக்கி 3 நாள் அருந்தினால் இரத்தம்போல் நீர் இறங்குவது நிற்கும்.

சாம்பல் தின்கின்ற குழந்தைகளுக்கு

கீழாநெல்லி வேர்-4 கிராம்; கடுக்காய்த்தோல் 8 கிராம், மிளகு 12 கிராம் மூன்றையும் புளித்த மோரில் அரைத்துக் கலக்கி 3 நாள் கொடுத்தால் குழந்தை, சாம்பல், மண் ஆகியவற்றைத் தின்னாது.

பாண்டு, உடல் வெளுப்பு வாத பித்தம், கிரிச்சரம் இவைகள் நீங்க...

தேவைப்பட்ட கீழாநெல்லிச் சமூலத்தை எடுத்துச் சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்துப் பால் ஊற்றி அரைத்து, பாலில் கலக்கி அருந்தி வந்தால் மேற்கண்ட நோய்கள் நீங்குவதுடன் இரத்தமும் உபரியாகும். கண்களும் குளிர்ச்சியைப் பெறும்.

(குறிப்பு : கீழாநெல்லி சமூலத்தை பசுப்பால் விட்டுஅரைக்க வேண்டும்)

பெரும்பாட்டிற்கு:

வேரைக் கழுநீரில் அரைத்துக் கலக்கி அருந்த பெரும்பாடு சுகமாகும்.

காமாலைக்கு:

வேரைப் பச்சையாய் 18 கிராம் எடுத்து அரைத்துப்பாலில் கலக்கிக் கொடுக்க, காமாலை நோய் நீங்கும்.

கீழாநெல்லித் தைலம் (செய்முறை)

கீழாநெல்லியைக் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி இடித்து, அத்தூளில் 700 கிராம் எடுக்க வேண்டும். அதை ஒரு சட்டியில் போட்டு 4 படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி, அரைப்படிக்குக் குறுக்கி, இதில் 18 கிராம் ஆவின்பால், 18 கிராம் நல்லெண்ணெய், 35கிராம் சீரகம் ஆகியவற்றை பசுவின்பால் விட்டு அரைத்துச் சேர்த்துக் காய்ச்சி, பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு வாரம் இரண்டு முறை தலை முழுகி வர உட்சுரம், அழலை, கைகால் எரிச்சல், நடுக்கம், தலைசுற்றல், வாந்தி முதலியன போகும்.

பாடல்:

''ஆமலகை வானா ள்திகமளை
யோடுகுறை
யாமலகை யுண்ணோ யனலெங்கே

'தமிழரசு'

சந்தா விவரம்

'தமிழரசு' (தமிழ்)

ஆண்டுச் சந்தா: ரூ 18

அரையாண்டுச் சந்தா: ரூ 9.

'தமிழரசு' (ஆங்கிலம்)
ஆண்டுச் சந்தா: ரூ 9

விவரங்கட்கு:

உதவி இயக்குநர்,
தமிழரசு அலுவலகம்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

பொருள்:

பல பிணிகளினால் நொந்து உடல் மெலிந்து வெளுத்திருக்குங் கால், கீழா நெல்லியை அரைத்து நல்ல பசுவின் தயிரில் கலந்து

நாளும் கற்ப முறையின்படி உண்ண, மேகவெட்டை முதலிய நோய்கள் போம்.

கீழ்க்காய் நெல்லி, கீழ்வாய் நெல்லி என்றும் சொல்லப்படும்.

பொதுவாக, நஞ்சை நெல் வரப்புகளில் புளிய இலைவடிவில் பசிய நிறத்துடன் காணப்படும் இம்மூலிகையை அதிகாலை வேளை பசுப்பாலுடன் சேர்த்து அரைத்து ஏழு நாட்கள் பத்தியத்துடன் உண்ண, மஞ்சள்காமாலை வியத்தகு முறையில் பூரண நலமடையும்.

'கீவா நெல்லி' எனப் பேச்சு வழக்கில் சொல்லப்படுகிறது. இந்த கீவாநெல்லி சித்த வைத்தியத்தில் ஒரு சிறந்த இடத்தை வகிக்கும் மூலிகை வகையாகும். இந்தக் கீவாநெல்லி இலையை வெள்ளாட்டின் பாலில் அரைத்து அதிகாலையில் ஏழு நாட்கள் அருந்திவர, மஞ்சள் காமாலை நோய் வியக்கத்தக்க முறையில் குணமாகும். தேகத்தின் வெப்பம் தணிந்து குளிர்ச்சி உண்டாகும். பித்தம் தீரும்.

பொதுவாக....

பிரசவ வலியால் நாட் கணக்கில் துடிப்பவர்கள்-பிரசவமாகாமல் அவஸ்தைப் படுவோர்க்கு நாயுருவி வேர், கீழாநெல்லி வேர் ஆகியவற்றை வலது கால் பெருவிரலில் கட்டினால் சில நிமிடங்களில் சுகப்பிரசவம் உண்டாகும் என்பது அநுபவ முறை உண்மையாகும் என்று மருத்துவ சாத்திரம் கூறுகிறது. இது கிராமங்களில் இப்பொழுது கூட நடைமுறையில் இருந்து வருகிறது.

தமிழ் வளர்த்த பெரியார்:

சித்தாந்தப் புலவர் மணி முருகவேள்

'உயர்தனிச் செம்மொழிகள்' எனப் போற்றத் தகும் ஒரு சில மொழிகளில் தமிழ்மொழி தனிச் சிறப்பு வாய்ந்தது. இற்றைக்குச் சுமார் 7,000 ஆண்டுகளுக்கு முன்பே தனக்கென இலக்கியங்களும் இலக்கணமும் பெற்றுத் திகழ்ந்தது தமிழ் என்பது மொழியியல் அறிஞர்கள் கூறும் புகழ்மிக்க செய்தியாகும்.

தமிழ் அறிஞர்கள் பண்டு தொட்டே ஒருங்கிணைந்து சங்கமாகக் கூடித் தமிழில் உள்ள எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் மக்களின் நாவின் இயல்பையும் ஒலியியலின் இயல்பையும் ஆராய்ந்தறிந்து இயற்கை நெறிக்கு ஏற்ப அமைத்தனர். பின்னர் இலக்கியங்களையும் இலக்கணத்தையும் யாத்துச்சிறப்படைந்தனர். பலர் அறிவியல் அறிஞர்களாகவும் திகழ்ந்தனர். இவ்வறிஞர்கள் யாத்த சங்க இலக்கியங்களைக் கசடறக் கற்ற பேரறிஞர்கள் பலர் இன்று நம்மிடையே இல்லை.

சங்க இலக்கியங்களை நிறைவாகக் கற்றுத் தேர்ந்து, சமய இலக்கியங்களிலும் சிரிய நற்புலமை பெற்று, சங்க இலக்கிய நன்மலையாகவும் சித்தாந்தப் புலவர் மணியாகவும் காட்சியளித்து வந்தவர் திரு ந.ரா. முருகவேள் ஆவர். சங்க இலக்கியப் பாடல்கள்போன்றே பாக்கள் இயற்றுவதில் இவர் சிறந்தவர். சங்க இலக்கியச் செய்திகளை விரித்துரைக்கும்போது, குறிப்பிட்ட இலக்கியத்தின் நூற்பாக்கள் எண், வரிகள், சொற்கள் எழுத்துக்கள் எத்தனை என்பதனைச் சொல்லவல்ல திறனுடையவர்.

முருகவேள் மேலைநாட்டு அறிஞர்களின் இலக்கியச் செல்வத்தைத் துய்க்கும்போது, தமிழ் இலக்கியங்களில் (எடுத்துக்காட்டாக ஜான் மில்ட்டனின் கருத்துகள்) தாம் கண்டுதுய்த்து உணர்ந்த அனுபவக் கருத்துகளுக்கு ஒப்ப அமைந்த குறிப்புகளைக் கண்டு, வியப்புற்று மகிழ்வர். அந்த மகிழ்ச்சி அனுபவத்தைத் தமிழ்க் கருத்துகளுடன் இணைத்துப் பாடலாக யாத்து, நமக்களிக்கும் போது ''ஜான் மில்ட்டன் அவர்களும் இக்கருத்தினையே பாடியுள்ளாரே! அவரும் தமிழ்மொழி கற்ற அறிஞர்போலும்'' என மயங்க வைக்கும் ஆற்றல்மிகு பாடலாசிரியர். எடுத்துக்காட்டாக:

''சைவத் திருமுறைகளையும் சைவ சித்தாந்தச் சாத்திரங்களையும் புறக்கணித்து ஒதுக்காமல், விரும்பிக் கற்று மகிழும் கடப்பாடு உடையவராவர். இம்மை வாழ்வில் இதனின் மிக்க இன்பப் பேறு பிறிது ஒன்றில்லை எனத் துணிந்து கூறலாம். ஜான் மில்ட்டன் எனும் ஆங்கிலக் கவிஞர் பாடுவதுபோல்,

'எத்தகை இன்ப ஊற்றாய்
இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை அந்தோ,
அறிவிலார் கடினம் என்பர்!
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல்
இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு
ஆரா விருந்தென மிளிரும்
நன்றே'
—முருகவேள்-மில்ட்டனாக

How charming is divine
Philosophy 'Net harsh and
Crabbed as dull foods
suppose! But Musical
as is Appollo's lute And a
perpectual feast
of nectered sweets, where
no crude surfeit reigns
—John Milton, Comus

இங்கு அடியில் குறித்த ஆங்கிலத்தைப் பார்த்துவிட்டு மேலே குறிப்பிட்ட பாடலைப் பார்க்கும் போது மில்ட்டன்தான் இக்கருத்தினைத் தமிழ்க் கவிதையாக்கியுள்ளார் என்ற முடிவுக்கு வர நம்மைச் சிந்திக்க வைக்கிறார் சிந்தனையாளர் அமரர் முருகவேள்.

திரு.வி.க. அவர்கள், முருகவேள் இயற்றிய ''மறைமலையடிகளார் மாட்சி'' எனும் நூலின் முன்னுரையில்,

''அடிகள் நடையும் கொள்கையும் பிறவும் நூற்கண் மலிந்து கிடத்தல் மகிழ்ச்சியூட்டுகிறது. விரிந்த நூல் ஒன்று இந் நூலாசிரியரால் யாக்கப்பெறின் தென்னாடு வளர்ச்சியுறும் என்று நம்புகிறேன். நூலாசிரியருக்கு எனது வாழ்த்து உரியதாக''

என வாழ்த்தி மகிழ்கிறார்.

ஆசிரியர் மறைமலையடிகள் ஒருமுறை இவருக்கு எழுதிய கடிதமொன்றில்,

''....வெண்பாச் செய்யுளில் நீங்கள் வரைந்த கடிதம் வந்தது. செந்தமிழ் உரைநடை வரையுந் திறத்தோடு செய்யுளாக்குந் திறமும் உங்களுக்கு வாய்த்திருத்தல் கண்டு பெரிதும் உவப்புற்றேன். உரையும் பாட்டும் பொருள் பொதுவன. ஆக்கும் புலமையிற் றலை சிறந்து நீங்கள் தமிழ்த் தொண்டு ஆற்றி வாழ்க என்று திருவருளை வேண்டும் -மறைமலையடிகள்''

என்று உள்ளம் பூரித்துப் பெருமிதத்தோடு வாழ்த்துகிறார். இவர்களது வாழ்த்து, பொய்க்க

சிறுவை நச்சினார்க்கினியன்

வில்லை. சங்க இலக்கியம் போன்றே பாடற் பனுவல்கள் இயற்றும் சிறப்பினைப் பெற்ற இவர் செல்லமாகப் ''புலவரேறு' என அழைக்கப்பட்டார்.

இங்ஙனம் புகழாரம் பூண்ட நந்திபுரம் தி.இராமசாமி முருக வேள் அவர்கள் 17.11.1924ல் இராமசாமி முதலியார்க்கும் சிவ காமி அம்மையாருக்கும் மூன்றா வது திருமகனாய்த் தோன்றி னார்கள். தாய் தந்தையர் இட்ட பெயர் சுந்தரராசன் என்பது. பின்னர் ஆசிரியர் மறைமலை யடிகள் தூய தமிழால் ''முருக வேள்'', என மாற்றி அழைத் தார்கள். இப்பெயரே இவர்தம் புகழைப் பரப்பியது. இங்கு ஆசிரி யர் மறைமலையடிகள் தம் இள மையில், நாகையில் வெளிவந்த 'நீலலோசனி' முதலிய இதழ் களில் ''முருகவேள்'' எனும் புனைபெயரால் மறுப்புக் கட் டுரைகள் எழுதி வந்தார்கள் என் பது குறிப்பிடத்தக்க நற்செய்தி யாகும்.

எளிமையும் பண்பும் நிறைந்த பெற்றோர்களால் சீரிய முறை யில் வளர்க்கப்பட்டார் முருக வேள். இவர்களுடன் பிறந்த மூத்தவர் இருவர். ஒருவர் புல வர் ந.ரா.தேவராசனார். மற் றொருவர் ஒளியகம் ந.ரா.ஆட லரசு.

முருகவேள் நன்முறையில் வளர்ந்து கரந்தைப் புலவர் கல் லூரி வாயிலாக, சென்னைப் பல் கலைக்கழக ''வித்துவான்'' பட்டத்தில் முதல் வகுப்பு மாண வனாக 1947ல் தேர்வு பெற்றார். 1946லேயே மதுரைத் தமிழ்ச்சங்க ''பண்டிதம்'' பட்டம் இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்றார். பின்னர் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தில் ''பி.ஓ.எல்'' தேர்வில் 1951லும், ''எம்.ஓ.எல்'' தேர்வில் முதல் வகுப்பு மாணவ னாக 1957லும் தேர்வு பெற்றார். இதன் பின்னர் 1958ல் சென்னைப் பல்கலைக் கழக முதுகலையில் (எம்.ஏ.,) தேர்வு பெற்றார். இங்ஙனம் எளிய குடும் பத்தில் பிறந்து தாய் தந்தையர் பெருமை கொள்ளும் வகையில் ஊக்கத்துடன் தன் முயற்சியால் சிறந்த பட்டங்களும் ஆழமான புலமையும் பெற்றார்.

இவர் முதன் முதலில் சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் (1947-49) தமிழ் ஆசிரி யராகப் பணியாற்றினார். 1949-51ல் மேற்படிப்பிற்காக ஓய்வு. சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் 1951-55ல் பணி. மீண்டும் மேற்படிப்புக்காக 1956-1957ல் ஓய்வு. பின்னர் சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரி

யில் 1957-62 வரை தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

இவர் சங்க இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை பெற்றதுடன்

சைவ, வைணவ நூல்களிலும் வேதாந்த, சித்தாந்த அறிவியலி லும் கூர்த்த மதி நுட்பமும் ஆராய்ச்சியும் உடையவராய்த் திகழ்ந்தார்கள். சைவசித்தாந்தப் பேரறிவியலில் தோய்ந்த இவர் தம் உள்ளம் ஆசிரியர் தொழிலை விட்டு இடைவிடாது மக்களுக்குச் சமய மெய்ஞ்ஞானத்தில் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற கருத்தில் திளைத்திருந்தபோது இறையருள் கூட்டிவைக்க, தமிழக அரசின் அறநிலையத்துறையின் ''திருக் கோயில்'' எனும் இதழின் ஆசிரியராக 1962 செப்டம்பரில் பணி ஏற்றார். 1985 மார்ச்சு வரை 22½ ஆண்டுகள் பணி செய் தார். ஏற்கனவே சைவ சித் தாந்தப் பெருமன்றம் வெளி யிட்டுவந்த ''சித்தாந்தம்'' இத ழின் ஆசிரியராய் இருந்த அனு பவம், 'திருக்கோயில்' இதழை, சமய தத்துவ நுட்பங்களைத் தெரிவிக்கும் நூலாகக் கொணர் வதற்கு உதவி செய்தது.

இத்தகு கல்விப் புகழ் இவரை முறையாகத் தொடர்வதற்குக் காரணம் தமிழ்மலை ஆசிரியர் மறைமலையடிகள் அவர்களை ஆசிரியராக ஏற்றதனால் எனின் பிழையாகாது. அஃதன்றி அதே முறையில் மாம்பாக்கம் குருகுலம் திருக்குறள் பீடம் அழகரடிகளா ரிடமும் நேயம் வைத்தார். முருக வேள் சைவ சித்தாந்தத்தின் நுட்பங்களை விளக்கும்போது சைவாகமங்களிலிருந்தும் திரு முறைகளிலிருந்தும் பெரிய புரா ணத்திலிருந்தும் எடுத்துக்காட்டு களை எடுத்துரைக்கும்போது இவர்தம் புலமை நலம், ஆய்வுத் திறன் இன்னபிற தெளிவுறும் போது மறைமலையடிகளாரின் கூர்த்த மதிநுட்பமும் நம்முன் தோன்றி நம் அறிவுப் புலனுக்கு இன்ப மூட்டுகிறது.

இப்புலவர் மணி சங்க நூல் களில் பெரும்புலமை பெற்றுத் திகழ்ந்தார்கள் என்பதற்கு எடுத் துக்காட்டாய் விளங்கியது இவர்கள் பாடிய, ''சங்க இலக்கிய மாண்பு'' எனும் பாடல் பனுவல் களாகும். இது 72 பாடல்களால் முற்றிலும் வெண்பா யாப்பில் அமைந்தது. தவத்திரு அழக



ரடிகள் தம் அணிந்துரையில்,

''முருகவேள், தமது தெளிவையும் உணர்ச்சியையும் இக்கவிதை நூலாக வெளிப்படுத்தியிருத்தல் தமிழர்க்கு ஆக்கமானது!''

எனப் பாராட்டி மகிழ்கிறார். காரணம் அப்பாடல்களில் ஆசிரியர் மறைமலையடிகள் நூல்களில் தாம் சுவைத்த பகுதிகள், மற்றும் மனோன்மணீயம், ஜி. பி. ஷா, கா.சு.பிள்ளை, நாவலர் நாட்டாரய்யா போன்றவர்களின் கருத்துக்களைச் சுட்டிக் காட்டுவதில் வல்லவராய் விளங்கியதோடு, தொல்காப்பியத்தின் நலன்களைக்



குறிக்கும் போது, தொல்காப்பிய நுண்பொருட் கருத்துகளை மேலும் அறிந்து இன்புற,பா.வே மாணிக்க நாயக்கர், கா.சு. பிள்ளை, மறைமலையடிகளார், அரசஞ் சண்முகனார் போன்றோர் விளக்கங்களைக் காணுமாறு பாடலிலேயே ஆற்றுப் படுத்திக் காட்டும் திறனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

முருகவேள் தருமை ஆதினம் தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான், குன்றக்குடி ஆதினம் தவத்திரு குன்றக்குடி அடிகளார், நாவலர் நாட்டாரய்யா, பண்டிதமணி கதிரேசன் செட்டியார், ஔவை சு. துரைசாமி, திரு.வி.க., டாக்டர் அ. சிதம்பரநாதன், டாக்டர் இராசமாணிக்கனார், டாக்டர் வ.சுப.மாணிக்கம் முதலியவர்களிடையே கொண்ட நெருக்கமான பழக்கம் இவர்களது 'ஆற்றலை மேலும் வளர்த்துக்கொள்ளத் துணையாகியது.

மேலும் இப்பண்பாளரை நாடிப் பல பட்டங்கள் வந்து அடைந்தபோது அப் பட்டங்களும் சிறப்படைந்தன. மதுரை ஆதீனம், ''செந்தமிழ்ச் சிவமணி'' என்றும், தருமை ஆதீனம், ''சித்தாந்தப்புலவர் மணி''

மயிலிடம் காணும் சாயலும், மங்கை நல்லாளிடம் காணும் ஒயிலும், தமிழ்மொழியிடம் காணும் ஒலி அழகுக்கு ஈடாகுமா? ஆகாது.

—அறிஞர் அண்ணா

என்றும், திருவண்ணாமலை ஆதீனம் ''ஞானத் தமிழாகரர்'' என்றும் திருக்குறள் பீடம், ''செந்தமிழ் வேந்தர்'' என்றும் தமிழ்ப் புலவர் குழு ''தமிழ்ச்சான்றோர்' என்றும் பட்டங்களை இவருக்கு அளித்துள்ளனர். இவரோ பட்டங்களையும் பணத்தையும் விரும்பாது அமைதியான தமிழ்ப்பணியையே விழுமியது. எனத் தம் வாழ்நாள் இறுதிவரை கடைப் பிடித்து வாழ்ந்தவர். தருமை ஆதீனம் சென்னையில் நடத்தி வந்த மாலைவேளைக் கல்லூரியில் தவறாது சென்று இலக்கண, இலக்கிய விளக்கங்களை வித்துவான் தேர்வுக்கு உரிய பகுதிகளுக்கு விளக்கம் அளித்து வந்தார்.

இந்த ஞானத் தமிழாகரர் தமிழகமெங்கும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் நடத்திய மாநாடுகள், ஆண்டு விழாக்கள், கோயில் விழாக்கள்முதலியனவற்றில்இறை நெறி பற்றியும் இலக்கியங்கள் பற்றியும் ஆற்றிய விரிவுரைகள் எண்ணற்றன. மேற்படி விழாக்களில் வெளியிட்ட மலர்களிலும், சித்தாந்தம், செந்தமிழ்ச் செல்வி, ஞானசம்பந்தம், குமரகுருபரன் முதலிய இதழ்களிலும் எழுதிய கட்டுரைகள் பலப்பல.

இச்செந்தமிழ் வேந்தர், திருவரங்கம் கோயில் வரலாற்றினைத் தமிழாக்கம் செய்த போதும், இராமாநுசர் நூற்றந்தாதிக்கு உரை விளக்கம், திருப்பாவை உரைநயங்களின் தொகுப்பு,தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை உரை விளக்கம் ஆகிய நூல்களைப் படைத்தளித்தபோது, பிரதிவாதி பயங்கர தவத்திரு அண்ணங்கராச்சாரி சுவாமிகள் முருகவேள் அவர்கள் வைணவ சித்தாந்தத்தில் பெற்றிருந்த நுண்ணறிவினைக் கண்டு பெருமிதம் கொண்டு பாராட்டிய செய்தியை நாடு நன்கறியும்.

இவர் இயற்றிய நூல்களில், மறைமலையடிகளார் மாட்சி, தமிழ்நாட்டு மில்ட்டன், சங்க இலக்கிய மாண்பு, தருக்க இயல் விளக்கம், கவிதை அஞ்சலி, இலக்கணத்தில் கற்பனைகள், சிவஞான போதம்,சைவசித்தாந்தம், காமஞ்சான்ற ஞானப் பனுவல் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

இத்தமிழ்ச் சான்றோர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும் அறக்கட்டளைச்சொற்பொழிவுகள்நிகழ்த்தியுள்ளார். அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று பல தொடர் சொற்பொழிவுகள் செய்து, புகழ் மலிந்த இக்காலச் சேக்கிழாரானார்.

இவர் 11.7.1947ல் சரசுவதி எனும் தவச்செல்வியை மணந்து இல்லறம் மேற்கொண்டார். கணவனின் திருவினை அறிந்த இத் திருச்செல்வி இல்லறமாம் நல்லறப் பண்பிற்குப் புகழ் சேர்க்க ஓர் ஆண்மகனை ஈன்றார். இராமலிங்கம் எனும் பெயரிட்டுப் போற்றி வளர்த்தனர். அந்நன் மகன் பண்பு நெறியிலே சிறந்து, கல்வியில் சீரும் சிறப்பும் எய்தி எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில், முதலிய பட்டங்கள் பெற்றுள்ளார். இக்குடும்பம் தமிழ் நெறியாகிய வள்ளுவர் வகுத்த இல்லற நெறிக்குப் புகழ் சேர்த்து விளங்கியது.

இங்ஙனம் இல்லற நெறியிலும் கல்வி நெறியிலும் புகழ் மணம் பரப்பி விளங்கிய சங்கத் தமிழ் ஞாயிறு தமிழகத்தை இருளில் மூழ்கடித்து 7.4.1985ல் இறைவன் திருவடிகளில் இணைந்துவிட்டார்.

இறுதி மூச்சு உள்ள வரையிலும் இலக்கியப்பணி புரிந்துவந்த முருகவேள் என்னும் செம்மலைத் தமிழகம் ஒருநாளும் மறக்காது.

அண்ணா மாவட்டத்தில்

டி. பி. எஸ். சுந்தரநாதன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
அண்ணா மாவட்டம்

நிர்வாக வசதிகளின் பொருட்டுப் புதிய மாவட்டங்களைத் தமிழக அரசு உருவாக்கி வருகிறது. அந்த அடிப்படையில் மதுரை மாவட்டம் பிரிக்கப்பட்டு -1985 செப்டம்பர் 15ல் அண்ணா மாவட்டம் உருவாக்கப்பட்டது. புதிய மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு அரசு முனைப்பாகச் செயலாற்றி வருகிறது.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக உள்ள அண்ணா மாவட்டத்தில் புதிய தொழில்களைத் துவங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், அப்பகுதிகளுக்கேற்பத் தொழில்களைத் தேர்ந்தெடுத்து, வரும் மூன்றாண்டுகளில் தொழில் கூடங்களை அமைப்பதற்கான 3-ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை முடிவாக்குவது பற்றி மதுரை மாவட்டத்தொழில் மையப் பொது மேலாளர், அண்ணா மாவட்டத் தொழில் துறை துணை இயக்குநர், திண்டுக்கல் கோட்ட வளர்ச்சி அலுவலர், பழனிக் கோட்ட வளர்ச்சி அலுவலர் மற்றும் தொழில்துறை, வளர்ச்சித் துறை அதிகாரிகளுடன் அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து பேசியபின் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அண்ணா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் கூடங்கள் 675 இயங்கி வருகின்றன. விவசாயம் சார்ந்த தொழில்கள், ரசாயனத் தொழில்கள், பொறியியல் தொழில்கள் போன்ற பல்வேறு திறப்பட்ட தொழில் கூடங்கள் இயங்கி வருகின்றன. தற்போது முடிவாக்கப்பட்ட மூன்றாண்டுத் தொழில் திட்டத்தின்படி 85-86, 86-87, 87-88 ஆகிய மூன்றாண்டுகளில் 726 தொழில் கூடங்கள், ரூபாய் 1508.17 இலட்சம் முதலீட்டில் உருவாக்கப்பெற்று 7,353 பேர் கூடுதல் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

கீழ்வரும் முறையில் ஆண்டுத் திட்டம் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அண்ணா மாவட்டம் திண்டுக்கல் கோட்டத்தில் 824 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவல்ல ரூ. 127.82 இலட்சம் முதலீட்டுடன் 107 தொழில் கூடங்கள் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும். இதே போன்று பழனிக் கோட்டத்தில் 426 பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்று ரூ. 64.51 இலட்சம் மூலதனத்தில் 66 தொழில் கூடங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கொடைக்கானல் கோட்டத்தில் ரூ. 7.35 இலட்சம் மூலதனத்தில் 50 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவல்ல 7 தொழிற் கூடங்கள் உருவாக்கப்படும்.

அடுத்த 86-87 ஆம் ஆண்டில் திண்டுக்கல் கோட்டத்தில் 1630

பெருக்கு வாய்ப்புத்தரும்வகையில் ரூ.378.39 இலட்சம்மூலதனத்தில் 135 தொழில் கூடங்களும், பழனிக் கோட்டத்தில் 907 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.160.07 இலட்சம் மூலதனத்தில் 103 தொழில் கூடங்களும், கொடைக்கானல் கோட்டத்தில் 133 நபர்கள் பயனடைய ரூ. 16.75 இலட்சம் முதலீட்டில் 15 தொழில் கூடங்களும் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



87-88ஆம் ஆண்டில் திண்டுக்கல் கோட்டத்தில் 156 தொழில் கூடங்கள் ரூ. 482.47 இலட்சம் மூலதனத்தில் 2080 பேர்கள் பயனடையும் வகையிலும், பழனிக் கோட்டத்தில் 120 தொழில் கூடங்கள் ரூ. 253.64 இலட்சம் முதலீட்டோடு 1177 நபர்கள் பயன்பெறும் வகையிலும், கொடைக்கானல் கோட்டத்தில் 17 தொழில் கூடங்கள் ரூ.17.17 இலட்சம் மூலதனத்தில் 126 பேர்கள் பயனடையும் வகையிலும் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுதொழில்கள் மட்டுமின்றி அண்ணா மாவட்டத்தில் கிராமக் கைவினைஞர்கள் மற்றும் குடிசைத் தொழில்களுக்கான மூன்றாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி இம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் 940 தொழில்கள் ரூ. 20.20 இலட்சம் மூலதனத்துடன் 2160 பேர்கள் கூடுதல் வேலைவாய்ப்புப் பெறும் வகையில் முடிவாக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற ஆண்டுத் திட்டம் செயல்படும்போது . மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் கூடங்கள் அமைக்கப்படுவதுடன் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும், பொருள் உற்பத்தியும், பொருளாதார மேன்மையும் அடைவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இதனைப் பயன்படுத்தி மாவட்டத்திலுள்ள தொழில் ஆர்வமுள்ள இளைஞர்கள் புதிய தொழில்களைத் துவக்க முன்வர வேண்டும்.

புதிதாகத் துவங்கப்பட்ட அண்ணா மாவட்டத்தில் ஆண்டுச் சராசரி மழை அளவு 850 மி.மீட்டர் ஆகும். சென்ற ஆண்டில் பருவ மழை குறைவின் காரணமாக, குறைந்த மழையே இம் மாவட்டத்தில் கிடைத்துள்ளது.

திண்டுக்கல் கோட்டத்தில் 750 மி.மீட்டரும் நிலக்கோட்டைக் கோட்டத்தில் 650 மி.மீட்டரும், பழனிக் கோட்டத்தில் 700 மி. மீட்டரும் மழை பெய்துள்ளது. வேடசந்தூர், வடமதுரைப் பகுதியில் இதற்கும் குறைவாகவே பெய்துள்ளது. பொதுவாக இம் மாவட்டத்தில் ஆண்டுச் சராசரி மழையளவிற்கும் குறைவாகவே பெய்துள்ளது. குறைந்த மழையினால் பாதிக்கப்பட்ட வேளாண்மைப் பணிகளை ஈடுகட்ட, வரும் கோடைக் காலத்தில் சிலவகைப் பயிர்களைப் பயிர் செய்ய் வேளாண்மைத்துறை பரிந்துரை செய்துள்ளது.

அதன்படி, கோடைப் பருவத்தில் இறவைப் பயிராகச் சாகுபடி செய்யப்படும் சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி ஆகியவைகளின் மகசூலை இன்னும் சற்று அதிகப்படுத்த, கோடைகாலச் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இறவைச் சோளத்தில் 3750 கிலோவும், இறவைக் கம்புப் பயிரில் 2500 கிலோவும், ராகிப் பயிரில் 3700 கிலோவும், மக்காச்சோளத்தில் 4000 கிலோவும், பயறு வகைகளில் 1500 கிலோவும், பருத்தியில் 30 குவிண்டாலும் எக்டேருக்கு மகசூல் அடையக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கோடைப் பருவத்தில், 12,000 எக்டேரில் சிறு தானியப் பயிர்களும், 6000 எக்டேரில் பயறு வகைப் பயிர்களும், 2000 எக்டேரில் பருத்தியும் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்கு முனைப்பு இயக்கம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிந்தை கவரும் விந்தைப் பூங்கா!

பஞ்சாபைச் சேர்ந்த பிரபல கட்டடக் கலைஞர் நேக் சந்திற்கு வாஷிங்டன் நகர கட்டடக் கலைச் சங்கத்தின் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

வாஷிங்டன்னிலுள்ள சிறார் கலைக்கூடத்தில் குழந்தைகளுக்கான ''விந்தைப் பூங்கா'' ஒன்றை உருவாக்கியதற்காக அவர் இந்த விருதைப் பெறுகிறார். அமெரிக்கர் அல்லாத ஒருவர் இந்த விருதைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

உடைந்த ஓடுகள், கண்ணாடிகள், பீங்கான் பாத்திரங்கள், வளையல் துண்டுகள் முதலிய வீணான பொருள்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட பொம்மைகள் கலைப் பொருட்கள் இந்த விந்தை உலகில் இடம் பெற்றுள்ளன. சண்டீகரில் 12 ஏக்கர் நிலப் பரப்பில் நேக் சந்த் அமைத்துள்ள விந்தைத் தோட்டத்தைப் போலவே, இந்தக் குழந்தைகளின் விந்தைப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது. வாஷிங்டனில் 4 மாதத்திற்கு மேல் தங்கி இருந்து அவர் இந்தத் தோட்டத்தை உருவாக்கினார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

மாணவர் பக்கம்:

பொது அறிவுத் துணுக்குகள்

பழங்களைத் தனியே உண்பதைவிட உணவுடன் கலந்து உண்பது நலம். உணவுடன் கலந்து உண்பதைவிட பாலுடன் கலந்து உண்பது மிகவும் நல்லது. நன்கு கனிந்த மாம்பழத்தை உண்பது மிகவும் நல்லது. நன்கு கனிந்த மாம்பழத்தை உண்ணும் போது தவறாமல் கூடவே பால் அருந்தவேண்டும்.

● ஆப்பிள் பழத்தைச் சாப்பிடும் போது, பழத்தை நறுக்கிவிட்டு அப்படியே தோலுடன் சாப்பிட வேண்டும். கொய்யாப் பழத்தையும் தோல் சீவாமல் விதையுடன் உண்ண வேண்டும். மாதுளைப் பழத்தைச் சாப்பிடும்போது அதனுள்ளிருக்கும் மணிகளில் அமைந்த கொட்டைகளை நன்றாக மென்று உண்ணவேண்டும்.

● பலவகைப் பழங்களையோ அல்லது ஒன்றன்பின் ஒன்றாகப் பழங்களைப் பலவிதமாகவோ உண்பது சரியல்ல. அவற்றை ஒரே நேரத்தில் சாப்பிடக்கூடாது. காலையில் ஒருவகைப் பழத்தையும் மாலையில் இன்னொருவகைப் பழத்தையும், இரவில் வேறொரு வகைப்பழத்தையும் சாப்பிடலாம். இல்லாவிட்டால் ஒருவகைப் பழத்தின் குணமும் சத்தும் இன்னொரு வகைப் பழத்தின் குணத்தையும் சத்தையும் பாதிக்கும்.

● பழத்தின் முழுப்பயனையும் அடையவேண்டும் என்றால் வெறும் வயிற்றில் உண்ணவேண்டும். அதிகாலையிலும், பகல் உணவுக்குப் பின்னர் சுமார் 4 மணி அளவிலும் சாப்பிடுவது நல்லது.

● சிலர் பழங்களைச் சாறாகப் பருகுவார்கள். இப்படி அருந்தும் போது சாற்றைப் பிழிந்து 5 நிமிடங்களுக்குள் பருகிவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பழச்சாறு கெட்டுப்போய்விடக் கூடும்.

தொகுப்பு :
ஆர். எஸ். சுப்பிரமணியன்

ஆதாரம்: திரு சம்பந்தம் எழுதிய 'பொது அறிவுக் களஞ்சியம்' என்னும் நூல்.



நல்வழியில் வாழுவோம்!

எறும்பு பெற்ற சக்தியை
எளிதில் பெற்று வாழுவோம்!
குறும்புத் தன்மை விட்டுமே
கூடி மகிழ்ந்து ஆடுவோம்!

கரும்பு போன்ற இனிமையில்
கன்னித் தமிழைப் பேசுவோம்!
அரும்புப் பருவம் தன்னிலும்
அறிவு மணத்தைக் காணுவோம்!

சொல்லில் நல்ல சொற்களைத்
தேர்ந்து நாளும் கூறுவோம்!
அல்லல் களைந்து நாட்டிலே
அன்பு கொண்டு வாழுவோம்!

செல்வச் செருக்கும் இன்றியே
சேர்ந்து வாழப் பழகுவோம்!
நல்ல வழிகள் யாவிலும்
நாட்டங் கொண்டு வாழுவோம்!

—புலவர் வெற்றியழகன்

உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை. நீங்கள் தன்னலத்தைத் துறந்தவர்களா? அப்படியாயின் உங்களை எதிர்க்கும் சக்தி ஒன்றுமில்லை.

—விவேகானந்தர்

டார்ஜிலிங்

நெருக்கமான மரங்களைக் கொண்ட பசுமையான மலைகளைத் தன்னைச் சுற்றிலும் கொண்டதாக உலகின் கூரையில் இருக்கும் டார்ஜிலிங் திகழ்கின்றது. கடல் மட்டத்திற்கு 2134 மீட்டர் உயரத்தில் இருக்கும் இந்த மலைத்தலம், மேற்கு வங்கத்தின் வடபகுதியில் கல்கத்தாவிலிருந்து 412 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

'அறிய இயலாத பொருளின் இடம்' என்ற பொருள்தரும் 'டோர்ஜோலிங்' என்ற பெயர் மருவி டார்ஜிலிங் என்று ஆகியது. புத்த துறவிகள் மடமாகத் திகழ்ந்த இந்த மலையைச் சுற்றி, டார்ஜிலிங் நகரம் அமையப் பெற்றுள்ளது.

அழகிய சிறிய ரயில் ஒன்றின் மூலம் டார்ஜிலிங்கை அடைவது சுலபம். 1978-முதல் இயங்கி வரும் இந்த ரயில்பாதை, உலகிலேயே மிகவும் அதிக உயரத்தில் உள்ள ஒன்றாகும். பசுமையான வனங்கள், பைன் காடுகள், நெற்பயிர்கள், தேயிலைத் தோட்டங்கள், பாதையோரக் கடைகள் மற்றும் உணவு விடுதிகளினூடே இந்த நீராவி ரயில் செல்கின்றது. அல்லது கல்கத்தாவிலிருந்து பக்டோக்ராவுக்கு இந்தியன் ஏர் லைன்சின் ஜெட் விமானத்தில் சென்று, அங்கிருந்து கார்மூலம் 50 நிமிடங்களில் டார்ஜிலிங்கை அடைய இயலும்.

மலை ஏறுதல் மற்றும் இயற்கையைத் தரிசித்தல் போன்ற வற்றுக்குப் பல வாய்ப்புக்கள் உள்ளன. மாலிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவுக்கு நாட்டின் முதல் கயிறு போக்கு வரத்து உள்ளது. 8 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த கயிறு டார்ஜிலிங்கையும். உல்லாச மற்றும் மீன்பிடித்தலுக்குப் பெயர்பெற்ற அழகிய சிங்லா பஜாரையும் இணைக்கின்றது. படகுவிடுதல் மற்றும் மீன்பிடித்தல் போன்ற பொழுதுபோக்குகளில் ஈடுபட்டால், நாள் போவதே தெரியாது.

மாலிலிருந்து 8 கிலோமீட்டர் தொலைவிலுள்ள லெபாங் பந்தய மைதானம் உள்ளது. இது உலகிலேயே மிகச் சிறியதும், அதிக உயரத்திலிருப்பதும் ஆகும்.

டார்ஜிலிங்கிலுள்ள தைர்தாம் கோவில் அதன் அழகுக்கும் கலைத்தன்மைக்கும் பெயர் பெற்றது. இந்தியாவிலேயே இது போன்ற இடம் வேறெங்கும் கிடையாது. நேபாளத்தில் காட்மாண்டுவிலுள்ள பசுபதிநாதர் ஆலய பாணியில் இக்கோயில் 1930-ல் கட்டப்பட்டது.

எழுபதுக்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டங்களைக் கொண்ட மகிழ்ச்சி பள்ளத்தாக்குத் தேயிலைத் தோட்டத்தில், தோட்டங்களிலிருந்து சோதனைச்சாலை வரை தேயிலைத் தயாரிப்பைப் பார்வையிடலாம். டார்ஜிலிங் தேயிலை அதன் நறுமணத்திற்கு உலகமெங்கும் புகழ்பெற்றது.

டார்ஜிலிங்கிலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள புலி மலை உள்ளது. இம்மலை கடல் மட்டத்திலிருந்து 2590 மீட்டர் உயரத்திலுள்ளது. இங்கு காஞ்சனகங்கா மற்றும் எவரெஸ்ட் மலையுச்சிகளில் சூரியோதயத்தைக் கண்டு களிக்கலாம். டார்ஜிலிங்கிலிருந்து 58 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சண்டாகிபு நம்மைப் பரவசப்படுத்தும். டார்ஜிலிங் மாவட்டத்திலேயே மிகவும் அதிக உயரத்தில் அதாவது 3657 மீட்டர் உயரத்திலுள்ள இப்பகுதி பசுமையான பிரதேசங்களையும், இயற்கையெழில் பூத்துக்குலுங்கும் பல வண்ண மலர்களையும் கொண்டதாகும்.

டார்ஜிலிங் தாவரஇயல் நிபுணர்களின் சொர்க்கமாகும். 4000 விதமான பூச்செடிகள், 3000 வகையான படர் கொடிகள், பூக்காத எண்ணற்ற விதமான செடிகள் ஆகியவை டார்ஜிலிங்கில் உள்ளன.

குரங்குகள், காட்டுப்பூனை, புலி, சிறுத்தைப்புலி, புனுகுப் பூனை, குள்ளநரி, காட்டு நாய், கரடி, குரைக்கும் மான், சாம்பர் மான், செங்கரடிப்பூனை மற்றும் தங்கப் பூனைகள் டார்ஜிலிங்கில் உறைகின்றன. நீலப்பறவைகள், சூரியப்பறவைகள் போன்ற 600 வகையான பறவைகளும் இங்கே வாழ்கின்றன.

பாலைவனத்தில் நடந்தால்....

"மனிதனும் பாலைவனமும்'' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டு விளையாட்டு, மற்றும் விஞ்ஞான சோனைத் திட்டத்தில் கலந்து கொண்ட சோவியத் நிபுணர்கள், தொல்லைகளைப் பொறுத்துக் கொள்வதில் புதிய சாதனை புரிந்து இருக்கின்றனர்.

260 கிலோ மீட்டர் தூரம் உள்ள பாலைவனத்தை அவர்கள் 9 நாட்களில் கடந்தனர். இந்தப் பாலைவனம் சிறியதென்றாலும் அபாயகரமானது, 30-40 மீட்டர் உயர மணல் மேடுகள் இந்தப் பாலைவனத்தில் சர்வ சாதாரணம். சில இடங்களில் அவை 30 கிலோ மீட்டர் வரை நீளும். அவற்றிற்கு இடையே உள்ள பாதைகள் மிகவும் நீளமானவையும், அபாயகரமானவையும் ஆகும்.

வெயிலில் பழுக்கக் காய்ந்த மணல் வழியே செல்பவர்களின் பயணம், பலத்த காற்றினாலும், புதை மணலினாலும், உப்புப் பற்றாக் குறையினால் ஏற்படும் உடல் வறட்சியினாலும் நிதானப்பட்டது. கடும் வெப்பத்தினால் எலெக்ட்ரானிக் கைக்கடியாரங்கள்கூட வேலை செய்யவில்லை. ஆனால் இந்தத் திட்டத்தில் பங்கு கொண்டவர்கள் எல்லாத் தொல்லைகளையும் சமாளித்தனர்.

தங்கள் ஆராய்ச்சி வேலையை ஒரு கணம்கூட அவர்கள் நிறுத்தவில்லை. இந்த ஆராய்ச்சித் திட்டம் கஷ்டங்களை எதிர்த்து நின்று மனிதன் உயிர் வாழும் ஆற்றலுக்கான சோதனையாகும். இந்தத் திட்டத்தில் பங்கு கொண்ட 13 நபருக்கும், ஓர் ஆண்டு கடுமையான பயிற்சி அளிக்கப்பட்டது. பொறியாளர்கள், மருத்துவர்கள், மின்விசைப் பொறியாளர்கள், ஆசிரியர்கள் முதலியோர் இந்தக் குழுவில் இருந்தனர்.

கடலோர உயிரின வளர்ப்பில் முன்னேற்றம்

பி. கிருஷ்ணன்,
மீன்துறை துணை இயக்குநர்
(கடலுயிரின வளர்ப்பு)
சென்னை.

இந்தியாவின் கடலோரப் பகுதிகள் முழுதும் இறால் பிடிப்பு நடைபெற்றாலும், 1982ஆம் ஆண்டின் உலக இறால் பிடிப்பான 1.75 மில்லியன் டன்களுள் 1,70,000 டன்கள் இந்தியாவில் பிடிபட்டவையாகும். இந்தியா மட்டுமே 12 சதவீத அளவுக்கு உலகின் பல பாகங்கட்கு இறால் ஏற்றுமதி செய்கிறது. 1982-ஆம் ஆண்டின் மொத்தக் கடல் மீன் பிடிப்பில் இறால் பிடிப்புமட்டுமே 11.4 சதவீதம் ஆகும். நாட்டின் வருடாந்திர இறால் பிடிப்பில் மேற்குக் கடலோரம் தருவது 82 சதவீதத்திற்கு மேற்பட்டதாகும். மேற்குக் கடலோரம் பெரும் உற்பத்தி தருவதாக இருப்பினும் கிழக்குக் கடலோரத்தில் பிடிக்கப்படும் இறால்கள் அளவில் பெரியவை, மீன்பிடிப்பு பெரிய டிராலர்கள் மூலமாகவுமே நடைபெறுகின்றது. (ராவ், ஜே. என். 1984). 1981-1982-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மட்டுமே இறால் பிடிப்பு 15,582 டன்களாகும். இவ்வுற்பத்தி மொத்த இறால் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்காகும் (கடல் உற்பத்தி ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம் 1983).

நீர் உயிரின வளர்ப்பிற்கு வாய்ப்புகள்

தமிழ்நாட்டில் உவர் நீர்வளப் பரப்பு 56,000 எக்டேர் என்று அளவிடப்பட்டுள்ளது. இதில் பண்ணைக் கட்டுமானத்திற்கு உடனடியாகப் பயன்பட உள்ள பரப்பு 15,000 எக்டேர் ஆகும். தமிழ்நாட்டில் 52 கழிமுகங்களும், பரந்த உப்பங்கழிகளும், குடாக்களும், சதுப்பு நிலக்காடுகளும், ஒரு பெரிய உப்பு நீர் ஏரியும் உள்ளன (1980-ஆம் ஆண்டு வரை).

தமிழ்நாட்டில் கிடைக்கப் பெறும் இறால் வகைகளில் பினேயஸ் மானோடான் (கருப்பு இறால்) பினேயஸ் இன்டிகஸ் (வெள்ளை இறால்) ஆகிய இரு இனங்கள் மட்டுமே பண்ணையில் வளர்க்க மிகத் தகுதியானவை. இவ்விரு இனங்களும் மீன்வளத்தின் ஒரு பகுதியாக மட்டுமன்றி இவ்வினங்களின் குஞ்சுகள் கழிமுகங்களிலும், உப்பங்கழிகளிலும் பெருமளவில் கிடைக்கப் பெறுகின்றன. வெள்ளை இறால் 60 சதவீதத்திற்கு மேல் கிடைக்கப் பெறும் பெரும்பான்மை இனமாகும். இயற்கையாகக் கிடைக்கப் பெறும் மீனினங்களான பால் கெண்டையும் (சானோஸ் சானோஸ்) மடலைகளும் பண்ணையில் வளர்க்க ஏற்றவையாகும். வெள்ளை இறால் குஞ்சுகள் ஆகஸ்டு மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் கிடைக்கின்றன. கருப்பு இறால் குஞ்சுகள் மார்ச்சு மாதம் துவங்கி ஜூன் மாதம் வரையிலும் செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் கூடக் கிடைக்கின்றன. பால் கெண்டையின் குஞ்சுகள் ஏப்ரல் மாதம் முதல் மே மாதம்வரை கிடைக்கின்றன. இளம் குஞ்சுகள் கடலுக்குத் திரும்பச் சென்று முழு வளர்ச்சி அடைந்து முடிப்பதற்கும் மீன் வளமாவதற்கு முன்பு, பரந்த உப்பங்கழிகளும், சதுப்பு நிலக் காடுகளும் இவ்விறால்கள் மற்றும் மீன் குஞ்சுகள் வளர்ச்சிக்குச் சிறந்த நாற்றங்கால்களாக அமைந்துள்ளன.

இறால் வளர்ப்பு முறைகள்

மாநில அரசு தமிழ்நாட்டில் பல்வேறு நிலையங்களில் கையாளும் இறால் வளர்ப்பு முறைகளாவன:

நீர் வற்றச் செய்ய இயலாத குளங்களில் இறால் வளர்ப்பு

இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றம், அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தில் சென்னைக் கேந்திரத்தை உவர் நீர்ப் பண்ணைக் கேந்திரமாகத் தேர்ந்தெடுத்தது. 1974-ல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் பத்து ஆண்டுகளில்

செயல்பட்டது. இவ்வாராய்ச்சிப் பண்ணையின் மொத்த நீர்ப் பரப்பு 3.8 எக்டேர். இது இரண்டு வளர்ப்புக் குளங்களையும் எட்டு நாற்றங்கால்களையும் கொண்டது. நாற்றங்கால்கள் மற்றும் வளர்ப்புக் குளங்களுக்குத் தகுந்த குள மேலாண்மை முறைகள் உருவாக்கப்பட்டன. சில முக்கிய சாதனைகளாவன:

கருப்பு இறால்கள் ஓரின வளர்ப்பில் எக்டேருக்கு 20,000 வீதம் இருப்பு செய்ததில் 1.14 எக்டேர் பரப்பளவுள்ள குளத்தில் எண்பது நாட்களில் 514.700 கிலோ உற்பத்தி பெறப்பட்டது. வெள்ளை இறால் ஓரின வளர்ப்பில் எக்டேருக்கு 70,000 வீதம் இருப்பு செய்ததில், 1.14 எக்டேர் பரப்பளவுள்ள குளத்தில் 110 நாட்களில் எக்டேருக்கு 682.450 கி.கி. உற்பத்தி செய்

உழுது பின்பு சிறிது சிறிதாய் நீர் ஏற்றம் செய்யவும் கூடிய உவர் நீர் மாதிரி இறால் வளர்ப்புப் பண்ணைகள் மீன்துறையினரால் தமிழ்நாட்டிலுள்ள கடலோர எல்லா மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ளன. இம்மாதிரி இறால் பண்ணைகள் 10 இடங்களில் உள்ளன. இப்பண்ணைகள் ஒவ்வொன்றும் முறையே 0.8 எக்டேர் முதற்கொண்டு 1.2 எக்டேர் வரை பரப்பளவு கொண்டவையாகும். ஒவ்வொரு பண்ணைக்கும் ஒரு 7.5 குதிரைச்சக்தி கொண்ட நீரேற்றும் கருவி உண்டு. இப்பண்ணைகளில் இருப்புச் செய்யும் அளவு எக்டேருக்கு 25,000 முதல் 50,000 வரை ஆகும். இக்குளங்களினின்று அதிக பட்சம் எக்டேருக்கு ஒரு அறுவடையில் 450 கிலோ வரை கிடைத்துள்ளது.

யும் தருவது என்று காணப்பட்டது. அதிக அளவில் 11.25 எண்கள்/ச.மீ. இருப்பு அளவில் 100 தினங்களில் கருப்பு இறால் 721 கி./ச.மீ./அறுவடையையும் 20 சிறிய இறால்கள்/ச.மீ. வெள்ளை இறால் இருப்பு அளவில் அதிக அளவில் 206.7கிராம்/ச.மீ./அறுவடையும் உற்பத்தி செய்யப்பட்டன.

அடைப்புகளில் இறால் வளர்ப்பு

மீன் துறையினால் 1978-ல் சிறிய அளவில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கிள்ளை உப்பங்கழியில் ஈச்சங்குச்சி, சவுக்குக் கொம்புகள் மற்றும் மூங்கில் குச்சுகளைக் கொண்டு அடைப்பு வளர்ப்பு நடத்தப்பட்டது. பின்பு அடைப்பு வளர்ப்புத் திட்டம்



யப்பட்டது. பல இன வளர்ப்பில் எக்டேருக்கு 37,000 இருப்பு செய்ததில் வெள்ளை இறால் இரண்டு அறுவடைகளும், எக்டேருக்கு 6,000 இருப்புச் செய்ததில் பால்கெண்டை (சானோஸ் சானோஸ்) ஒரு அறுவடையும் முறையே 1111 கிலோ இறாலும் 1085 கிலோ சானோசும் 150 நாட்கள் வளர்ப்பில் கிடைத்தன.

நீரை வற்றச் செய்யக் கூடிய குளங்களில் இறால் வளர்ப்பு

நீர் வேண்டும் போது நீர் நிரப்பும் கருவி (நீரேற்றி) மூலம் நீர் நிரப்பி, இறால் வளர்ப்புச் செய்யவும் அதனைத் தானாக வடியக்கூடிய முறையில் முழுவதும் வடித்து அடுத்த அறுவடை செய்யும்படி காய வைத்தும்,

கூண்டுகளில் இறால் வளர்ப்பு

எண்ணூர் மற்றும் வாணியஞ்சாவடி ஆகிய இடங்களில் கூண்டுகளில் இறால் வளர்ப்பு நடைபெறுகிறது. இதற்கு முன்பே கோவளம் உப்பங்கழியிலுள்ள முட்டுக்காடு குடாவில் பல பரிசோதனைகள் நடைபெற்றன. இறால் வளர்ப்பிற்கு 10 ச. மீ. 40, ச.மீ., 50 ச.மீ., 60 ச.மீ. அளவுள்ள வெலான் கூண்டுகள் உபயோகிக்கப்பட்டன. நீரின் அடிப்பாகமான மண்ணைத் தொடாத அளவில் நிலையான கூண்டுகளிலும், நீரில் மிதக்கும் கூண்டுகளிலும் பரிசோதனைகள் நடத்தி, மிதக்கும் கூண்டுகள் தான் மிக சிறந்ததெனவும் அதிக வளர்ச்சியும் அதிக இறப்பின்மை

1982-ஆம் ஆண்டு கிள்ளை உப்பங்கழியில் எஃப். ஏ. ஓ/பி. ஓ. பி.பி. உதவியில் ஆரம்பிக்கப்பட்டது. முடிச்சு இல்லாத நைலான் வலை 10 மி.மீ. இழுபட்டு உறுதி செய்யப்பட்ட ஹைடென்ஸிடி பாலி எதிலீன் கண்ணும், 14 மி.மீ. கண்ணும் 36 கண் அளவு ஆழம் (உயரம்) கொண்டதும், ஹைடென்ஸிடி கொண்டு அடைப்புகள் சதுரம் மற்றும் நீண்ட சதுர வடிவில் உருவாக்கப்பட்டன. கணித ரீதியில் உருவாக்கப்பட்ட உற்பத்தியானது ஒரே ஒரு அறுவடைக்கு 500 கி. கி/எக்டேரும், வருடத்திற்கு மூன்று சுழற்சி உற்பத்தியில் 1,500 கி.கி./எக்டேரும் கிடைத்தன. இவ்வுற்பத்தி எக்டேருக்கு 45,000 இருப்பு

வீதத்திலும், உடல் எடையில் 5 சதவீதம் முதல் 10 சதவீதம் கூடுதல் உணவு வளர்ப்புக் காலத்தில் அளித்ததனாலும் கிடைத்த சாதனையாகும்.

பிரச்னைகளும் ஆலோசனைகளும்

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பான்மையான ஆறுகள்/பருவ மழையைச் சார்ந்த பருவ கால ஆறுகள் ஆனதால் முகத்துவாரத் திறப்பு ஆறுகளின் நீரோட்டத்தையே சார்ந்துள்ளது. சோழ மண்டலக்கரையிலும் மன்னார் வளைகுடாவிலும் கழிமுகங்கள் கடலுடன் ஓராண்டில் நான்கு முதல் ஆறு மாதங்களுக்குமட்டும் தொடர்பு உடையவை. அவ்வமயம் பண்ணை வளர்ப்பு நடைபெற இயலும். முகத்துவாரம் அடைபடும்போது உவர்த்தன்மை உச்ச வரம்படைந்த நிலை இருப்பதால், இவ்வுயர்ந்த உப்புத்தன்மையைக் குறைக்க, பெருமளவில் பூமிக்கடியிலுள்ள நல்ல தண்ணீரைத்தான் சார்ந்திருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் கடல் நீர்மட்ட உயர்வு சராசரியாக 0.7 மீட்டரும் 1 மீட்டருக்கு உட்பட்டும் உள்ளது. கடல்மட்ட உயர்வையே முற்றிலும் சார்ந்துள்ள குளங்கள் கட்ட இயலாது. கடல் நீர்மட்ட உயர்வையே உபயோகிக்கும் குளங்கள் ஆண்டு முழுவதும் 'வற்றச் செய்ய இயலாதவையும், நீர் கொண்டு வாழும் மற்ற உயிரினங்களை உண்ணும் இனங்கள், போட்டியிடும் இனங்கள் நீக்கம் செய்வது மற்றும் குளத்தைத் தயார் செய்யும் முறைகளிலும் தேவையான பராமரிப்புத் திட்டங்கள்தேவைப்படுவனவுமாகும்.

இறால்/மீன் குஞ்சுகள் கிடைக்கப் பெறுவது முன்கூட்டி அறிய இயலாததும், பருவங்களில் கிடைப்பதுமாகும். மேலும் பெரும் பண்ணைகள் மீன்வளத்தைப் பாதிக்குமாகையால் இயற்கை வளத்தையே சார்ந்திருக்க இயலாது. இதை அரசு உணர்ந்தே இறால் உற்பத்தி செய்யும் முன்னோடித் திட்ட நிலையம் சாந்தோமில் கடல் உற்பத்தி ஏற்றுமதி அபிவிருத்தி நிலையம் 50 சதம் உதவியுடன் இயங்கி வருகிறது. மரபுக்கு மாறுபட்ட உணவாகிய கோழிமுட்டையின் மஞ்சட்கருவும் அஸிடஸ் இனக் கரைசலும் இறால் குஞ்சு உற்பத்திக்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. இதுவரை ஆராய்ச்சி அளவில் அதிக அளவில் உயிர் பிழைப்பு 20 சதவீதம் சாதிக்கப்பட்டுள்ளது. இத்துடன் கூட,

இறால் இனவிருத்திக்காகத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள நீலங்கரையில் ஒரு இறால் உற்பத்தி நிலையம் ஏற்படுத்த முன்மொழி தந்துள்ளது. இந்திய அரசாங்கத்திடம் 50 சதவீதம் பண உதவியும் முன்மொழியப்பட்ட இறால் உற்பத்தி நிலையத்தின் உற்பத்தித் திறன் துவக்கத்தில் 16 இலட்சம் ஆகும் (20நாட்கள் உள்ள குஞ்சு).

கடலோரத்தில் நீரின் உச்ச எல்லையிலிருந்து 500 மீட்டர் வரை கட்டடம் கட்டத் தடை இருப்பது இறால் உற்பத்தி நிலையங்களின் முன்னேற்றத்தை முழுவதும் தடுக்கிறது. மீன்துறை இறால் உற்பத்தி நிலையங்கள் அமைக்கத் தகுதி வாய்ந்த இடங்களைத் தெரிந்தெடுத்தலும், இறால் குஞ்சு உற்பத்தி செய்யும் நிலையங்கள் அமைக்க அனுமதி தரும்படியாக அரசின் கோட்பாடு திருத்தம் பெறுவதும் அவசியம்.

அரசின் கோட்பாடு என்னவெனில் உவர்நீர்ப் பண்ணைக்கு ஏற்றநிலம் அரசு முகமை அல்லது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களால் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். அதனால் இத்தொழிலில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள தனித் தொழிலாளர்கள் பண்ணை அமைக்கத் தகுந்த இடங்கள் கொடுப்பதில்லை. இதனால் மொத்தப் பொறுப்பும் அரசு நிலையங்களிடமே உள்ளது. இக்கோட்பாடு திருத்தம் செய்யப்பட்டு பண்ணைக்கேற்ற நிலங்கள் தனித் தொழிலாளர்கட்கும் கொடுக்கப்படலாம். இத்தொழில் ஒரு முதலீடு முனைப்பிலான திட்டமும், மீனவர் முதலீடு செய்ய இயலாததுமே காரணமாகக் கொள்ளலாம்.

தற்போது ஈரப்பசை கொண்ட உணவாகப் புண்ணாக்கு, அரிசித் தவிடு, தேவையற்ற கழிவுமீன்கள், இறால் மற்றும் தவளை பதனிடும் தொழிற்சாலையின்கழிவுப் பொருள்கள் இறாலின் மொத்த எடையில் 5 சதவீதம் முதல் 10 சதவீதம் அளவு வரை உணவாக வழங்கப்படுகிறது. இவ்வுணவு முழுமையும் உண்ணப்படாவிடின் மிகுதியான அளவு அரிசித் தவிடு, நீர்மைப்பின் உட்புகுந்து உயிர்ச் சத்தின் சுமையை அதிகமாக்குகிறது. இவ்வுயிர்ச்சத்தினால் விளையும் தூய்மைக்கேடு உயிர் வாழ் சூழ்நிலைக்கு ஊறு பயக்கும். மீன் துறையின் தூத்துக்குடியிலுள்ள தொழில்நுட்ப நிலையம் பல்வேறு உணவுகளைக் கலவை செய்து துண்டு முறுக்கு வடிவில் உருவாக்கி வெவ்வேறு நிலையங்களில் குளங்களில் உணவாக இட்டுப் பரிசோதனை செய்கிறது. இவ்வுணவின் தகுதியை மதிப்பீடு செய்த பின்னர் பெருமளவில் உணவு உற்பத்திச் செய்யும் தேவை சிந்திக்கப்பட்டுச் செயல்பட உள்ளது.

பண்ணை முறை இறால் வளர்ப்பு ஒரு நிலையத்தில் செயல்படக் கூடிய தொழில்நுட்பமாகும். ஆகவே பயன்பட இருக்கும் நிலத்தின் முறையான தன்மைக்கேற்ப வெவ்வேறு அறிவியல் நுணுக்கங்களைக் கையாண்டு, பண்ணை முறையில் இறால் வளர்ப்புச் செய்யலாம். பிற முதன்மையாகக் கவனிக்கப்பட வேண்டிய முன்னேற்ற காரியங்களாவன - கிராஸிலேரியா என்னும் பாசி வளர்ப்பு, ஆளி வளர்ப்பு, பச்சை ஆளி வளர்ப்பு, பச்சை நண்டு வளர்ப்பு முதலியனவாகும். ●





மதுரையில் குழந்தைகள் நலன் காக்க நாடு தழுவிய தடுப்பு ஊசித் திட்டம்

ப. சாமிநாதன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் மதுரை மாவட்டம்.

திருமதி இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 19ஆம் தேதி முதல், இந்திய அரசால் இந்தியா முழுவதும் 30 மாவட்டங்களில் அனைத்துத் தொற்றுநோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தி வரும் 30 மாவட்டங்களில் தமிழ்நாடு மாநிலத்தைப் பொறுத்தவரையில் மதுரை, சேலம் ஆகிய மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன. பிரிக்கப்படாத மதுரை மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட இத்திட்டம், அண்ணா மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளை வழக்கமாகத் தாக்கும் தீவிரமான நோய்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது பின்வரும் முறையில் செயல்படுத்தப்படும்:

அம்மை குத்துதல் மூலம் தடுக்கப்படக்கூடிய 7 நோய்களிலிருந்து தடுப்பு ஏற்பாடு.

கருவுற்றிருக்கும் தாய்மார்கள் அனைவருக்கும் நோய்த்தடுப்பு ஏற்பாடு.

வயிற்றுப் போக்கு நோய்க் குறைப்பு.

நேட்டால் டெட்டனஸ் நோய் தாக்கும் விதத்தை 1000க்கு ஒன்றுக்கும் குறைவாகக் குறைத்தல்.

4 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே 'போலியோ' நோய்த் தடுப்பு வீதத்தை 0.38 சதவிகிதத்திற்கும் குறைவாக்குதல்.

கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்குச் சத்துணவுக் குறைவால் இரத்தசோகை ஏற்படுவதை மாத்திரைகள் மூலம் தடுத்தல்.

6 மாதம் முதல் 5 ஆண்டு வரை உள்ள குழந்தைகளுக்குக் கண்பார்வை இழப்பைத் தடுக்க 'வைட்டமின்-ஏ' மாத்திரைகள் அளித்தல்.

மதுரை மாவட்டத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வரதராஜுலு இ.ஆ.ப., அவர்கள் தலைவராய் இருந்து சிறப்புறச் செயல்பட்டு வருகிறார். மாவட்ட சுகாதார அலுவலரால் நேரடியாகச் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில், கிராமச் சுகாதாரம், மகப்பேறு, குழந்தைகள் நலம், சுகாதாரம், கல்விப் பிரிவுகள், மதுரை மருத்துவக்கல்லூரியில் நோய்த்தடுப்பு மருந்துகள் துறை மற்றும் குழந்தைகள் நோய்த்துறை ஆகியனவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அனைத்துத்தொற்றுநோய்கள் தடுப்புத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்த மருத்துவ அலுவலர்கள், சுகாதார அலுவலர்கள், ஐ.சி.டி.எஸ்.மருத்துவ அலுவலர்கள், ஐ.சி.டி.எஸ் ஆலோசகர்கள், மாநகராட்சிப் பெண் மருத்துவ அலுவலர்கள் ஆகியோருக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் துவக்க விழா அண்மையில் மதுரை ராஜாஜி மருத்துவமனையில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வரதராஜுலு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அவர் தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் 69வது பிறந்தநாளையும், நாடுதழுவிய தடுப்பு ஊசித் திட்டத் துவக்க விழாவையும் நாம் ஏற்பாடு செய்து கொண்டாடுகிறோம். எதிர்காலத் தலைவர்களாம் இன்றைய குழந்தைகளின் நலன் காக்கப்படவேண்டும். 'யுனிசெப்' சாதனங்களையும், மருந்துகளையும் கொண்டு நமது மருத்துவர்கள் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் 45 ஆயிரம் குழந்தைகளுக்கு டிப்தீரியா தடுப்பூசியும்; 32 ஆயிரம் குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பூசியும், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் குழந்தைகளுக்கு அம்மைத் தடுப்பூசியும் போடப்படும். இதற்கான மருந்துகளை 'யுனிசெப்' அளிக்கிறது. தனிமனிதனால் சாதிக்க முடியாததை உலக நாடுகளோடு சேர்த்துச் செயல்படுத்துகிறோம்.

விவசாயத்தில் கூட தெளிவுள்ள நமது விவசாயிகள், உரம், பூச்சி மருந்துகளையெல்லாம் கடைப்பிடித்து நவீனமாகச் செயல்பட்டு வருகிறார்கள். ஆனால் குழந்தைகள் வளர்ப்பில் அறியாமையையே காட்டி வருகிறார்கள். குழந்தைகள் ஆரோக்கியமான குழந்தைகளாக வாழ வேண்டும் என்பதால்தான் ரூ. 180 கோடி செலவில் சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இன்று தொடங்கும் இத்திட்டம் 5 ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின்படி குழந்தைகளுக்கு அடையாளக் கார்டு வழங்கப்படும். அதைக்காட்டினால் காசநோய், தொண்டையடைப்பான், கக்குவான், வில்வாதஜன்னி, இளம்பிள்ளை வாதம், தட்டம்மை, டைபாய்டு முதலிய நோய்களுக்குத் தடுப்பு ஊசி போடப்படும். 5 ஆண்டுகள் தொடர்ந்து செயல்படும் இத்திட்டத்தில் சுமார் 5 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுவர். இத்திட்டம் வெற்றி பெறப் பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.''

இத்திட்டத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ.ஜி. சுப்புராமன் அவர்கள் துவக்கி வைத்தார். விழாவில் கலந்து கொண்டு பேசிய 'யுனிசெப்' அலுவலர் திரு கியாகிசாய் பாங்பாணிச் இந்தியாவுக்கு 'யுனிசெப்' என்றும் ஆதரவு தரும் என்றும் அதனால் மகிழ்ச்சியடைகிறது என்றும் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், குழந்தைகள் நோயற்று நீண்ட ஆயுள் வாழ்வதற்காகவே இத்திட்டம் அமல் செய்யப்படுகிறது. உப்பு-சர்க்கரை கரைத்த நீர் பருகக் கொடுத்து குழந்தைகளை வயிற்றுப்போக்கிலிருந்து காப்பாற்றுதல் போன்ற எளியமுறைகள் தாய்மார்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும்'' எனக் கூறினார்.

மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஜேக்கப் விழாவில் வரவேற்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பொன்.முத்துராமலிங்கம், திரு அ.தெய்வநாயகம், திரு பாரமலை, திரு மாரிமுத்து, திரு சிவகுமார் ஆகியோர் உரையாற்றினார்கள்.

ஒரு குழந்தைக்கு ரூ. 65செலவு வீதத்திலேயே இத்திட்டம் அமல் படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஊசி போடாததால் குழந்தைகளுக்கு வரும் நோய்க்குச் செலவாகும் தொகை அரசுக்கு மிக அதிகமாகும்.

குழந்தைச் செல்வங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க பெற்றோர்கள் இத்திட்டத்தினை நன்கு பயன்படுத்தி, நோயற்ற சமுதாயத்தை உருவாக்கட்டும்.●

சென்ற இதழில்...

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவையாறில் 31.1.86ல் நடைபெற்ற தென்னகப் பண்பாட்டு மையத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களுக்கு வீணை ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கிய காட்சியை சென்ற இதழ் (1.3.1986) அட்டை அலங்கரித்தது.



அ. கி. பரந்தாமனார் மறைவு

தமிழறிஞர் அ. கி. பரந்தாமனார் அவர்கள் சிறிதுகாலம் நோய் வாய்ப்பட்டிருந்து, 25.2.1986 அன்று சென்னையில் மறைவெய்தினார்.

15.7.1902ல் பிறந்த அ.கி.ப. அவர்கள் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். சென்னை தூய பவுல் உயர்நிலைப் பள்ளியில் 21 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகவும், மதுரை தியாகராசர் கல்லூரியில் 17 ஆண்டுகள் பேராசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார். ஓய்வு பெற்ற பின், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தில் தமிழ் வல்லுநராகவும் - தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தக் குழு உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கிறார்; மதுரை நாயக்கர் வரலாறு, நல்லதமிழ் எழுத வேண்டுமா, திருக்குறளும் புதுமைக் கருத்துகளும் போன்ற 14 நூல்களை எழுதியுள்ளார்.

1981ஆம் ஆண்டில் தமிழக அரசின் திரு. வி. க. விருதினை இவர் பெற்றிருக்கிறார்.

தமிழ் வளர்த்த அ.கி.ப. அவர்களின் மறைவுக்கு 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

திருவெண்காடு சுப்ரமணியம் மறைவு

புகழ் பெற்ற நாதசுரக் கலைஞர் திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை அவர்கள் 16.2.86 அன்று தமது 80வது வயதில் மறைவெய்தினார்.

26.4.1906ல் பிறந்த இவர், திருவையாறு, பழனி ஆகிய இடங்களில் உள்ள நாதசுரப் பள்ளிகளில் கௌரவ முதல்வராகப் பணியாற்றியிருக்கிறார்.

இலங்கை, மலேயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று இசை நிகழ்ச்சி நடத்தியிருக்கும் இவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வழங்கிய கலைமாமணி விருது பெற்றவர். டெல்லி சங்கீத நாடக அகாடமியின் விருதும் இவருக்குக் கிடைத்துள்ளது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளது.

இசை உலகில் புகழ்க்கொடி நாட்டிய இவரது மறைவுக்குத் 'தமிழரசு' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

புதிய வண்ண
துணி வகைகளுக்கு
உள்ளம் கொள்ளை கொள்ளும்
வண்ணங்களிலும் டிசைன்களிலும்
சி:.பான், பாலியெஸ்டர், பட்டு
மற்றும் பருத்தி நூல் சேலைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



Black